ஜீன் 20 - ஜீன் 26, 2010 June 20 - June 26, 2010 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



## விழுந்தது முதல் உதை!



## பேச்சில் ஒன்று
## செயலில் வேறொன்று
## மனதில் மற்றொன்று!




# தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை குறைக்க திரைமறைவில் முயற்சி

# தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை குறைக்கத் திரைமறைவில் முயற்சி

நாட்டில் இரண்டாம் தரப்பிரஜைகளாக நடத்தப் பட்டுவரும் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை குறைக்க - பேரம் பேசும் சக்தியாக வருவதைத் தடுக்க - திரைமறைவில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கில், மலையகத்தில், வன்னியில் திட்ட மிட்ட குடியேற்றத்திட்டங்கள் பண்டாரநாயக்காவின் ஆட்சியில் அரங்கேற்றப்பட்டு, தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டன. அந்தப் பகுதியில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர்.

இதன் காரணமாக கிழக்கில் கணிசமான பகுதி சிங்களவர் மயமாகியது. அதே போன்று வன்னி யில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு சிங்கள மயமாக்கப்பட்டது.

மீளக்குடியமர அனுமதித்தாலும், 50 சதவீதமான வர்களுக்கே காணி உரிமை அங்கு இருக்கும். காணி உரிமையாளர்கள் மரணித்தோ அல்லது வெளிநாடு சென்றோ இருப்பதால் காணி உரிமை பெறுவதில் சிக்கல் உருவாகும். ஒரு பெற்றோரின் பெயரில் இருக்கும் உறுதியை அவர்களது பிள்ளைகளின் பெயருக்கு மாற்றுவதில் சிக்கல் ஏற்படலாம்.

நீண்ட காலம் அதாவது முப்பது வருடங்கள் இடம்பெயர்வு காலமாக இருப்பதால், சில குடும்பங்களில் உள்ளவர்களுக்கு காணி எங்கு இருக்கிறது என்பதே தெரியாமல் இருக்கும்.

பல பெற்றோர் தமது காணிகளை, இடம்பெயர்ந்த நேரம் சிறுவயதாக இருந்த தனது பிள்ளைக்கு பின்னர் காட்டக்கூடிய வசதி கிட்டவில்லை. இதன் காரணமாக

நிலையை உணர்ந்து சகலரும் செயற்பட வேண்டும். அப்போதுதான் தமிழ்மக்களுக்கு எதிராக விரிக்கப் படும் சதி வலையில் இருந்து தப்பமுடியும்.

விரைவில் நடத்த உத்தேசித்துள்ள வடக்கு மாகாணசபை மற்றும் உள்ளூராட்சிச் சபை தேர்தலுக்கு முன்னர் கணக்கெடுப்பை நடத்தி முடிக்க முனைப்புக்காட்டப்படுகின்றது.


ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் இக் கணக்கெடுப்பு, வாக்காளர் இடாப்பு மறுசீலனை ஆகியவற்றை நடத்தி முடிக்க அரசுத்தரப்பில் அவசரம் காட்டப்படுகின்றது.

இந்தப் பணிகளின் ஆரம்ப நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன. தேர்தல் அலுவலகங்கள் இந்தப் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர்கள் மூலம் இந்தப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. மக்கள் அக்கறையில்லாமல் இருக்கலாம். இந்த மீள்பதிவு களை உறுதிசெய்து எதிர்காலச் சந்ததிக்கு உதவவேண்டும்.

தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையை உதா சீனம் செய்தது போலன்று, வாக்காளர் இடாப்பு மறுபரிசீலனையில் அக்கறை காட்டவேண்டும்.

இருப்பிடத்தை உறுதி செய்யும் ஆவணமாகவும் இந்த வாக்காளர் இடாப்பு அமைவதால், எதிர்கால மீள்குடியமர்வு, வேலைவாய்ப்பு போன்றவற்றுக் காகத் தங்கள் பதிவுகளை உறுதிசெய்யவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.



திருகோணமலையில் சேருநுவர என்ற தொகுதி உருவாக்கப்பட்டது. அம்பாறையில் திகாமடுல்ல என்ற தொகுதி உருவாக்கப்பட்டது. முல்லைத் தீவில் வெலிஓயா என்ற பிரதேசம் உருவாக் கப்பட்டது.

பண்டாரநாயக்காவின் காலத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட திட்டமிட்ட சிங்கள குடியேற் றங்கள் மூலம் தமிழ் மக்களின் பூர்வீகப் பிரதேசங்கள் எல்லாம் பறிக்கப்பட்டன. அதன் மூலம் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டது.

மீண்டும் இப்போது சிங்களக் குடியேற்றம் துளிர்விட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில், வன்னியில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு சிங் களக் குடியேற்றங்களை முன்னெடுக்க திரை மறைவில் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அத்திட்டத்தின் ஒரு பகுதியாக அரச காணிகள் மற்றும் பொதுமக்களின் காணிகள் மதிப்பிடப் படும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அத்துடன் தற்சமயம் வாழ்பவர்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன. கணக்கெடுக்கப்படுகின்றன.

வயதான அந்தப்பிள்ளைக்கு காணியைப் பற்றியே தெரிய வாய்ப்பு இல்லை. இதன் காரணமாக அந்தக் காணிகள் எல்லாம் சொந்தக்காரர் இல்லாதவையாகப் போகின்றன.

அந்தப் பிரதேசம் எல்லாம் அரசு உடைமையாக் கப்பட்டு, சிங்களவர்கள் குடியேற்றப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

1981ஆம் ஆண்டுக்குப் பின் தற்சமயம் நடைபெறப் போகும் கணக்கெடுப்பு மற்றும் வாக்கு இடாப்பு மறுபரிசீலனை எல்லாம் பூர்வீகமாக தமிழர் வாழ்ந்த பிரதேசம் பறிபோக வாய்ப்பாகப் போகின்றது.

இதற்குப் புறம்பாக - வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்கு 31 பேர் தெரிவு செய்யப்படவேண்டும். அதுவும் பாதிக்கப்படும் சூழல் உருவாகி வருகின்றது.

பொதுமக்கள் அக்கறை காட்டாவிட்டால், எதிர்கால விபரீத விளைவுகளுக்கு உதவுபவர்களாக மாறிவிடுவர். இந்த யதார்த்தத்தை சகலரும் புரிந்து செயற் படவேண்டும் என சகல தரப்புகளும் கேட்கின்றன.

அது நிற்க -

வடக்கின் அபிவிருத்திப் பணிகளில், மறுசீரமைப் புப் பணிகளில் என்றுமில்லாத அளவுக்கு இந்தியாவும் சீனாவும் மூக்கை நுழைத்துள்ளன.

தெற்கில் பல்வேறு பெரும் திட்டங்களுக்குத் தாராளமாக உதவ சீனா முன்வந்துள்ளது. வடக்கிலும் சில திட்டங்களுக்கும் உதவ சீனா உறுதியளித்துள்ளது.

அதேபோன்று தாராளமாக உதவிகள் வழங்க இந்தியாவும் முன்வந்துள்ளது. வடக்கு - கிழக்கில் பல்வேறு திட்டங்களுக்கு உதவும் வகையில் கால் பதிக்க இந்தியா முனைந்துள்ளது.

## களம் இறங்குகின்றன அமெரிக்கா, இந்தியா, சீனா

வன்னியிலும் சரி, யாழ்ப்பாணத்திலும் சரி கடந்த காலப்பிரச்சினைகளால் இடம் பெயர்ந்தவர்கள் இலட்சக் கணக்கு. உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் அவர்கள் தங்கியுள்ளனர்.

அத்தோடு கடந்த கால யுத்தங்களில் உயிரிழந்தவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள்.

பெரும்பாலான குடும்பங்களில் ஒருவர் கூட இல்லாமல் மண்ணோடு மண்ணாகிப் போனவர்கள் பலர். பெரும்பாலான குடும்பங்களில் ஓரிருவர் தப்பியிருந்தாலும், அவர்கள் கூட வெளிநாடுகளில் வாழ்கின்றார்கள். அவர்கள் மீளத் திரும்பும் வாய்ப்புக் குறைவு.

மீண்டும் அவர்கள் திரும்பினால் கூட அவர் களின் காணிகளுக்கு உரிமை கோர உறுதிகள் கூட இல்லை. யுத்தத்தில் மரணித்தவர்களுடன் காணி உறுதிகளும் போய்விட்டன.

அவர்கள் தமது உறவுகளின் உறுதிகளை பெறுவது என்பது உடனடியாக இயலாத காரியம். மரணித்தவர்களின் உறவு நிலையை நிரூபித்து, காணி உரிமையைப் பெறுவது என்பது உடனடி யாக நடக்கும் காரியம் இல்லை. இதேபோன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் வலி.வடக்கு அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தவர்கள் கூட மீண்டும் தமது இடத்தில்

# அபிவிருத்திக்கு முன் தீர்வு இதுவே மக்கள் விருப்பம்

2004ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வடக்குக் கிழக்கில் இருந்து 24 தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் கடந்த ஏப்ரல் நடந்த தேர்தலில் இது குறைந்து விட்டது.

தேசியக் கட்சிகளாக ஐ.தே.கட்சி, சுதந்திரக்கட்சி ஆகியன வடக்கு, கிழக்கில் 17 ஆசனங்களையும் கைப்பற்றி யுள்ளன. 50 வீதத்துக்கு மேல் தெற்குக் கட்சிகளே கைப்பற்றின. அதில் ஒருசில தமிழர்களும் உள்ளனர்.

கடந்த தேர்தலில் மறைமுகமாக மேற்கொள்ளப் பட்ட சதிகாரணமாக, சுயேச்சைக்குழுக்கள் களம் இறக்கப்பட்டன. நிதிவளம் உட்பட பல்வேறு வளங்களை வழங்கி, தமிழ் மக்களின் வாக்குகளை சிதைக்கும் நாடகம் அரங்கேற்றப்பட்டது.

பேரம் பேசும் சக்தியாக தமிழர் தரப்பு வரக்கூடாது என்ற நோக்குடன் களம் இறக்கப்பட்டவைதான் இந்தச் சுயேச்சைக்குழுக்கள். ஆனால் தமிழ் மக்கள் அவற்றுக்கு நல்ல பாடம் புகட்டியிருந்தனர்.

தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருந்த புத்திஜீவிகள்தான் இப்படி விலை போனார்கள். தமிழ்மக்கள் அவர்களுக்கு கொடுத்த பாடத்தைப் புரிந்து அவர்கள் எதிர்காலத்தில் செயற்படுவார்கள் என எதிர்பார்க்கலாம்.

தமிழ் மக்களின் வாக்குகளை சிதைக்க, சிங்களக் குடியேற்றம், சுயேச்சைக்குழுக்கள் இறக்கம் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு அவை முழு வெற்றியைத்தராத நிலையில் புதிய யுத்தி இப்போது வந்துள்ளது.

வாக்காளர் மறுபரிசீலனை, சனத்தொகைக் கணக்கெடுப்பு என வந்துள்ள புதிய யுக்திகளைக் கண்டு மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

எதிர்கால சமூகத்துக்கு ஏற்படப் போகும் அபாய

தென்னாசியாவின் இரு பிரதான நாடுகள் இலங்கையில் கால் ஊன்ற பாகிஸ்தானும் இலங்கைக்கு உதவப் போவதாகத் தெரிவித்துள்ளது.

இதற்கு மேலாக - இலங்கை விவகாரத்தில் இந்தியாவுடன் இணைந்து செயற்படப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இலங்கையின் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர உதவிய இந்தியாவும் சீனாவும் உதவி வழங்குவ தற்கு முன் வந்துள்ள நிலையில் அமெரிக்காவும் இந்தியாவுடன் வருகின்றது.

நிலைமைகளை ஆராய்ந்தால் மீள் குடியமர்வு, நல்லிணக்கம் என்ற பெயரில் அமெரிக்கா, இந்தியா, சீனா போன்றவை இலங்கையில் கால் பதிக்கப் போகின்றன.

அபிவிருத்தி, மீள் குடியமர்வுக்கு முன்பாக, நாட் டில் இரண்டாம் தரப்பிரஜையாக சிங்கள அரசால் மதிக்கப்படும் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை யுடன் தமது தாயகத்தில் வாழக்கூடிய சூழலைஇந்த நாடுகள் முதலில் உருவாக்க வேண்டும்.

சமாதான காலத்தில் கண்ட அபிவிருத்திகள் எல்லாம் பின்னர் தீவிரமான யுத்தத்தால் தவிடு பொடியாகின. அந்த நிலை ஏற்படுவதைத் தவிர்க்க முதலில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். அதன்பின் அந்தப் பிரதேச மக்களின் ஆதரவுடன் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும்.

**யாழவன்**

அப்போதுதான் அபிவிருத்தி நிலைத்து நிற்கும். இதுவே யதார்த்த நிலையாகும்.

***

# ஈழ ஆதரவாளர்களை அடக்க நடந்த சதியா?



இரா.தமிழ்க்கனல்

கடந்த 11 ஆம் திகதி... அதிகாலை இரண்டு மணி அளவில் தமிழ்நாடு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே உள்ள பேரணி கிராமத்தை எழுப்பியது பயங்கரச் சத்தம்... தேசிய நெடுஞ்சாலையில்தான் ஏதோ விபத்து என்று மக்கள் பெருங்கூட்டமாகத் திரண்டு ஓட... அங்கே எந்த அசம்பாவிதமும் இல்லை!

அதன் பிறகு, பல நிமிடங்கள் கழித்து மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் ரயில் குலுங்கி நின்றபோதுதான், நடந்த சம்பவம் என்னவென்று மக்களுக்குப் புரியத்தொடங்கியது.

10 அடி தள்ளி ரயில்வே தண்டவாளம் பிளக்கப் பட்டுக்கிடக்க... ரயில் சாரதி சாமர்த்தியமாக பிரேக் அடித்து நிறுத்தியிருந்தார். இதனால், இரண்டாயிரத் துக்கும் மேற்பட்டோரின் உயிர்கள் தப்பின. தண்டவாளம் தகர்க்கப்பட்ட இடத்தில், 'இந்திய அரசே! ரத்த வெறி பிடித்த ராஜபக்ஷவின் இந்திய வருகையையும் தமிழின அழிப்புக்குத் துணைபோன இந்திய அரசையும், தமிழ்நாடு அரசையும் கண்டிக்கிறோம். தமிழா... இனியும் மௌனம் காத்தால் புரியாது நமது மௌன வலி!' என்று எழுதப்பட்ட காகிதத்தில், 'மேதகு பிரபாகரன் தம்பிகள்!' என்று கையெழுத்து. அதனால், செம்மொழி மாநாடு நடக்கும் நேரத்தில் தமிழீழ ஆர்வலர்கள் உண்டாக்கிய சதியாக இந்த



சீமான்

விவகாரம் வெடித்துக் கிளம்ப... தமிழகம் மட்டுமல்லாமல், தமிழர்கள் வாழும் திசைகள் யாவும் ஜிவுஜிவுத்துக்கிடக்கின்றன.

''அதிகாலை 2.08 மணிக்கு வெடிச் சத்தம் கேட்டதாக மக்கள் சொல்கிறார் கள். குண்டு வெடித்து தண்டவாளம் தகர்க்கப்பட்ட 145 ஆவது மைல் கம்பம் அருகே உள்ள இடத்தை, சேலம் எக்ஸ்பிரஸ் 2.15 மணிக்கு கடந்திருக்கி றது. அப்படி என்றால் துண்டிக்கப்பட்ட தண்டவாளத்தில்தான் அந்த ரயில் கடந்து சென்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. மூன்று அடி நீளத்துக்கு ஒரு தண்டவாளம் தகர்க்கப்பட்ட நிலையில், அதன் வழியே ரயில் சென்றிருக்க சாத்தியமே இல்லை. ஆனால், அந்த வழியாகத்தான் சேலம் எக்ஸ்பிரஸ் போனதாக அந்தப் பகுதிவாசிகள் அடித்துச் சொல்கிறார் கள். துண்டிக்கப்பட்ட தண்டவாளத்தில் ரயில் வந்தபோது பெரிய அதிர்வு ஏற்பட்டதாக ரயில்வே அதிகாரிகளுக்கு 'கார்ட்' ராஜசேகர் தகவல் சொல்லி இருக்கிறார்!'' என்றார் அதிகாரி ஒருவர்.

தண்டவாளம் தகர்க்கப்பட்டு இருந்த இடத்தின் அருகே சித்தணி கிராமத்தைச் சேர்ந்த செந்தாமரைக்கண்ணன் என்பவ ரின் வயலில் மோட்டார் கொட்டகை உள்ளது. அந்த கொட்டகை யில் 'இருந்து மின்சார வயர் மூலம் மின் இணைப்பு கொடுத்து வெடிகுண்டை வெடிக்கச் செய்திருப்பது அதிகாரிகளின் விசாரணையில் தெரிய வந்தது.

தண்டவாளத் தகர்ப்பில் தமிழ் அமைப்பு களின் பின்னணி இருப்பதாகச் சொல்லும் பொலிஸார் தரப்பு, ''ஜெலட் டின் குச்சிகளை மின்சார இணைப்பில் கொடுத்து வயர் மூலம் வெடிக்கச் செய்திருப்பது எங்களைத் திகைக் கவைத்திருக்கிறது. பட்டரி மூலமாக வோ நாட்டு மருந்து திரி மூலமாகவோ தான் முன்பெல்லாம் இப்படிப்பட்ட சம்பவங்களை தமிழ்த் தீவிரவாதி கள் செய்திருக்கி றார்கள். ஜெலட் டின் குச்சிகளுக்கு மின்சாரத் தொடர்பு கொடுக் கும் டெக்னிக்கை இதுவரை தமிழ்த் தீவிரவாதிகள் பின்பற்றியதில்லை. தென்னாற்காடு மாவட்டத்தில் தமிழர் விடுதலைப் படையின் ஆதிக்கம் ஒரு காலத்தில் பெரிதாக இருந்தது. இப்போது, அந்த இயக்கத்தின் செயல்பாடுகள் அவ்வளவாக இல்லை என்றாலும், அந்த இயக்க ஆட்கள் மர்மமாகத்தான் நடமாடி வருகி றார்கள். குறிப்பாக, தமிழீழ வீழ்ச்சி, பழைய தமிழ் அமைப்பு களை மிகவும் உசுப்பேற்றி உள்ளது. இலங்கையில் போர் தீவிரமாக நடந்த போதும், பிரபாகரனின் சடலம் என இலங்கை அரசு காட்டிய போதும் மிகப் பெரிய அசம்பாவிதங் களை நிகழ்த்த சில தமிழ் அமைப்புகள் திட்டமிட்டன. ஆனால், உளவுத் துறை யின் தீவிரக் கண்காணிப்பால் அவை அசுரகதியில் கண்டறியப்பட்டுத் தவிர்க் கப்பட்டன. சில தமிழீழ ஆர்வலர்கள், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். இதனிடையே, குண்டு வெடிப்பு நடந்த பேரணி கிராமத்துக்குப் பக்கத் தில் உள்ள விக்கிர வாண்டி அண்ணா சிலை அருகே ராஜபக்ஷ உருவ பொம் மைக்கு கடந்த ஒன்பதாம் திகதி செருப்பு மாலை போடப்பட்டிருந்தது. இதற்கிடை யில், சென்னை மெரினா பகுதியில் சிலர், 'ஈழத்துத் தமிழினம் அழிந்த நிலையில் செம்மொழி மாநாடு தேவையா?' என்ற வாசகங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங் களை வீசி இருக்கிறார்கள். தண்டவாளத் தகர்ப்பு நடந்த இடத்தில் பேனாவால் எழுதப்பட் டுக்கிடந்த பேப்பரை முன் னாள் தமிழ்த் தீவிரவாதி களிடம் காட்டி விசாரித்து வருகிறோம்!'' என்கிறது வழக்கை விசாரிக்கும் பொலிஸார் தரப்பு.

ஆனால், தமிழீழ ஆதரவாளர்களோ இதனை அறவே மறுக்கிறார்கள். ''தமிழர் அமைப்புகள் ஏதேனும் இந்த குண்டு வெடிப்பில் ஈடுபட்டிருந்தால், இந்நேரம் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று இருப்பார்கள். பழைய தமிழ் அமைப்பு கள் ஏதும் இப்போது வலுவாக இல்லை. மேலும், இலங்கைத் தமிழனுக்கே பற்றுதலோடு குரல் கொடுக்கும் இயக் கத்துவாதிகள், இங்கு உள்ள தமிழர்க ளின் உயிர் பறிபோகக்கூடிய சதியில் இறங்குவார்களா? ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் என அறவழியில் தமிழ் அமைப்புகள் நடத்தும் போராட்டங்கள் அரசுக்கு பெரிய தலைவலியை உண் டாக்கி வருகின்றன. சிகிச்சைக்காக சென்னைக்கு வந்த பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் திருப்பி அனுப்பப்பட்டதும், ராஜபக்ஷயின் டெல்லி விஜயம் தமிழக மக்களை மனதளவில் கொதிக்க வைத்திருக்கின் றது. செம்மொழி மாநாடு மூலமாக மக்களின் மனதைத் திசை மாற்றிவிட லாம் என நினைத்த அரசுத் தரப்பு, சமீபத்தில் மாநிலம் முழுக்க மதிப்பீடு ஒன்றை நடத்தியது. அப்போது, ஈழ விவகாரம் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலி லும் மிகப் பெரிய பாதிப்பை உண்டாக்கும் எனத் தெரிய வந்துள்ளது.

இதற்கிடையில், சமீப காலமாக தமிழகத் தில் 'திடீர் தமிழ் ஆர்வ லர்களாக' உருவாகி வரும் சிலர், அரசின் கைப்பிள்ளை யாக மாறி வருகிறார்கள். இன்னும் சிலரோ, சிங்கள அரசின் ஆசி பெற்றவர்களாக பெரிய அளவில் பணத்தோடும் 'தமிழ் ஆர்வலர்' என்ற போர்வையோடும் தமிழகத்துக்குள் நடமாடி வருகிறார்கள். தமிழீழ ஆதங்கத்தைக் குறைக்கும் வகையி லும், புலிகள் இயக்கத் தின் மீது வெறுப்பு உணர்வை உண்டாக் கும் வகையிலும் நடத் தப்பட்டு இருக்கும் தண்டவாளத் தகர்ப்புப் பின்னணியில் இத்தகைய ஆட்கள் தான் இருப்பார்கள்.

மேலும், தேர்தல் நெருங்கும் இந்த நேரத்தில் தமிழ் ஆதரவு அமைப்புகளுக் குத் தடை விதிக்கும் ஆலோசனைகளும் நடந்து வருவதை இங்கே கவனிக்க வேண்டும். கூடவே, மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அந்த மலைக் கோட்டை எக்ஸ்பிரஸ் ரயிலில் வருவ தாகத் திட்டமிட்டு இருந்ததாகவும், அவரைக் குறிவைத்தே தண்டவாளத் தகர்ப்பு நடந்ததாகவும் கிளப்பிவிடுவதன் மூலம்... மத்திய அரசையும் தமிழீழ ஆதரவு இயக்கங்க ளுக்கு எதிராகத் திருப்பிவிடப் பார்க்கிறார்கள்.

தண்டவாளம் தகர்க்கப்பட்ட இடத் துக்கு மிகச் சரியாக 10 அடி தூரத்தில் மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் ரயில் நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வளவு நுணுக் கமாக ரயிலை நிறுத்தி விபத்தைத் தவிர்ப் பது சாத்தியமே இல்லாதது. அதோடு, சம்பவம் நடந்த அடுத்த கணமே, 'இது நக்ஸலைட்களின் வேலை இல்லை' என டி.ஜி.பியான லத்திகா சரண் அறிவித்தது ஏன்... எப்படி? அதேவேகத்தில் வழக்கை உளவுத் துறையின் கையில் ஒப்படைத்ததும் சந்தேகங்களைக் கிளப்புகிறது!'' என்கின்றனர். தண்டவா ளத் தகர்ப்பு குறித்து 'நாம் தமிழர்' இயக்கத் தலைவர் சீமான் பல்வேறு சந்தேகங்களைக் கிளப்பி இருக்கிறார்.

''குண்டு வெடிப்பை நிகழ்த் தியவர்கள் 'மேதகு பிரபாகரனின் தம்பிகள்' எனத் துண்டுப் பிரசுரத் தில் எழுதி இருப்பதாக பொலி ஸார் சொல் கின்றனர். தலைவர் பிரபாகரனின் மீது பற்றுதல் கொண்ட தம்பி எவனும் இப்படி ஒரு கொடுமை யைச் செய்ய நினைக்க மாட்டான். ஈழமே இடுகாடாக மாறிக்கிடந்தபோதும், தாங்கொணாத் தமிழக உணர் வாளர்கள், எந்த அசம்பாவிதத் தையும் நிகழ்த்தவில்லை. முத்துக்குமார் உள்ளிட்ட 16 பேர் தங்களைத் தாங்களே எரித்து மாய்ந்தார்களே தவிர, அடுத்தவர் மீது துரும்பைக் கூட ஏவவில்லை. ரயில் தண்டவாளத்தில் குண்டு வெடித்த இடத்தில் பெரும் பள்ளம் ஏற்பட்டுள்ளது ; இருப்புப் பாதை மரக்கட்டைகள் உருக் குலைந்து போய் விட்டன; ஆனால், அந்தத் துண்டு பிரசுரம் மட்டும் வெடிப்பு இடத்தின் அருகிலேயே எவ்விதச் சேத மும் இல்லாமல்கிடந்தது எப்படி? அங்கேயே காகிதம் கிடப்பதற்கு காற்றின் அசைவே இல்லாமல் இருந்ததா? ரயிலைக் கவிழ்த்து, நூற்றுக்கணக்கான மக்களைக் கொன்று பேரழிவை உண்டாக்க நினைத் தவர்கள் 'அதை நாங்கள்தான் செய்தோம்' என வெறும் காகிதத்தால் எழுதி வைப் பார்களா? ஒருவேளை ஒரு கோர சம்பவம் நடந்திருந்தால் அந்தப் பேரழிவுப் பிரதேசத்தில் காற்றுக்கே தாக்குப்பிடிக் காத சின்ன காகிதம் அங்கே இருக்காது



இந்திய விஜயத்தின் போது

என்பது அவனுக்குத் தெரியாதா?இந்த எலெக்ட்ரானிக் யுகத்தில் இதை எல்லாம் நம்ப முடிகிறதா?

விசாரணைக்கு முன்பே, 'இது விடுதலைப் புலிஆதரவாளர் களின் செயல்தான்' என பொலிஸார் சொல்வது ஏன்?'' என்கிறார் சீமான்.

****

சுடர்ஒளி

ஜூன் 20 - ஜூன் 26, 2010

85, ஜெயந்தமல்லி மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன்: 0115738005 பாக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

## வெற்றி விழாவும் குற்றச்சாட்டும்

கடந்த மாதம் கொழும்பில் நடைபெறவிருந்த யுத்த வெற்றியின் ஓராண்டு பூர்த்தி விழா திடீரென பிடித்துக் கொண்ட அடைமழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. ஒரு மாதம் கடந்த நிலையில் கடந்த வெள்ளிக் கிழமை இந்த விழா பிரமாண்டமான முறையில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

9 ஆயிரம் படையினர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். படையினரின் அணிவகுப்பு, டாங்கிகள் பீரங்கிகளின் பவனி, பேரிரைச்சலுடன் பறந்த விமானங்கள் வன்னியில் நடந்த யுத்தத்தின் அந்த பயங்கரமான இறுதி நாட்களை மீண்டும் ஒருகணம் நினைவுக்குக் கொண்டு வந்தன.

கடந்த ஆண்டு மே மாதம் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான சர்ச்சை இன்னும் முடிவுக்கு வரவில்லை. இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர் என்றும் யுத்தம் சம்பந்தமான சர்வதேச விதிமுறைகளை இலங்கை அரசு மீறிவிட்டது என்றும் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள் இன்னும் முடிவுக்கு வரவில்லை. அதற்குள் யுத்தக் கதாநாயகன் இல்லாமலேயே வெற்றி விழாக் கொண்டாட்டமும் நடந்து முடிந்துவிட்டது.

யுத்தக் குற்ற விசாரணைக்காக ஐ.நாவினால் ஏற்படுத்தப்படும் எந்த ஒரு குழுவையும் இலங்கை எதிர்த்து வருகிறது. யுத்தத்தின் இறுதி நாட்களில் நடைபெற்ற சம்பவங்களை விசாரிப்பதற்கு ஐ.நா. நிபுணர்கள் தேவை இல்லை என்று இலங்கை கூறி வருகிறது. இலங்கை அரசாங்கமே ஒரு குழுவை நியமித்தது. விசாரணை நடத்தி அந்தக் குழுவின் இறுதி அறிக்கைகளின்படி இலங்கை செயற்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

தேசிய நல்லிணக்க ஆணைக்குழு என்ற பெயரில் அந்தக் குழுவை ஜனாதிபதி அமைத்தார். ஆனால், அந்தக் குழு நீதியாக நடந்துகொள்ளமாட்டாது என்று சர்வதேச நாடுகள் குரல் கொடுத்து வருகின்றன.

கடந்த புதன்கிழமை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தின்போது, இலங்கை மீதான யுத்தக் குற்ற விசாரணை நடத்துவதற்கு நிபுணர் குழு ஒன்றை அமைக்க ஐ.நா. தவறுமானால், பிரிட்டன் அதனை முன்னெடுத்துச் செயற்படுத்தவேண்டும் என்று தொழிற்கட்சி எம்.பி. ஒருவர் குரல் கொடுத்திருந்தார்.

இந்த சர்ச்சைகளுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நாவின் உதவிச் செயலாளர் நாயகம் லின் பொஸ்கோவின் அறிவிப்பு வெளிவந்துள்ளது. இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூனுக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர் குழு பற்றிய விவரம் அடுத்த வாரம் வெளிவரப் போகிறது என்பதே அந்த அறிவிப்பு.

இலங்கை இந்த நெருக்கடியை எப்படி எதிர்கொள்ளப் போகிறது என்பதே இன்றைய கேள்வி. ஏனெனில், விடுதலைப் புலிகளுடனான யுத்தக் காலங்களில் எதிர்நோக்கிய நெருக்கடிகளைவிட பெரும் நெருக்கடிகளை இலங்கை தற்போது எதிர்நோக்குவதாகத் தெரிகிறது.

ஜனாதிபதி தேசிய நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை நியமித்திருப்பதால், இது குறித்து ஐ.நா. அலட்டிக் கொள்ளத் தேவை இல்லை என்ற கருத்தும் நிலவுகிறது. நாட்டை பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து மீட்டுவிட்டதாக ஜனாதிபதி கூறுகிறார். தற்போதைய குற்றச்சாட்டுகளிலிருந்து நாடு மீளுமா?

# என்னதான் நடக்கிறது?

**ஜோசப் தயாளன்**

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச அழுத்தங்கள் எப்படியுள்ளன என்று கேட்டார் நண்பர் ஒருவர்.

இப்படியொரு கேள்வி திடீரென அவருக்கு ஏற்பட்டது வியப்பில்லை. ஏனென்றால், இந்தக் கேள்வி நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

பத்திரிகையில் வெளிவருகின்ற செய்திகள், ஐ.நா. மற்றும் பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் தெரிவித்துவரும் போர்க்குற்றங்கள் தொடர்பாக கருத்துக்கள், சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற மனித உரிமை அமைப்புகளின் அறிக்கைகள் எல்லாம் இந்தக் கேள்வியை எழுப்புகின்றன.

இதைப்போலவே, முன்னர் போர் 



நடந்தபோது, போரை நிறுத்த வேண்டும் எனவும், இனப்பிரச்சினைக்கு இராணுவ வழிமுறை மூலம் தீர்வு காணமுடியாது, பேச்சுவார்த்தை மூலமே அமைதியையும் சமாதானத்தையும் எட்டமுடியும் எனவும் மேற்படி அமைப்புகளும் நாடுகளும் வலியுறுத்தியிருந்தன.

ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கும் மேலாக இவை இப்படிச் சொல்லி வந்தபோதும் போர் நடந்தது. மக்கள் கொல்லப்பட்டனர். மனித உரிமைகள் மீறப்பட்டன. பல லட்சம் மக்கள் அகதிகளாகினர். அழிவு நடந்தது. வன்முறைகள் பெருகின. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேயில்லை.

பதிலாக, இலங்கைக்கு சகல நாடுகளும் தாராளமாக உதவின. இலங்கை கேட்காமலே இராணுவ உதவிகள் வரை பல நாடுகளால் செய்யப்பட்டது.

இப்படியென்றால், என்னதான் நடக்கிறது? இதுதான் பிரச்சினையே!

உலகம் எம்மை ஏமாற்றுகிறது. உலகம் இரண்டு விதமாக நடந்து கொள்கிறது. இரண்டு விதமாக நடந்து கொள்வது என்பது ஏமாற்று வேலையே. தவறானதே.

சொல்வது ஒன்றாகவும் செய்வது வேறொன்றாகவும்தான் உள்ளது இந்த உலகத்தின் போக்கு. இதையிட்டே நாம் தெளிவாக இருக்க வேண்டியுள்ளது.

நடந்து முடிந்த போரில் யார் யார் எந்தெந்தத் தப்புகள் எல்லாம் சம்மந்தப்பட்டிருந்தன என்பது சகலருக் குமே தெரிந்தது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைப் பற்றிய எந்த நிபந்தனையுமல்லாமலே அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன், சீனா, பாகிஸ்தான், ஈரான் உள்ளிட்ட சகல நாடுகளும் தாராள ஆயுத உதவிகளைச் செய்திருந்தன.

அடுத்தது, இந்த நாடுகள் எல்லாம் இலங்கைக்கு வழங்கிய ஆயுத உதவி, பயிற்சி வழங்கல் (படைத்துறைக்கான பயிற்சி) எல்லாம் மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுக்காது, காரணமாக அமையாது என எப்படிக் கருதமுடியும்?

ஏற்கனவே, கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை அரசும், படைகளும் இன ரீதியாக வன்முறைகளிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டு வந்துள்ள பின்னணியிலேயே இந்த இராணுவ உதவிகளை இந்த நாடுகள் செய்திருக்கின்றன.

எனவே, மகித உரிமைகள் பாதிக்கப்படுவதற்கும்; தமிழ் பேசும் மக்கள் கொல்லப்படுவதற்கும், இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படாமல் இழுத்தடிக்கப்படுவதற்கும் இந்த உலகமே பெரும்காரணமாகும்.

இலங்கை அரசு சர்வதேச ஆதரவுடன்தான் இதுவரையும் இந்த வன்முறைகளை நடத்தியிருக்கிறது. இலங்கை அரசு இப்படி நடப்பதற்கான துணிச்சலை இந்த உலகமே கொடுத்துள்ளது.

இது அரசுகளுக்கிடையிலான உறவு என்ற அடிப்படையில் செய்யப்பட்ட உடன்பாடுகளும் காரியங்களுமாகும். அரசுகள் என்பவை தமது நலன், தமது தேவை என்பனவற்றை முதன்மைப்படுத்தியே எப்போது செயற்படும். எனவே அரசுகளின் பிடியில் இயங்கும் அரசுகளிடம் நாம் அன்பையும் கருணையையும் நீதியையும் எதிர்பார்க்கவே முடியாது.

அரசியல் என்பது நலன்களையும் ஆதாயங்களையும் அறுவடை செய்வதற்கான வழிமுறை என்று ஆகிவிட்ட சூழலில் வளப்பகிர்வு, சந்தைப் போட்டி என்பவையே முதன்மையாகி விட்டன. இரகசிய உடன்படிக்கைகள் வெளிப்படையான உடன்படிக்கைகள் எல்லாமே இந்த வளப்பகிர்வுக்காகவும் சந்தைப்



போட்டிக்காகவும்தான்.

ஆகையால், இலங்கையுடனான உறவும் பகையும் என்பது இந்த வகையிலேயே அமைகின்றது. இந்த வெளிப்படையான உண்மையை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

ஐ.நா. அமைப்புகளோ அமெரிக்காவோ, பிரித்தானியாவோ கொள்கை ரீதியாக ஈழத்தமிழரின் அரசியல் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வும், தீர்வுக்கான அணுமுறையும் என இதுவரையிலும் தெரிவிக்கவில்லை. இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இந்தத் தரப்புகள் இதுவரையிலும் எத்தகைய பரிந்துரைகளையும் செய்யவில்லை.

தவிர, இலங்கை அரசு மிகமோசமான இன ஒதுக்கலையும் இன வன்முறையையும் செய்த 25 ஆண்டுகால வரலாற்றில், எந்தவொரு வெளிநாடும் இலங்கையுடனான ராஜதந்திர உறவை முறித்துக் கொள்ளவும் இல்லை. பொருளாதார உதவிகள் வழங்குவதை நிறுத்தவும் இல்லை.

எனவே, இந்த உண்மையை, அனுபவப் பாடத்தைப் படித்துக் கொண்டு, நாம் நிகழ்கால, எதிர்கால அரசியல் குறித்துச் சிந்திக்க வேண்டும்.

இந்தியாவோ, பிரித்தானியாவோ சில சந்தர்ப்பங்களில் இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக இருந்தாற் போல ஓர் ஆதரவுச் செய்தியை வெளியிடும். இந்தச் செய்தியை எமது ஊடகங்கள் முதன்மையறிந்து வெளிபடுத்தும். ஆனால் அடுத்த வாரம் இந்தச் செய்திக்கு மாறாக காரியங்கள் நடக்கும்.

இப்போது ஈழத்தமிழருக்கு ஆதரவாக உலகில் எந்த நாடு இருக்கின்றது? அந்த நாடு வழங்கிவரும் ஆதரவு என்ன? அது எத்தகையது?

அல்லது இலங்கை அரசை விசுவாசமாகவே கண்டிக்கும் நாடு எது? அது எவ்வாறு தனது கண்டனத்தையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்துகிறது?

மெய்யாகவே இலங்கையின் போர்க்குற்றச்சாட்டை விசாரிக்கத்தான் வேண்டும் என்று எந்தத்தரப்பு விரும்புகின்றது? அது அப்படி விரும்பினால், அதற்காக அந்தத்தரப்பு எடுக்கின்ற நடவடிக்கைகள் என்ன? அந்த நடவடிக்கையின் பெறுமதி என்ன?

இவ்வாறு நாம் அடிப்படையான பல கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது. ஏனெனில், அவரவர் தமது தேவைகளுக்காகவும் நலன்களுக்காகவும் அவ்வப்போது அறிக்கைகளை வெளியிடுவதும் கண்டனங்களைத் தெரிவிப்பதும் வழமை. இதனை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

ஈராக்கின் மீது அமெரிக்க படை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான நியாயத்தை உருவாக்கியதில் சர்வதேச மன்னிப்புச் சபையின் பங்குண்டு.

சதாமின் அரசு மீது அப்போது மன்னிப்புச்சபை முன்வைத்த குற்றச்சாட்டுகள் அமெரிக்க அரசியலுக்கான தளத்தயாரிப்பு. இவ்வாறுதான் சர்வதேச அமைப்புக ளின் தொழிற்பாடுகள் உள்ளன. எனவே, இலங்கை தொடர்பான போர்க்குற்றச்சாட்டு, மனித உரிமை மீறல், அரசியல் தீர்வுக்கான வலியுறுத்தல் அறிவிப்புக்களையிட்டு மகிழ்வடைய எமக்கு எதுவும் இல்லை.

****

www.srilankainsurance.com

# "வெற்றியின் சிகரத்தை அடைந்த ஸ்ரீ லங்கா இன்ஷ்வரன்ஸ் எமது குழுவினர்"

மிகச் சிறந்த சமூக நலனுக்காக முன்னின்று நிபுணத்துவ தரத்தினை
உயர் மட்டத்தில் பேணுவதே எமது நோக்கம்.

அவ்வாறான நிகரற்ற சேவையினை வழங்கும் ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் காப்புறுதி
ஆலோசகர்கள் புகழ்பெற்ற 'மில்லியன் டொலர் ரவுண்ட் டேபள்' சம்மேளனத்தை
பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பை இம்முறையும் பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு தமது இலக்கினை பூர்த்தி செய்து
இச் சம்மேளனத்தில் கலந்துகொள்ள கனடா சென்றுள்ள

## எமது குழுவினருக்கு எமது கௌரவங்கள் உரித்தாகட்டும்




MDRT
The Premier Association of Financial Professionals®

இடமிருந்து வலமாக அமர்ந்திருப்பவர்கள் - திரு. டீ.டபிள்யூ. ஜயசேகர (பெட்ரோ 2), திரு. என்.ஜீ.டீ. நிஸங்க (யூனியன் பிளேஸ்),
திரு. ஏ. சிவநாதா (யாழ்ப்பாணம்), திரு. கே.எல். இந்திக்க (பெட்ரோ 3), திரு. ஜீ.ஏ.ஏ. பியரத்ன (குளியாப்பிட்டிய),

இடமிருந்து வலமாக நிற்பவர்கள் - திரு. வி. நந்தகுமார் (யாழ்ப்பாணம்), திரு. எம்.எம்.எஸ்.கே. நவரத்ன (கண்டி),
திரு. டபிள்யூ.பீ.டபிள்யூ. விஜயமோஹன (மஹரகம்பிட்டி), திரு. ஜீ.ஜீ.டீ. ராஜபக்ஷ (மாத்தளை), திரு. எஸ்.எம்.எம்.ஜீ. கஸ்தூரி பண்டார (நுகேகொடை),

புகைப்படத்தில் இடம்பெறாதவர் - திரு. பீ.எம்.எஸ்.கே. பண்டாரநாயக்க (கண்டி).

ஸ்ரீ லங்கா இன்ஷ்வரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

# காலியாகியது அ.தி.மு.க!




அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இனிமேல் வாழ்நாளில் ஆட்சிக்கு வரவே முடியாது என்ற நியதி தி.மு.கவினால் உண்டாக்கப்பட்டுள்ளது.

மத்தியில் ஆளும் கூட்டணியின் பிரதான பங்காளி என்ற ஸ்தானத்துடன் தி.மு.க ஆட்சி சக்கைபோடு போட்டு வருகிறது. வடக்கே ஸ்டாலின், தெற்கே அழகிரி, மேற்கே கனிமொழி என மும்முனையில் அ.தி.மு.க மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால், அ.தி.மு.க வட்டாரமோ தூங்கிக்கொண்டிருக்கிறது. ஆட்சிக்கு வந்தபின் ஆளும் கட்சி நித்திரை தூங்குவதும் எதிர்க்கட்சி உஷாராகப் போராட்டம், பேரணி நடத்துவதுதான் வழக்கம். ஆளும் கட்சி மக்கள் பிரச்சினை பற்றி அக்கறை கொள்ளாதவிடத்து எதிர்க்கட்சி அந்த மக்கள் பிரச்சினைக்காக போராடி ஆளும் கட்சிக்கு எதிரான வெகுஜன எழுச்சியை தூண்டவேண்டும். ஆனால், தமிழகத்தில் இன்று நடப்பதோ இதன் மறுதலையாகும். அதாவது, ஆளும்கட்சியான தி.மு.க மிகுந்த உஷாருடன் கட்சிக்கு ஆள்சேர்த்து வருகிறது. இதில் அ.தி.மு.கவின் சாதாரண தொண்டர்கள், எம்.எல்.ஏக்கள், முன்னாள் அமைச்சர்கள் என பெரும் பட்டாளமே தி.மு.கவில் ஐக்கியமாகி வருகிறது. இந்த வேகத்தில் போனால் அடுத்தவருடம் சட்ட சபைத்தேர்தல் வருவதற்குள் அ.தி.மு.க கூடாரம் கூண்டோடு காலியாகிவிடக் கூடும் என்கின்றனர் நோக்கர்கள்.

அ.தி.மு.கவிலிருந்து தி.மு.கவுக்கு தாவுகின்ற பெரும் தலைகள் வரிசையில் மிகமுக்கிய தலைவர்கள் பலர் கடந்த வாரம் சேர்ந்தது குறிப்பிடத்தக்கது. அ.தி.மு.கவின் கொங்குமண்டலத் தூண் எனத்தக்க முன்னாள் அமைச்சர் முத்துசாமி இவர்களில் முக்கயமானவர். வாழ்நாளில் தி.மு.கவில் சேரவே மாட்டார் எனக் கருது மளவுக்கு அ.தி.மு.கவினதும் எம் ஜி.ஆரினதும் விசுவாசியான முத்துசாமி தி.மு.கவில் சேர்ந்தது மிகவும் முக்கியமான ஓர் அரசியல் மாற்றமாகும். இதுவரை திருநாவுக்கரசு, சாத்தூர் ராமச்சந்திரன், அனிதா ராதாகிருஷ்ணன் எனப் பலர் அ.தி.மு.கவிலிருந்து விலகி தி.மு.கவில் சேர்ந்தாலும் (திருநாவுக்கரசு விதிவிலக்காக தி.மு.கவில் சேராது பி.ஜே.பி, காங்கிரஸ் ஆகிய கட்சிகளில் மாறிமாறி சேர்ந்தார்) முத்துசாமி இணைந்தமை தி.மு.கவுக்கு பெரும் வெற்றியாகும். காரணம், கொங்குமண்டலத்தில் தான் தி.மு.க மிகவும் பலவீனமாக உள்ளது. கோவை, ஈரோடு, நாமக்கல், சேலம், பழனி, திருப்பூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய கொங்குமண்டலத்தில் கடந்த 2006 சட்டசபைத் தேர்தலிலும் சரி 2009 லோக்சபா தேர்தலிலும் சரி பெரும் பின்னடைவையே சந்தித்திருந்தது. 2006இல் தி.மு.க தேர்தலில் வென்று ஆட்சியை பிடித்தாலும் தனித்து ஆட்சி அமைக்க முடியாமல் காங்கிரஸ் தயவில் தங்கியிருக்க நேர்ந்தமைக்கு, கொங்குமண்டலத்தில் தி.மு.கவுக்கு ஏற்பட்ட தோல்வியே காரணமாகும்.

**-எஸ். சுரேந்திரஜித்**

தந்தை ஈ.வே.ராமசாமிப் பெரியாரின் பிறப்பிடமான ஈரோடு மாவட்டம் தி.மு.கவுக்கு தோல்வியே தரும் மாவட்டம் எனலாம். அங்கு அ.தி.மு.க, மற்றும் காங்கிரஸின் செல்வாக்கே அதிகமுள்ளது. எனவே, அடுத்த ஆண்டு வரவுள்ள சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. மீண்டும் வென்று ஆட்சியமைக்க கொங்கு மண்டலத்தில் கணிசமான வெற்றி பெறுவது அவசியம். அ.தி.மு.கவுக்கு ஈரோடு மாவட்டத்தில் பெரும் தூணாக இருப்பவர்கள் இருவர். முத்துசாமியும் செங்கோட்டையனுமே இவ்விருவரும் ஆவர். இவர்களில் முத்துசாமி அடிமட்ட மக்களுடன் உறவாடி அரசியல் நடத்தும் தலைவர். எனினும் ஜெயலலிதா இவருக்கு சரியான இடத்தை வழங்கவில்லை. ஈரோடு மாவட்டத்தில் தி.மு.க.வுக்கு பலம் சேர்க்க முத்துசாமியை ஈர்க்க வேண்டுமென தி.மு.க தலைமை நெடுநாளாகவே திட்டமிட்டிருந்தது. இவர் கட்சி மாறுவதை தடுக்க ஜெயலலிதாவும் கடைசி வரை முயன்றார். எந்த ஒரு தலைவர் கட்சிமாறினாலும் அவரை போகவிடாது தடுக்க ஜெயலலிதா முயல்வது இல்லை. ஆனால், முத்துசாமி விடயத்தில் மட்டும் விதிவிலக்காக நடந்து கொண்டார். காரணம், இவர் உண்மையான கட்சி விசுவாசி என்பதாலேயே. அப்படிப்பட்ட உண்மையான எம்.ஜி.ஆர் தொண்டனுக்கு உரிய இடம் தராததற்கு ஜெயலலிதா இப்போது தண்டனை பெற்றுள்ளார்.





முத்துசாமி கட்சிமாறியதும் மற்றொரு முன்னாள் அமைச்சரான கரூர் சின்னசாமியும் மேலும் பல தலைவர்களும் தி.மு.கவுக்கு சென்றுள்ளது ஜெயலலிதாவுக்கு பெரும் அதிர்ச்சியாக மாறியுள்ளது. கருணாநிதியை கட்சியின் மட்டுமன்றி எதிர்க் கட்சியினர் கூட நினைத்தமாத்திரத்தில் சந்திக்கமுடியும். ஆனால், மூத்த தலைவர்கள் கூட ஜெயலலிதாவை சந்திக்கமுடியாதுள்ளது. அவ்வளவுக்கு அவர் ஆகாயத்தில் பறப்பவர், கட்சியின் நிலத்திலுள்ள வெறும் பூச்சி புழுக்கள் என்பதுபோல் ஜெயலலிதா நடந்துகொள்வது சகலருக்கும் வெறுப்பைத்தரும் விடயமாகும். முத்துசாமி போன்ற மூத்த தலைவர்கள் ஜெயலலிதாவுக்காக அன்றி, எம்.ஜி. ஆருக்காகவே பல அவமானங்களின் மத்தியிலும் கட்சியில் தொடர்ந்தனர். ஒரு கட்டத்தில் இதனால் இனிமேலும் பலன் இல்லை என இவர்கள் கருதத் தொடங்கி இருப்பதையே முத்துசாமியின் கட்சிமாறல் கோடி காட்டுகிறது எனலாம்.

கொங்குமண்டலத்தின் பிரதான நகரான கோவையில் தமிழ் செம்மொழி மாநாடு நடத்துவதன் மூலமும், முத்துசாமி போன்ற மூத்த அ.தி.மு.க. தலைவர்களை தன்வசப்படுத்துவது மூலமும் கொங்குமண்டலத்தில் தன் செல்வாக்கை அதிகரிக்க தி.மு.க தொடர்ந்து முயற்சித்து வருகிறது. தன் கட்சி எங்கு பலவீனமாக உள்ளதோ அங்கு தேடிப்பிடித்து கட்சியை வளர்க்கும் சரியான நடவடிக்கையை கருணாநிதி எடுத்துள்ளார். எதிரியின் பலம், பலவீனம் அதுபோல் தனது சொந்த பலம், பலவீனம் என்பவற்றை நாடிபிடித்துப் பார்த்து அரசியல் காய் நகர்த்தலில் தி.மு.க தலைமை ஈடுபட்டுள்ளது கவனிக்கத்தக்கது. ஜெயலலிதாவோ இவ்வாறு சிந்தியாது அடுத்த வருடம் தன்மடியில் முதலமைச்சர் பதவி வந்துவிழும் எனக் கனவு காண்பவராகவே உள்ளார். 62 வயதான ஜெயலலிதா 86 வயதான கலைஞரை விட உசார்குறைந்த ஒருவராகவே தெரிகிறார். சமீபத்தில் தொண்டர் குறை கேட்பு மனுக்கள் வாங்கும் நிகழ்வை ஜெயலலிதா கட்சி அலுவலகத்தில் ஒழுங்கு செய்தார். இது அவரது வழமையான பகட்டு படாடோபத்துக்கு முரணான ஒரு நல்ல சமிக்ஞையாக கட்சியினரால் கருதப்பட்டது. பலரும் உற்சாகத்துடன் மனுக்களை எடுத்துக் கொண்டு அம்மாவைக்காண வந்தனர். அந்தோ ஒரு மணித்தியாலம் மட்டும் மனுக்களை வாங்கிய அவர் இடைநடுவில் புறப்பட்டு சென்றுவிட்டார். இப்போது கொடநாடு எஸ்டேட்டில் ஓய்வெடுப்பதாகத் தகவல். எம்.ஜி.ஆர் 1987இல் சாகும் வரை இவ்வாறு மனுக்களை தொண்டர்களிடம் பெறும் சந்திப்புகளை நடத்திவந்தார். 22 வருடங்களுக்குப் பின்பு முதல்முறையாக அ.தி.மு.க தொண்டர்கட்கு இந்த வாய்ப்பு கிடைத்தது. அது ஒருமணிநேரத்துடன் முடிக்கப்பட்டதில் பல மைல் தொலைவு கடந்து வந்த தொண்டர்கள் ஏமாற்றமடைந்தனர். இந்தவகையில் 86 வயதான கலைஞர் ஒருநாளில் சந்திக்கும் தொண்டர் தொகையும் தலைவர்கள் எண்ணிக்கையும் பல மடங்கு அதிகமாகும்

இந்த லட்சணத்தில் கோவை செம்மொழி மாநாட்டின் பின்பு தி.மு.க ஆட்சி அகலும் என அ.தி.மு.க

(23 ஆம் பக்கம் பார்க்க)



# உயிர் வலிக்கும் கணங்கள்...!!

பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போன கதையாய் எமது கதை அமைந்து போயுள்ளது. கலண்டர் முடிவு வருடப்பிறப்பு. ஏதோ பாதுகாப்பான பிரதேசத்தில் அமைதி வாழ்வு எனும் பெயரில் நான்கு முற்கம்பி வேலிக்குள் வாழும் அகதிகளில் நானும் ஒருவன்தான். மலரும் இவ்வாண்டை அந்த ஆண்டுகளுடன் எண்ணும்போது மனம் வெம்பி வெடிப்பதை எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது!

நாமும் புதுவருடப் பிறப்பு, தைப் பொங்கல் கொண்டாடி மகிழ்ந்தோம். எமக்கும் நண்பர்கள், உறவுகள் என்று எல்லோரும் இருந்தார்கள். நத்தாருக்கு 10 நாட்களுக்கு முந்தியே நண்பர்களின் ஆக்கிரமிப்பு வீட்டை சூழ்ந்துவிடும். தடல் புடலாக வீட்டு வேலைகள். சுழற்சியில் ஒவ்வொருவர் வீடுகளுக்கும் 'விசிற்'. கொண்டாட்டத்துக்கென்றே போட்டி போட்டுக்கொண்டு செலவு செய்யும் நட்புகள். பலர் இருந்தும் சில உயிர்த் தோழர்கள் சிவன் பாதி - சக்தி பாதி போல் இணைந்தே வாழ்ந்தோம். ஒரு தட்டில் உணவு உண்டோம். அருந்தும் தேநீரில் பங்கு. ஒன்றாய் படுத்துறங்கிய நண்பர்கள். உயிருக்குயிராய் வாழ்ந்தவர்கள். எல்லோரும் இன்று எங்கோ? ''அழுதழுது துவண்டாலும் மாண்டார் வருவாரோ மானிடத்தில்''. ஏதோ தற்காலிக விடுப்பில் முகாமிருந்து வெளியிடம் சென்று வரவென சென்றால் பட்டாசு வெடியோசைகள்

## அதே வேட்டோலிகளில் பட்டாசுகள்



நாலாபுறமும். மீண்டும் அந்த நாள் ஞாபகத்தை வலிமைப்படுத் துகிறது.

அந்த வெடியோசைதான் இன்றும் எம் நெஞ்சை விட்டகலாது வெதுப்புகிறது. மனிதாபிமானம் பற்றி இன்று அரசியல் மேடைகளில் நின்று கூத்தாடுகிறார்கள். அன்று யுத்த வெளியில் மனித வேட்டையாடியவர் களை உலகமே கண்களை மூடி வேடிக்கை பார்த்தது. அப்போது தமிழ் மக்கள் மீது யாருக்கு மனிதநேயம் இருந்தது. ஏதோ, நமக்கு நாமே என்று பணியாற்றியவர்களுடன் மனம் பொறுக்காத நானும் என்னால் இயன்ற உதவிகளை செய்யத்தவறவில்லை.

அன்று தற்காலிகமாக இயங்கிய மாத்தளன் மருத்துவமனை வாசலில் நின்றேன். தெற்கு, மேற்கு புறமாக திடீர் என கடும் சமர். எண்ணிலடங் காத எறிகணைகள். எங்கும் மரண ஓலம். சற்றும் தாமதம் இன்றி பார ஊர்தி, உழவு இயந்திரம் போன்ற பல வாகனங்களில் காயமடைந்தவர்களைக் கொண்டு வந்தார்கள். அந்த ஒரு பார ஊர்தியில் மட்டும் 48 இற்கும் மேற்பட்டோரை கொண்டு வந்தார்கள். துப்பாக்கிச் சன்னங்களும் எறிகணை வீச்சுக்களும் சற்றும் தளரவில்லை. மேலும் காயப்பட்டோரை இறக்கத் தாமதித்தால், அவர்களின் உயிருக்கே ஆபத்து என்பதை புரிந்து கொண்டு முன்வந்த மருத்துவமனை ஊழியர்களுடன் நானும் இணைந்து கொண்டேன். குறைந்தது அதில் வந்தோரில் 10 வரையானோர் வரும் வழியிலேயே இறந்து விட்டார்கள். காயப்பட்டவர்களை வைப்பதற்கு கட்டட வசதிகள் போதாது. அங்குள்ள மரங்களின் கீழ்தான் வரிசையாக அடுக்கினார்கள். போதிய மருத்துவ வசதியும் இல்லை. வலி தாங்க முடியாது வயது வேறுபாடின்றி ''அண்ணை காப்பாற்றுங்கோ. மகன் காப்பாற்றுங்கோ'' என்று ஓலம்.

அவ்வார்த்தைகளைக் கூட பேசமுடியாது கண்முன்னே கண்மூடி விடைபெற்றன பல உயிர்கள். அவ்வேளையில் எறிகணை வீச்சில் எஞ்சிய சில உறவுகள் என்னையும் தெய்வமாக நினைக்கத் தவறவில்லை.

''அண்ணே, கொஞ்சம் முன்னுக்கு என்ர கணவரைக் கொண்டு வந்திருந்தால் காப்பாற்றியிருக்கலாமோ? ஒருக்கால் பாருங்கோ அவர் சாகமாட்டார். அவர் எந்தப் பாவமும் செய்யாதவர்'' என வயிற்றில் ஒரு குழந்தையுடன் கைகூப்பி வானத்தை நோக்கி அழ மறுபுறத்தில் ''என்ர அப்பா மதிய உணவு சாப்பிட்ட குறையில் ஷெல் விழுந்துட்டுது. அவரைக் காப்பாற்றுங்கோ'' என்று மரண அவலங்கள். அனைவரிலும் இரத்த வாடை. செய்வதறியாது நின்ற மருத்துவ ஊழியர்க ளுடன் முதலுதவிக்கு உதவினேன். மீண்டும் இரண்டு - வாகனங்கள் அதிவேக மாக மருத்துவமனை வளாகத்துக்குள் நுழைய சற்றும் தாமதம் இன்றி காயக்காரர் வருவதை இணங்கண்டு வாகனம் நின்ற வுடன் கதவைத் திறந்து உள்ளே சென்றேன். படுகாயமடைந்த நிலையில் பெயர் சொல்லி அழைத்து அழுதார்கள். ஒரு கணம் என் இதயம் மரணித்தாலும் மறுகணம் அவர்களையும் இறக்கி சற்று முன் வந்த காயக்காரர்களுடன் இணைந்தேன். இதில் வந்தவர்களிலும் சிலர் உயிர் நீங்க மனமுடைந்து நடைபிணமாய் வீடு நோக்கி நடந்தேன்.

முல்லை. து. தினேஸ்

## சிதறிப்போன சிறுவர்கள்



குண்டு வீச்சால் மக்கள் இறக்க சரவோலம்தான் வீடெங்கும். கைகள் இல்லாமலும், கால்கள் இல்லாமலும் அழுது துடிக்கும் மக்கள். பட்டினியின் கொடூரத்தால் கஞ்சிக் கொட்டிலில் வரிசையாக நின்ற சிறுவர்கள் கஞ்சிப் பாத்திரத்துடன் அவ்விடத்திலேயே இறந்து கிடக்கும் பரிதாபம். யாரை யார் காப்பாற்றுவது என்ற நிலைமை.

இரணைப்பாலையில் நான் சென்று கொண்டிருந்த போது இறந்த ஒருவரின் சடலத்தின் மீது மிதித்து விட்டேன். நள்ளிரவு நேரம் ஒன்றுமே தெரியவில்லை. நான் பயம் காரணமாக பெரிய சத்தமாகக் கத்தினேன்.

விசுவமடுவில் ஐந்து சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அருகாமையில் வந்து எறிகணை வீழ்ந்ததால் அவ்விடத்தி லேயே அவர்கள் சிதறிப்போனார்கள். ஊரையிழந்து, உறவையிழந்து தவித்துக் கொண்டு இருக்கும் வேளை நாளுக்கு நாள் நல்ல செய்தி கிட்டாதா என எதிர்பார்க்கும் போது துக்கச் செய்திதான் கிடைக்கும். மாத்தளன் கடற்கரையில் எல்லாம், மக்களின் உடமைக ளும், பிணங்களும் தான் காட்சி அளிக்கும். வைத்தியசாலை, தேவாலயங்கள், பாடசாலைகள் போன்ற இடங்களில் தான் மக்கள் கூடுதலான பாதுகாப்பைத் தேடுவார்கள். அங்குதான் கூடுதலான எறிகணை கள் வந்து வெடிக்கும். இதனால் நிறைய பொதுமக்கள் காயமடைந் திருக்கிறார்கள். காயமடைந்தவர்கள் பலர் அவ்விடத்திலேயே மீண்டும் எறிகணை வீழ்ந்ததால் பரிதாபகரமான நிலையில் உயிரிழக்க நேர்ந்தது.

18 வயது மதிக்கத் தக்க ஒரு பெண் ஒற்றைக் கண் இழந்த நிலையில் தனது தாயாருடன் அழுது கொண்டிருந்தாள். நான் உடனே அப்பெண்ணை அழைத்து வைத்திய சாலைக்கு கொண்டுசென்றேன். அந்தப் பெண் சொன்னாள் ''அப்பாவையும், சகோதரர்களையும் காணவில்லை. அம்மாவும், நானும் தான் ஓடிவந்தோம்'' என்று. ''எனது நண்பியின் குடும்பம் முள்ளிவாய்க் காலை நோக்கி வந்து கொண்டிருக்கும் போது அவர்களுடைய அப்பா இறந்து விட்டார். எனது நண்பி அவ்விடத்திலேயே காயமடைந்தாள். அவளை உடனே வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்கள். அவள் இப்போது உயிருடன் இருக்கிறாளா? இல்லையா? என்பது அவர்களது பெற்றோருக்குக் கூடத் தெரியாது'' என்றாள். இன்னும் இவர்களைப் போல் எத்தனை பேர் பிள்ளைகளை இழந்த நிலையில் பிள்ளைகள் இன்னும் உயிருடன் இருக்கின்றார்கள் என்று நம்பிக் கொண்டி ருக்கிறார்கள். இவர்களின் கனவு நனவாக வேண்டும்.

எம்முடன் காலையில் சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்த நண்பி மாலை யில் பிணமாக வீடு வந்தாள். இந்தக் கொடூர சம்பவங்களை எல்லாம் நினைக்கும் போது எம் உயிர்கள் வலிக்கின்றன'' என்றாள். தாயில்லாமல் பிள்ளையும், பிள்ளையில்லாமல் தாயும், கணவனில்லாமல் மனைவியும், மனைவி யில்லாமல் கணவனும். இருவருமில்லாமல் பிள்ளைக ளும் - இந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர் களை எப்படித்தான் மறக்க முடியும்? இவர்கள் எத்தனை கனவுகளை சமந்திருப்பார்கள்? எல்லாம் பொய்யாகிப் போய்விட்டன. சமாதானத்துக் காய் மீட்கப்பட்ட நகரம் இது - சப்தமில்லாமல் பறக்கிறது தேசிய கொடி மட்டும்.

ஏ. மூ

**அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்**

# பேச்சில் ஒன்று; செயலில் வேறொன்று மனதில் மற்றொன்று!

மனித உரிமை விடயங்களை விடுத்து இலங்கையின் அபிவிருத்தியில் அக்கறை செலுத்துங்கள் என்று அண்மையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அமெரிக்காவுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

ஒரு நாட்டினுடைய அபிவிருத்தியில் செல்வாக்கு செலுத்தக்கூடிய அரசியல், சமூக, பொருளாதார சூழல் நிலைகளில் மிகவும் முக்கியமானவைகளாகவும், அடிக்கட்டுமானமாகவும் விளங்குவது சமூக ஆரோக்கியமே. இலங்கையில் நெடுங்காலமாக தமிழ் - சிங்கள சமூகங்களுக்கிடையேயான விரிசல் நாட்டின் முழு அபிவிருத்தியையும் பாதித்துள்ளதுடன் இங்கு காணப்படக்கூடிய பொருளாதார விருத்திக்கு முக்கியமான ஏனைய வளங்களையும் பயனற்ற தாக்கியுள்ளது. இதனை அனைவரும் புரிந்துகொள்வர்.

இந்நிலையில் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸின் அமெரிக்காவுக்கான ஆலோசனை மலர்ந்திருப்பது ஆச்சரியமான விடயம்.

ஒரு நாட்டுக்குள் நிலவும் சமூக முரண்பாடுகள் அந்த நாட்டின் அரசியல், பண்பாடு, கலாசாரம், மொழி, பொருளாதாரம் என்று எல்லாவற்றையும் கேள்விக்குறியாக்கி நிற்க, அதற்குக் காரணமான இனமுரண்பாடு தீர்த்தால் மட்டுமே அபிவிருத்தி சாத்தியம் என்பதை சர்வதேச சமூகம் தெரியாமல் இருக்க வில்லை. ஆனால், அவர்கள் இந்த விடயத்தில் மௌனமாகவே செயற்படுகின்றனர்.

இருப்பினும் இலங்கையில் இறுதிக் கட்டப் போரின்போது நடைபெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள், போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

நாளுக்கு நாள் கிடைக்கும் மனித உரிமை மீறல், மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான ஆவணங்கள், புகைப் படங்களுடன் ஐ.நா. சபை, சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச்சபை என சர்வதேச அமைப்புகள் இவ்விடயத்தில் இலங்கைக்கு நெருக்கடிகளை அதிகரித்த வண்ணம் உள்ளன.

'சனல் - 4' தொலைக்காட்சி, தொடர்ச்சியாக வெளியிட்டுவரும் இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான விவரணங்கள் அரசுக்குப் பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்த அதிலிருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கில் இலங்கை அரசினது அரசியல் செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இலங்கையினுடைய ஆட்சியாளர்கள் உள்ளூர் மேடைகளில் பேசும் பேச்சுக்கும் வெளிநாடுகளில் பேசும் பேச்சுக்கும் இடையில் கருத்து முரண்பாடும் அவர்களது இருநிலைத் தன்மையும் வெளிப்பட்டிருப்பது வழக்கம்.

தமது நாட்டுக்குள் நாடாளுமன்றத்திலோ, விசேட நிகழ்வுகளின் உரைகளிலோ, தேர்தல் பிரசாரங்களின்போதோ இனவாதத்தையும், அதிகாரத்தினையும் செப்பும் அரசியல்வாதிகள் அதன்மூலம் தமது ஆட்சிப் பரப்பைத் தக்கவைத்துக்கொண்டு வேற்றுநாடுகளுக்குச் செல்லும்போது தமது நாட்டுக்குள் இனப்பிரச்சினை இருக்கின்றது, சிறுபான்மையினரான தமிழர்களுக்கு, ஒரே நாட்டுக்குள் எல்லா உரிமைகளும் வழங்கப்படும், இதற்கு தாம் எப்போதும் தயாராகவே உள்ளோம் என்ற தொனியில் தமது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

ஆனால், இதன்மூலம் எட்டப்பட்டவை பேரழிவுகளும், உயிரிழப்புக்களும்தான். ஒரு நாட்டுக்குள் இரு சமூகங்களுக்கிடையில் பிரச்சினை உள்ளது என ஏற்கும் அரசதரப்பு அதனை தீர்த்து அதன் வாயிலாக அபிவிருத்தி பற்றிச் சிந்திக்கும்போதும் அயல் நாடுகளைக் கோரும்போதும் அந்தச் செயலை எல்லாச் சமூகங்களும் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் பொருளாதார அபிவிருத்தியின் அடிக்கட்டுமானமான மக்கள் பிரதிநிதிகள் பிரச்சினைகள் பற்றிப் பேசாது, அபிவிருத்தி பற்றிப் பேசுங்கள் என்ற கருத்து எந்தளவுக்கு அபிவிருத்தியை ஏற்படுத்தும் என்பது சந்தேகமே. நாம் எதை நினைக்கின்றோமோ அதையே சொல்ல வேண்டும். எதைச் சொல்கின்றோமோ அதையே செய்ய வேண்டும். இதன்மூலமே திருத்தமான, முரண்பாடற்ற செயல் புத்தூக்கம் பெற்று பிரச்சினையின் தீர்வாக அமையும்.



இதிலிருந்து மாறுபட்டு நினைப்பது ஒன்று, சொல்வது வேறொன்று, செய்வது இன்னொன்று என்று அமைந்தால் எங்கணம் தீர்வு?

இலங்கையின் இனப்பிரச்சினை ஒரு ஒட்டுமொத்த அழிவுக்கட்டத்துக்கு வருவதற்கு தீர்க்கமற்ற சிந்தனைச் செயற்பாடுகளே வழிகோலின. இதனை காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த அரசியல்வாதிகள் பொறுப்பேற்று திருப்தியாக வளர்த்துள்ளனர். இதன் காரணமாக இலங்கையின் அபிவிருத்தியும் அரசியலும் இந்தளவுக்கு வாறுபட்டுக் காணப்படுகின்றன. மக்கள் மீதான அடக்குமுறைகள் மனித உரிமை மீறல்கள், அச்சுறுத்தல்கள், பேச்சுச் சுதந்திரமின்மை என்று படிப்படியான முரண்பாடுகள் அழிவின் பாதையில் நாட்டை நகர்த்திச் சென்றுள்ளன. மனித உரிமை மீறல், சம்பவங்கள் இலங்கையில் இடம்பெறவில்லை அல்லது அதற்கு அரசு பொறுப்பில்லை என்ற பாணியில் அரசின் போக்கு நிலவுவது பின்வரும் கேள்விகளைத் தோற்றுவிக்கின்றன.

* மனித உரிமைகள் கண்காணிப்பகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள கடத்தல், காணாமல்போதல், கொலை, கொலை மிரட்டல் சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகள் எங்கணம் தோன்றின?

* வன்னி யுத்தத்தின்போது மக்கள் தமது சொத்துக்கள் எல்லாவற்றையும் இழந்து அகதிமுகாம்களில் இதுவரையில் அடைபட்டிருப்பது ஏன்?

* இராணுவச் சீருடை அணிந்தவர்கள் மக்களை (இளைஞர்கள்) சுடுவது போன்ற காட்சிகள் எப்படி வெளியாகின?

* தமிழ் மக்கள் பகுதிகளில் ஏராளமான விதவைப் பெண்கள் (இறுதிப் போர்க் காலத்தில்) அடையாளப்படுத்தப்படுவது எப்படி?

* குடும்பத்தவர்கள், முதியவர்கள், இளையவர்கள், சிறுவர்கள் என ஏராளமானவர்கள் தமது அங்க அவயவங்களை இழந்தது எப்படி?

* பாதுகாப்புப் பகுதி என அறிவிக்கப்பட்ட இடங்களுக்குள் எறிகணைகளும், விமானக் குண்டுகளும் எப்படி வீசப்பட்டன?

இது போன்ற பல கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததே.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக விடுதலைப்புலிகள் மீது, எல்லா வளங்களையும் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட போர் என்றால் அதில் எந்த தவறும் இழைக்காத மக்கள் சமூகம் சீர்குலைக்கப்படுவது எப்படியான மனித தர்மம் என்று சிந்திக்கத் தோன்றுகின்றது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெசாக் வாழ்த்துச் செய்தியில் புத்த பகவானின் போதனைகளையும், பஞ்சமா பாவங்களையும் நினைவுபடுத்தியிருந்தார். இந்த பௌத்த சமய தர்மங்கள் புத்தபகவானால் போதிக்கப்பட்டவை. இந்த அறிவுரைகளின்படி இலங்கையை அபிவிருத்தி செய்வதனைத்தான் எல்லா மக்களும் விரும்புவார்கள். ஆனால், அவை வாழ்த்துச் செய்திகளாக மட்டும் நின்றுவிடுவது இலங்கை மக்களின் குறிப்பாக தமிழ் மக்களின் துரதிர்ஷ்டமே.

தமக்கான எல்லா உரிமைகளையும் பெற்று நாட்டின் எல்லாமக்களையும் போல சுதந்திரமாக வாழ்வதற்காக அகிம்சை வழியாகவும் ஆயுத வழியாகவும் போராடிய தமிழ் மக்களுக்கு கிடைத்த ஏமாற்றங்களுக்கு சிங்கள அரசியல்வாதிகளின் கடும்போக்கும், கொள்கைகளும்

செந்தில்குமார்

காரண மாக அமைந்தமை வரலாறாகிவிட்டது.

காலத்துக்கு காலம் அரசமைப்பைக் கைப்பற்றிய ஆட்சியாளர்களும், இந்திய அரசியல்வாதிகளும் தமிழ் மக்களின் அரசியல், வாழ்வுரிமைகளில் பாராமுகமாகவே செயற்பட்டுள்ளனர்.

இந்திய அரசியல்வாதிகளுடன் இலங்கை அரசு மேற்கொண்ட ஒப்பந்தங்களாலோ; இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்ததாலோ தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியவில்லை. அவர்கள் பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தியே இருந்தனர். இதில் இருந்து இந்திய அரசு தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள மன இறுக்கம் வெளிப்படுகின்றது.

இலங்கையின் ஆட்சியாளர்களாலோ, அல்லது இந்திய அயலுறவுக் கொள்கைகளாலோ இலங்கையின் இனப்பிரச்சினை ஒரு பலாபலனையும் எட்டவில்லை என்பதும், மனங்களால் அவர்கள் கொண்டுள்ள அலட்சியப் போக்கே இதற்குக் காரணம் என்பதும் இங்கு வெளிப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் வாழ்வியல் ரீதியாக பல்வேறு பட்ட துன்பங்களுக்குள் வாழ்கின்றனர். இன்னமும் அகதி வாழ்க்கை தொடர்கின்றது என்பதனை எல்லா மட்டத் தவரும் குறிப்பாக இலங்கையின் அரசியல்வாதிகளும் சரி, இந்தியா, அமெரிக்கா ஐ.நா. போன்றவற்றின் பிரதிநிதிகளும் சரி அறிவார்கள். ஆனால் கொள்கை அடிப்படையில் இலங்கைக்குள் வெளிசக்திகள் எதையும் புரிந்து விட முடியாத அளவுக்கு இலங்கை அரசினது வெளியுறவுக் கொள்கைகள் இறுக்கமாகப் பேணப்பட்டு வருவது முக்கியமாக உள்ளது.

இது தென் இலங்கை ஆட்சியாளர்களில் குறிப்பாக தற்போதைய மஹிந்த சுற்றுவட்டத்தில் மிகப்பெரும் பொறுப்பாகப் பேணப்பட்டு வருகின்றது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அமெரிக்காவில் தெரிவித்த கருத்துக்கள் இலங்கையில் நடைமுறையில் இருப்பதில்லை. இதேபோல இலங்கையில் தெரிவிக்கும் - கைக்கொள்ளும் யுக்திகளை வெளியுலகில் தெரிவிப்பதில்லை. இது அவர்களினது தந்திரோபாயம்.

இதன் அடிப்படையிலேயே அமெரிக்க அரசுக்கு அவர் ஆலோசனை வழங்கியிருத்ததும் அமைகின்றது. இந்த கருத்து மறுபுறமாக இன்னொரு விடயத்தை வெளிப்படுத்துவதாக உணரமுடியும். அதாவது, இலங்கையில் நடைபெற்ற சம்பவங்களுக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கும் இலங்கை அரசு பொறுப்புக் கூறும். அதுபற்றி வேறுயாரும் பேசிக்கொள்ளத் தேவையில்லை. விரும்பினால் கொஞ்சப் பணம் தாருங்கள் நாட்டை அபிவிருத்தி செய்கிறோம். பிரதி உபகாரமாக சில கம்பனிகளைத் தருகிறோம். நடத்தி இலாபமீட்டுங்கள். உங்களுக்கு மனித உரிமைகள் பற்றி பேசவேண்டிய அவசியம் ஏற்படாது என்பதே ஆகும்.

அரசின் இவ்வாறான பார்வை அல்லது போக்கு இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றிய எந்தவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காது அப்படியே கிடப்பில் போட்டு மூடுவதுடன் மேலும் நடைபெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களை வெளியுலகிற்கு தெரியாது மறைக்கும் முயற்சியாகும்.

வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணங்களையோ, விசேட அழைப்பின் பெயரிலான பயணங்களையோ மேற்கொள்ளும் செல்லும் இலங்கை ஆட்சியாளர்கள் வெளிநாடுகளில் தெரிவிப்பதை உண்மையான மனநெகிழ்வுடன் நடைமுறைப்படுத்தினால் அல்லது இலங்கையில் நடைமுறையில் இருப்பதையே வெளியுலகுக்கு நேர்மையாகத் தெரிவித்தால் நாட்டுக்குள் இருக்கும் இனமுரண்பாடு இவ்வளவு தூரம் பூதாகாரமாக வேண்டிய தேவை இருக்காது.

எனவே, மனதில் ஒன்றை எண்ணிக் கொண்டு செயலில் வேறு எதையோ செய்து மேலும் பிரச்சினைகளை உருவாக்கி அவற்றை வாயால் வேறு விதமாகப் பரப்பும் தென்னிலங்கை அரசியலில் மாற்றம் இடம்பெற வேண்டும். அப்போது தான் இலங்கையில் எல்லாச் சமூகத்தவரும் எல்லா உரிமைகளையும் பகிர்ந்து கொண்டு வாழமுடியும். இல்லையேல் பிரச்சினைகள் வேறு வடிவங்களை பிரசவிக்கலாம்.

# நெப்போலியன் இறந்தது எப்படி?





'நெப்போலியன் போனபார்ட் எப்படி இறந்தான்?' ஐரோப்பா பல்லாண்டுகளாக விடை தேடிக் கொண்டு இருக்கும் கேள்வி இது. ஏனெனில், மைனஸ் 26 டிகிரி குளிரில் குதிரைகளின் ரத்தத்தைக் குடித்து நெப்போலியன் உயிர் வாழ்ந்தவன். தீவுச்சிறையில் இருந்து கடலை நீந்திக் கடந்த மாவீரன் நெப்போலியன்.அவன் தானாக நோய் வாய்ப்பட்டு இறந்தான் என்றால், எப்படி நம்புவது? 'தனிமைச் சிறையில் நெப்போலியனுக்கு என்ன நடந்தது?' என்பதை அறிய யாருக்கும் எந்த துப்பும் அப்போது கிடைக்கவில்லை.

1816 ஆம் ஆண்டில் இருந்து 1821 ஆம் ஆண்டில் அவன் இறக்கும் வரை உதிர்ந்த முடிகள் ஆய்வுக்குக் கிடைத்தன. அப்போதுதான் நெப்போலியனின் முடிகளில் ஆர்சனிக் அமிலம் கலந்திருந்தது முதல் துப்பாகக் கண்டுபிடிக்கப் பட்டது. 'ஆரோக் கியமான ஒரு மனிதரின் முடியில் சோதனையில் வெளிப்படையாகத் தெரியும் அளவுக்கு ஆர்சனிக் இருப்பது இல்லை. எனவே, நெப்போலியன் மரணத்துக்குக் காரணம் விஷமாக இருக்கலாம்' என்று கண்டு பிடித்தார்கள். 'விஷம் கலந்த காற்றை சுவாசித்ததாலோ, விஷம் கலந்தவற்றை உண்ட தாலோ நெப்போலியன் மரணம் அடைந்திருக்க லாம்!' என்று லக்ஸம்பேர்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரொபர்ட் வென்னிங் அறிவித்தார்.

பின்பு, நெப்போலியனின் அறை பற்றிய ஆய்வுகள் இரண்டு துப்புக்களை அளித்தன. ஒன்று, அங்கு இருந்த ஓவியம். இரண்டாவது, அந்த அறையின் சுவரை அலங்கரித்த பேப்பர் கள். இவை இரண்டிலுமே 'மெள்ளக் கொல்லும்' நஞ்சு பூசப்பட்டு இருந்தது. 'அந்த ஓவியத்தில் பாம்பின் விஷத்தை ஒரு வண்ணமாகப் பயன் படுத்தி இருந்தார்கள். அந்த ஓவியத்தின் அருகிலேயே இருந் ததால், விஷத்தைச் சுவாசித்துச் சுவாசித்து நெப்போலியன் இறந்துவிட்டான்!' என்று ஒரு தரப்பு ஆய்வாளர்கள் சொன்னார்கள்.

சுவர்ப் பேப்பரை ஒட்டும் பசையில் விஷத்தைக் கலந்திருந்தார்கள். பசி தாங்க முடியாமல் நெப்போலியன் பேப்பரைக் கிழித்துத் தின்றதால் இறந்தான் என்று இன்னொரு தரப்பு அறிவித்தது. இன்னும் ஊர்ஜிதமான உண்மை வெளிவந்த பாடு இல்லை!



'டோக் ஷோ'வில் இருந்து ஓய்வுபெற இருக்கும் ஓப்ரா வின்ப்ரே, புதிதாகப் பொழுதுபோக்கு சேனல் ஒன்றைத் தொடங்கி இருக்கிறார். இதுவரை தான் பேட்டி கண்ட அத்தனை பிரபலங்களையும் தொடக்க விழாவுக்கு அழைக்க இருக்கிறார். ஒபாமா, பில்கேட்ஸ் என நீளும் இந்த வி.ஐ.பி. பட்டியலில் இடம் பிடித்திருக்கும் ஒரே இந்தியர்.. ஐஸ்வர்யா ராய்.

## ஓப்ரா வின்ப்ரே



சூரியா நடிக்க இருக்கும் 'ஏழாம் அறிவு' படத்தில் ஸ்கூட்டர் ஓட்ட வேண்டும்' என்று ஏ.ஆர்.முருகதாஸ் சொன்னதற்காக, இஷ்டப்பட்டு எட்டு போட்டுக்கொண்டு இருக்கிறார் ஸ்ருதிஹாசன். விமானம் ஓட்ட வேண்டும் என்பது தான் ஸ்ருதியின் ஆசை.

## ஸ்ருதி...

# செயற்கைக் கண்



மனித உறுப்புகளுள் மிக முக்கியமானது கண். இதிலுள்ள 'கோர்னியா' எனப்படும் விழி வெண்படலத்தின் மூலமே உலகில் நடக்கும் அத்தனை சம்பவங்களையும் மனிதன் பார்த்து ரசிக்கிறான். சிலருக்கு பிறவியிலேயோ அல்லது விபத்தின்போதோ கோர்னியா பாதிக்கப்பட்டு பார்வை இழப்பு ஏற்படுவதுண்டு. உலகம் முழுவதும் சுமார் 4.9 மில்லியன் பேர் கோர்னியா குறைபாடு உடையவர்கள் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இவர்களுக்கு உதவும் விதமாக பிளாஸ்டிக்கால் ஆன செயற்கை கோர்னியாவை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கி இருக்கின்றனர்.



ஜெர்மனியில் உள்ள பரான்ஹோபர் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஜோச்சிம் ஸ்டோர்ஸ்பெர்க் என்பவர், இந்த செயற்கை கோர்னியாவை வடிவமைத்துள்ளார். ஹைட்ரோபோபக் பாலிமர் என்ற பொருள் மூலம் இந்த கோர்னியா உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பொருளானது, கண் மருத்துவத்தில் நீண்ட காலத்திற்கு செயலாற்றக் கூடியது.

முதலில் பல்வேறு வகையான சிறப்பு பாலிமர்கள் செயற்கை கோர்னியாவில் பூசப்படுகின்றன. பின்னர் அதன்மேல் சிறப்பு புரோட்டீன்கள் பூசப்படுகின்றன. இந்த புரோட்டீன்கள் கோர்னியாவைச் சுற்றி உள்ள செல்களைத் தூண்டி, பார்வையை ஏற்படுத்துகின்றன. இந்தக் கோர்னியாவை பயன்படுத்தக்கூடிய வகையில் வடிவமைக்க இன்னும் 3 ஆண்டுகள் தேவை என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



தனுஷுடன் நடித்து வரும் 'மாப்பிள்ளை' படம் இன்னும் வெளிவரவில்லை. அதற்குள் அதன் நாயகி ஹன்ஸிகா மோட்வானி 'மோஸ்ட் வோன்டட்' லிஸ்ட்டில் சேர்ந்துவிட்டார். 'ஜெயம்' ரவியுடன் 'இச்', விஜய்யுடன் 'வேலாயுதம்' என ஹன்ஸிகாவின் டைரி நிரம்ப ஆரம்பித்திருக்கிறது.

## ஹன்சிகா







"இப்படி கரிச்சுக் கொட்டறியே உன் மாமியாரை, அப்படி என்ன செய்தா?"

கேட்ட தோழியிடம் பொருமித் தள்ளினாள் கமலி. "பின்னே என்ன, அவருக்கு நாலு நாள் புவனேஸ்வரில் ட்ரெய்னிங் வந்தது. எனக்கும் சேர்த்து டிக்கெட் போட்டிருந்தார். கடைசி நேரத்தில் தனக்கு அந்த ஊர் கோயிலைப் பார்க்கவேண்டும் என்று ஆசையா இருக்கு


# மாமியார்

என்று மாமியார் சொல்ல என் டிக்கெட்டை கான்சல் செய்துட்டு அவரோட கிளம்பிட்டார். அதுதான் எரிச்சல்ல இருக்கேன். நாளைக்கே எங்கம்மாவைப் போய்ப் பார்த்துட்டு வரலாம் என்று இருக்கிறேன்"

அதே நேரம் ரயிலில்...

"என்னம்மா, அண்ணாவோடு ஒரிசா பயணமா?" என்று செல் போனில் கேட்ட மகளிடம் பதில் சொல்லிக்கொண்டிருந்தாள் கமலியின் மாமியார்.

"அதுவா? கமலியின் அம்மாவுக்கு கொஞ்ச நாளா உடம்புக்கு முடியாம இருந்தது. போய் நாலு நாள் பார்த்துட்டு வரலாம் என்று அவள் கேட்டால் உங்கண்ணன் விட்டால்தானே? அதுதான் வலுக்கட்டாயமா நான் கோயிலுக்கு வரணும் என்று சொல்லி டிக்கெட்டை மாத்திடச் சொல்லி அவள் ஊருக்குப் போயிட்டு வாறதுக்கு ஒரு சந்தர்ப்பத்தை உண்டு பண்ணிக் கொடுத்திட்டேன்"



# லயத்தின் விபத்துக்கள்

சிறுகதை

பொலிகையூர் ஸ்ரீ. சுனந்தன்

தோட்டத்துப் பிள்ளையார் கோயில் மணியோசை மணிமேகலையின் காதுகளில் கணீர் என விழுந்திருக்க வேண்டும். சலித்துக்கொண்டாள். மென்மையான குளிரையும் தன்னோடு சேர்த்துக் கொண்டு அவளது வராந்தாக்குள் வந்து கொண்டிருந்த அந்த அதிகாலைக் காற்றிறை வீடு தேடி வந்து இதமான இன்பத்தை விரட்டும் எண்ணத்துடன் விலகியி ருந்த போர்வையை இழுத்து எட்டிப் பார்த்த கால்களையும் உள்ளே சேர்த்துக் கொண்டாள். மணியோசை யையும் பெரிதாக அலட்டிக்கொள்ளாமல் வழமைக்கு மாறாக ஏதோ அலட்சியமாக தொடர்ந்தும் அந்த ஒட்டுப் போட்ட பின்னல் பாயே தஞ்சம் என்று சுருண்டு படுத்திருந்திருந்தாள். அவள் செல்லமாக வளர்த்த 'வீரா'வும் ஒன்றுக்கு நான்கு முறை மணிமேகலையை அழைத்துக் கூவிக் கொண்டிருந்தது.

மணிமேகலை மிகவும் அழகானவள். அந்த லயத்திலேயே அவள்தான் தேவதை; சுறுசுறுப்பானவள். அடக்கமானவளும் கூட. சின்ன வயசிலேயே தாயை இழந்தவள். தந்தை மோசமானவன் இல்லை. எனினும், மனைவி இறந்த நாலைந்து வருடத்துக்குள் மீண்டும் திருமணம் செய்து கொண்டான். இதைப் பிடிக்காத மணிமேகலை தனது தாத்தாவுடன் கிராமத்துக்கு வந்து சேர்ந்தாள். தோட்டத்துக் குடிசையிலேயே தங்கி படித்துக்கொண்டிருக்கிறாள். தாத்தாவும் மணிமேகலையை நன்றாக கவனித்துக்கொண்டார். ''பாப்பம்மா'' என்று செல்லம் கொஞ்சுவார். மணிமேகலையை அப்படி அழைக்கும் போது ஏதோ தன்னை விட்டுச் சென்ற புண்ணியவதி தன்ர மகள் பாப்பம்மாவே தன்னோட வாழ்ந்து கொண்டிருப்பதாக ஒரு பெருமிதம்.

'கான்ஸ்டபுள்' சின்னராசா தான் 19 வயசில எடுபிடியா தோட்டத்துக்கு வேலைக்கு வந்தவர். இப்ப அங்க எல்லாமே சின்னராசாதான். கிராமத்திலேயே தனது துணையை தேடிக் கொண்டார். மூத்தவன் பிறந்து முழுசா இரண்டு மாதமே முடியாமல் மூளைக் காய்ச்சல் என்று போய்ச் சேர்ந்தான். பிறகு 5 வருசம் தவம் கிடந்து பாப்பம்மா அவதரித்தாள். அவளுக்கு உயிர் கொடுத்துவிட்டு சின்னராசா உயிரா நினைச்சவள் தன்ர மகனிட்ட போய்விட, பாப்பம்மா சின்னராசாவிடம் வளர்ந்தாள். அவள் விளையாடி துள்ளித்திரிந்ததெல்லாம் அந்த லயத்துக் குடிசைதான். பாப்பம்மா பெரியவளானதும், ''என்ர புள்ள ரவுனிலதான் வாழவேணும்'' - என்று சொல்லி தெரிஞ்ச புறோக்கர் மூலமா அவளை அரச உத்தியோகத்தில இருக்கிற ஒருத்தருக்கு தாரைவாத்துக் கொடுத்தார். அந்த நாட்களில் இப்படி ஒரு மாப்பிளை என்றால் சீதனம் எல்லாம் எக்கச் சக்கம். ஏதோ வித்துச்சுட்டுக் கொடுத்தார். தான் தாத்தாவாக வேண்டுமென்று ஊரில இருக்கிற



எல்லாச் சாமிக்கும் நேத்திகள் வைத்து ஆறு வருசத்துக்குப் பிறகு சின்னராசாவின் அவா நிறைவேறியது. மணிமேகலை பிறந்தாள்.

நாலு வயசிலேயே தனது தாயை இழந்தவள். தந்தையின் அரவணைப்பில் வளர்ந்தாள். பின்புதான் தாத்தாவிடம் வந்து சேர்ந்தாள். இன்று தோட்டத்துப் பெரிய பாடசாலையில் உயர்தரத்தில் படித்துக்கொண்டிருக்கிறாள். மணிமேகலை படிப்பில் நல்ல கெட்டிக்காரி. சின்னராசாவும் பேர்த்திக்காக அறுபத்தெட்டைத் தாண்டியும் தோட்டத்தில கஷ்டப்படுகிறார்.

நேற்றும் கூட, வழமையா தோட்டத்தில வேலையை முடிச்சிட்டு மதியம் வந்து சாப்பிட்டுப் போன சின்னராசா வரவே இல்லை. மாலை 7.30 மணி போல; ''தோட்டத்தில ஒரே வேலை பாப்பம்மா அதான் மதியம் சாப்பாட்டுக்கும் வரத் தோன்னல்ல. நீ சாப்பிட்டியோ...?'' பாப்பம்மா மெளனமாய் நின்றாள். ''என்னம்மா? ஒரு மாதிரி இருக்கிறா? ஓ! தாத்தா சாப்பிட வரேல என்று கோவமாக்கும். அதை விடம்மா, கை காலெல்லாம் ஒரே நோவாகக் கிடக்கிது. உடம்பெல்லாம் வலிக்குது. பாப்பம்மா நீ ராத்திரி சாப்பிட்டு வராந்தாவில தனிய படுத்துத் தூங்கு. நான் அந்தக் கொட்டிலுக்க படுக்கிறேன். உடல் சுகப்படவேணும்'' என்றார். மணிமேகலை தலையசைத்தாள். தனியப் படுத்துத் தூங்கும் தாத்தா எழும்ப எப்பிடியும் 10 மணி ஆகும். எனவே, 4.30 மணிக்கெல்லாம் எழும்பி விடும் மணிமேகலை இன்னும் அந்தக் கம்பளிப் போர்வைக்குள் நெளிந்து கொண்டிருந்தாள். இரண்டாவது முறையும் கோவில் மணி ஒலித்தது. போர்வையை வி...கினாள். நன்றாக விடிந்து சூரியன் சுள்ளென்று கண்ணைக் குத்தினான். நேரம் 7 ஐத் தாண்டியிருக்கும். எழும்பி கால்கள் இரண்டையும் கட்டிக்கொண்டு பாயிலேயே இருந்தவள் இரவு முழுக்க அழுதழுது வற்றிவிட்ட கண்ணீர்த் தடங்களை நீக்கிக் கொண்டு மீண்டும் ஏதோ யோசனையில் இருந்தவளை வீரா அழைத்தான். வீரா தான் வாழும் லயத்து வீட்டுப் பகுதியில் செல்லக்கோழி. எழுந்து பாயைச் சுருட்டிவிட்டு வீராவுக்கு அரிசியையும் அள்ளிக்கொண்டு வெளியே வந்தாள் கொட்டிலுக்குள் தாத்தாவுக்கு அருகில் இரண்டு வெற்றுப் போத்தல்கள். ''பாவம் தாத்தா'' என்று எண்ணிக் கொண்டு நடந்தாள். அவர் தனியப் படுக்க உடம்பு நோவுக்குக் காரணம். வீராவுக்கு அரிசியை விசிறிக் கொண்டே கதைக்கத் தொடங்கினாள். சந்தோசமான கதைகளையே கேட்கும் வீராவுக்கு இன்று ஒரு புது அனுபவமாகப்பட்டது மணிமேகலையின் கதை.

மணிமேகலை தொடர்ந்தாள். ''வீரா! நான் அந்த மனுசனை என்ர அப்பா மாதிரித்தன் நினைச்சு வளர்ந்தன். ஆனா, அவரே என்ன இப்படி... ச்சீ! நினைக்கவே முடியல.... ஒரு கையால் கண்களைத் துடைத்தாள். ''அந்த மனுசன் என்ன தப்பாதான் பாக்குது, பேசுது, தொடுகுது என்று புரிஞ்சிருந்தா அப்பவே தாத்தாட்ட சொல்லி நானும் கொஞ்சம் விலகி இருந்திருப்பனே! அந்தப் பாவின்ர மனசு முழுக்க புழுதி எண்டு நானறிவேனோ?'' கீழே கிடந்த அரிசியை தின்டு தீர்த்துவிட்டு மணிமேகலையின் பாவாடைக்குத் தாவிய வீரா மறுகையில் கிடந்த அரிசியை கொத்திக்கொண்டு 'கொக் கொக்' என்று பெரிதாகக் கத்தியது. பொலுபொலுவென வடிந்து கொண்டிருந்த கண்ணீரைக் கட்டுப்படுத்த முயன்றாள் - தோற்றாள் மணிமேகலை.

''நேற்றுத் தாத்தா மட்டும் தோட்டத்தில வேலையை சீக்கிரம் முடிச்சுட்டு வந்திருந்தா இதெல்லாம் நடந்திருக்குமா? என்ர தலையில அவன் இதையும் சேர்த்துத்தான் எழுதியிருக்கிறான் போல. இந்தக் கொடுமை யெல்லாம் நாங்கள் வசதியில்லை, அன்றாடங்காச்சிகள் என்ற ஒரு காரணத்தால் தானே! இவனுகளிட்ட பணம் கிடக்கு, பதவி இருக்கு, ஊரில பெரிய மனுசன் எண்டு மரியாதை இருக்கு. எல்லாத்தையும் மூடி மறைச்சிடலாம்; இல்லாட்டி பணத்தால முழுங்கிடலாம் எண்டு தானே இந்த ஆட்டமெல்லாம் என்ன? இதுகளுக்கெல்லாம் பலிக்கடா தானே இந்தத் தோட்டத்துப் பொம்பிளையள்!'' என்று கதறினாள். அழுதழுது குரலும் அடைத்துவிட்டது. அடிக்கடி வீராவும் ஆமாம் போடுமாப் போல ''கொக் கொக்'' என்றது.

''நான் என்ன பாவம் பண்ணினேனோ? தெரியல வீரா! என்ர மனசுல எந்த அறுப்பும் வைச்சிருக்காம எல்லாத் தையும் சிரிச்சுக் கதைக்கிறது தப்புப் போல! தாத்தாவைப் போலதான் அந்த மனுசனோடயும் கதைச்சன். அதுக்குத் தான் பரிசா எல்லாத்துக்கும் கொள்ளி வைச்சிட்டானுகளே! மகளைப் போல இருக்கிற என்ர முகத்தைப் பாத்திட்டு, அந்த அசிங்கத்துக்கு எப்படி இப்படி நடக்கத் தேணிச்சு. இனி என்ர படிப்பு டவுனில படிச்சி பட்டம் வாங்கிற கனவு எல்லாம் என்ன ஆச்சு? எல்லாத்தையும் நேற்றே கசக்கி லயத்துக் கோடிக்க தூக்கி வீசிட்டானுகளே! அப்படியே என்னையும் கொண்ணு போட்டு போயிருக்கலாமே வீரா? எதுக்காம் இன்னும் உசுரோட வைச்சிருக்கிணம்? இது உசிரோட இருந்து எதுக்கு பாரமா? இனி எப்படி தோட்டத்தில நடமாட ஏலும்? படிக்க ஏலும்? இப்பவே தூக்கில தொங்கிடணும் போல கிடக்குது'' கதறி அழவும் முடியாமல் அரிசி தீர்ந்து விட்ட கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு வெம்பினாள் மணிமேகலை. ''வீரா! தாத்தாவ தனிய விட்டுவிட்டு போகவும் மனசில்ல. தாத்தா இன்னும் ஏலாத நேரத்தில கஷ்டப்படும். அவரின்ர கடைசி நேரத்தில அவருக்கு துணையா நான்தான் இருக்க வேணும். வெளியில திரிகிற



அருகதையும் இல்லாமப் பண்ணிட் டாங்களே! பேசாம தாத்தாவையும் கூட்டிக் கொண்டு போயிடணும். இவனுகளின்ர முகத்தையே காணக் கூடாது. அதுக்குள்ள இந்த அசிங்கம் புடிச்சவங்கள் அழிஞ்சு போறதப் பார்த்திடணும். அப்பதான் மனசில கிடக்கிற காயமெல்லாம் ஆறும். என்ர வாழ்க்கை, என்ர படிப்பு, கனவு எல்லாத்தையும் குழிதோண்டிப் புதைச்சவங்கள் நாசமாய்தான் போகணும் வீரா! நாச மாய்த்தான் போகணும். என்ர சாபத் தோட என்னைப் போல கொடுமைப் பட்ட, இதைச் சகிக்க முடியாமல் மாண்டுபோன பொம்பிளையள் எல்லாற்ற வயித்தெரிச்சலும் சேர்ந்து இந்த அசிங்கம் பிடிச்சவனு களை ஒரு நாள் எரிச்சிடும். அதையும் கண்டிடணும் வீரா!'' என்றாள். ''கொக்.. கொக்.. '' என்றது வீரா. ''அப்பதான் என்ர வலிகளெல்லாம் மறையும்!'' - என்று கூறிக் கொண்டு வீராவைத் தூக்கி முத்தம் கொடுத்து அதை ஓடவிட்டாள். அது மீண்டும் அவளின் காலடியைச் சுற்றியது.

அழுதழுது கறுத்துப்போன முகத்தையும் கழுவிக்கொண்டு தாத்தாவுக்கு தேத்தண்ணியும் ஊத்திக்கொண்டு தாத்தாவின் கொட்டிலை நோக்கி நடந்தாள். வீராவும் அவளுடனே கொட்டிலை நோக்கிச் சென்றது. என்றுமில்லாத ஓர் அலட்சியம், வெறுப்பு, நடையில் ஓர் தளர்ச்சி என்று மணிமேகலை முற்றாக மாறிவிட்டிருந்தாள். எப்போதும் வீராவுடன் சேர்ந்து ஓடித்திரியும் துடுக்குத்தனம் கொண்ட மணிமேகலை நாளை முதல் தாத்தாவுக்கு உதவியாக தோட்டத்துக்குச் செல்ல முடிவெடுத்தவள் தாத்தாவிடம் சம்மதம் வாங்க தேநீருடன் உள்ளே நுழைந்தாள்; கூடவே வீராவும்.

எத்தனை முறை தட்டியும் அசையாது படுத்துத் தூங்கும் தாத்தாவைப் பார்த்து அதிர்ந்து போனாள். அழுதழுது வற்றிவிட்ட கண்களிலிருந்து கண்ணீர் வர மறுத்தது. அவளால் அழவும் முடியவில்லை. எத்தனை இடிகளைத்தான் ஒரே நேரத்தில தாங்கும் இந்த பிஞ்சு இதயம். தேநீர்க் கோப்பை நழுவிக் கீழே விழுந்தது. தாத்தாவின் காலைப் பற்றிக் கொண்டு ''ஐயோ! தாத்தா! தனியத் தவிக்க விட்டிட்டியே!'' என்று கத்தினாள். வீராவும் காலடியில் கிடந்து கொக்கரித் தான். ''நீ எனக்குச் சொன்னத தாத்தாவும் கேக்கிறார் எண்டு அப்பவே கத்தினனே! உனக்கு விளங்கலியே என்ர கத்தல், கூவல் எல்லாம் உனக்கு எப்படிப் புரியும்.. பாவம் நீ. பாவிகள் அநியாயமாய் கொண்டுட்டாங்களே! ஒரு நல்ல மனுசனையும், மணிமேகலையின்ர வாழ்க்கை யையும்.

''கொக் கொக்கரக்கோ!'' ஊர் கேட்கக் கூவியது. கொஞ்ச நேரத்துக்குள் லயத்துப் பெண்களும் மணிமேகலைக்குப் பக்கவாத்தியம் பாடினார்கள். தாத்தாவின் இறுதிக்கிரியைகள் நடந்து சில நாட்களின் பின் மணிமேகலை எவருடனும் பேசுவது கிடையாது. எதுவும் சாப்பிடுவது கிடையாது. ஒரு மூலையில் கிடந்தாள். ''எடியே, இண்டைக்கு எங்கட எசமானும் நோனாவும் வருகினம். அவர்களுக்கு விருந்து வைக்கணும். மணிமேகலை பாவம். நாங்களே எல்லாத்தையும் செய்வம்!'' லயத்துப் பெண்டுகளின் சமையல் முடியவும் வந்து ஊர்கோழிக் கறியோட சாப்பிட்டுக் கிளம்பினார்கள். மணிமேகலைக்கு எதுவுமே புரியவில்லை. மறுநாள் காலையிலிருந்து வீரா மணிமேகலையை அழைப்பது கிடையாது. இப்போது தோட்டத்து பெண்களுடன் ஒருத்தியாக மணிமேகலையும் நிற்கின்றாள்.

***

# அபிவிருத்தி என்றால் என்ன?

இலங்கையில் அதிகம் உபயோகிக் கப்பட்டுத் தேய்ந்துபோன சில சொற்கள் உண்டு. அபிவிருத்தி, சமாதானம், இனப்பிரச்சினைக்குத் தீர்வு போன்ற சொற்கள் எந்தப் பெறுமதியும் அற்றவை யாகவே உள்ளன. இதை இன்னொரு வகையாகச் சொன்னால் இந்தச் சொற்க ளின் உண்மையான அர்த்தம் ஏமாற்றம் அல்லது சுத்த பம்மாத்து அல்லது ஏமாற்றுதல் என்பதுதான்.

கடந்த முப்பது ஆண்டுகளாக இந்தச் சொற்கள் மிக அதிகமாகப் பயன்படுத் தப்பட்டிருக்கின்றன. இந்தச் சொற்களை உச்சரித்தவர்களின் வாய்கள் களைப் படைந்திருக்க வேண்டும். இந்தச் சொற் களை எழுதிய கைகள் ஓய்ந்திருக்க வேண்டும். இந்தச் சொற்களைப் பயன் படுத்திய கணினிகள், அச்சுகள் எல்லாம் தேய்ந்திருக்க வேண்டும். இந்தச் சொற் களைக் கேட்டும் படித்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் சனங்கள் சலிப்படைத் திருக்க வேண்டும்.

ஆனால், உண்மையில் மக்கள் இந்தச் சொற்களால் சலிப்படைந்தேயுள்ளனர். அவர்களுக்கு இந்தச் சொற்களில் - வார்த்தைகளில் நம்பிக்கையே இல்லை.

என்றாலும் அரசாங்கமும், அரசியல் வாதிகளும், ஊடகங்களும், ஆய்வாளர் கள் - விமர்சகர்களும் இந்தச் சொற்களை விடுவதாக இல்லை. எந்த வெட்கமும் இல்லாமல், எத்தகைய விவஸ்தையும் இல்லாமல் அவர்கள் இந்தச் சொற்க ளைத் திரும்பத்திரும்ப பயன்படுத் துகின்றனர். இது ஏன்?

இப்போது நாம் அடிப்படையான சில கேள்விகளை எழுப்ப வேண்டிய காலத்தில் இருக்கிறோம். இது போர் முடிந்த பின்னான காலம். போருக்குப் பின்னான காலம் பற்றிச் சிந்திப்பது மிகவும் முக்கியமானது.

போர் நடக்கும் வரை சொல்வதற்கும், சொன்னதற்கும் போருக்குப் பின்னர் சொல்வதற்கும் வேறுபாடுகள் உண்டு. போர்க்கால நிலைமைகள், போருக்குப் பின்னர் இருப்பதில்லை.

எனவே, போருக்குப் பின்னரான நிலையும் நடைமுறையும் வேறு. அது வேறாகவே இருக்க வேண்டும். எனவே, இத்தகைய பின்னணியில் இங்கே 'அபிவிருத்தி' என்ற விடயத்தை நோக்க லாம் அல்லது இதன் மீது கேள்வியெழும்பலாம்.

முதலில் ஒரு விடயம். அரசியல்வாதி களும் அரசாங்கமும், ஊடகங்களும் இந்தச் சொற்களை இதுவரையிலும் மக்களுக்கெதிரான - மக்களை ஏமாற்று வதற்கான கருவிகளாகவே பயன்படுத்தி வந்துள்ளனர் இப்போதும் அதுதான் தொடருகின்றது.

எனவே, மக்கள் மிகவும் விழிப்பாக வும், எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டி யுள்ளது. சனங்களின் நலனை விடவும் அரசாங்கத்தின் நலனும், ஊடகங்களின் நலனும், அரசியல்வாதிகளின் நலனுமே முதன்மைப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த நிலை இனியும் தொடரக் கூடாது.

அபிவிருத்தி என்ற சொல், இப்போது தாராளமாகப் புழக்கத்தில் உண்டு. பொருட்களின் விலையை விட மிக மலிவான சொல் இது. ஆனால், இந்தச் சொல்லின் ஆழமும் பெறுமதியும் மிகமிக உச்சமானது.

அபிவிருத்தியி னால்தான் உலகமே இயங்கிக் கொண் டிருக்கின்றது. அபிவிருத்தியை நோக்கியே உலக இயக்கம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இலங்கையிலும் 'மஹிந்த சிந்தனை' யில் இந்தச் சொல் - செயல் பூர்வமாக் கப்படுவதர்கச் சொல்லப்படுகிறது. ஆனால், அப்படிச் சொல்லப்படுவதைப் போல அது அவ்வாறு செயலாக் கப்படுகிறதா?

போர் முடிந்த பின்னர், நாட்டுக்கு இருந்த பெரும் பொறுப்பு, போரினால் சிதைந்த நாட் டைக் கட்டியெழுப்புவதாகும். போரினால் பாதிப்படைந்த மக்களை - சமூகங்களை மீள் நிலைக்குக் கொண்டு வருவதாகும். ஆகவே, அபிவிருத்தி செய்வதாகும்.

இந்த அபிவிருத்தி என்பது தனியே கட்டுமானங்களை மட்டும் உள்ளடக்க மாகக் கொண்டதல்ல. அது அதற்கப்பால், அமைதியை அபிவிருத்தி செய்வதாக, நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதாக, சமாதானத்தை அபிவிருத்தியாக்குவதாக எனப் பல தளங்களில் நிகழ வேண்டும்.

ஆகவே, அடிப்படையில் சனங்களின் மனங்களைக் கட்டியெழுப்புவதாக - அவர்களை சமாதானத்தை நோக்கியும், அமைதியைப் பின்பற்றுவதாகவும், நம்பிக்கை கொள்வதற்காகவும் இந்த அபிவிருத்தி அமைவது முக்கியம்.

ஆனால், அப்படி எதுவும் நடப்பதா கவே இல்லை. நல்ல சமிக்ஞைகள் எதுவும் இதன் அடிப்படையில் தென்படு வதாகவும் இல்லை.

அபிவிருத்தி என்ற பெயரில் நாட்டில் ஊழலும் வளச் சிதைப்புகளுமே நடக்கின்றன.

**அருள் மனோகரன்**

குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எந்தப் பெரிய இலக்குகளையும் அபிவிருத்திப் புள்ளியில் எட்டியதாக இல்லை.

இந்த நிலை தமிழ்ப் பகுதிகளில் மட்டுமில்லை, சிங்களப் பகுதிகளிலும் உண்டு. வடக்கு - கிழக்கில் இது இன்னும் மோசம். வடக்கு, கிழக்குப் பகுதிகள் போரில் பாதிக்கப் பட்டவை. இந்தப் பகுதி மக்களின் மனதும் போரினால் - இன ஒதுக்கல் நடை முறைகளினால் பாதிக்கப்பட்டதே.

இந்த நிலையில், விசேட அபிவிருத்தித் திட்டங்களை கட்டு மானங்கள் ரீதியாக வும், மனரீதியாகவும் அரசாங்கமும், பிற சக்திகளும் மேற் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், அப்படி எதுவுமே நடப்பதாக இல்லை. இப்போது அபிவிருத்தி என்கிற பெயரில், எந்த அடிப்படையான திட்ட வரைபுகளு மின்றி அதற்காக கால நிர்ணயம் கூட இல்லாமல் 'ஏதோ நடக்கிறது' என்ற மாதிரிச் சில காரியங்கள் நடக்கின்றன. போர் நடந்த பகுதிகளில் மீள்கட்டுமானம் அல்லது தமிழ்ப் பிரதேசத்தின் அபிவிருத்தி என்ற பெயருக்காக அரசாங்கப் பிரதிநிதிகளும் அமைச்சர்களும் அடிக்கடி வந்து போகிறார்கள்.


இவர்கள் வந்துபோகும் பரபரப்பு, இந்தப் பயணங்களுக்கான ஏற்பாடுகள் மற்றும் செலவுகளின் அளவுக்கு எந்தப் பெரிய நன்மையும் முன்னேற்றமும் கிட்டியதாகத் தெரியவில்லை.

இவற்றைக் குறித்து, சரியான புள்ளி விவரங்களுடன் மதிப்பீட்டுடனும் இந்தப் பிரச்சினைகளைப் பேசுவது யார்? குறிப் பாக நாடாளுமன்றத்தில் அரசாங்கச் சார்பிலும் சரி, அரசாங்கத்துக்கு எதிர் தரப்பிலும் சரி நியாயமாகக் குரல் கொடுப்பது எவர்?

எழுந்தமானமாகப் பேசுவதால் - இந்தப் பிரச்சினையைக் கிளப்புவதால் எந்த மாற்றமும் ஏற்பட்டு விடாது. ஆதார பூர்வமாக சரியான புள்ளி விவரங்களு டன் - சரியான மதிப்பீட்டுடன் இந்தப் பிரச்சினை விவகாரமாக்கப்பட வேண்டும்.

இதற்கு சமூகத்தி லிருக்கும் சகல நிலையாளரும் சிந்திக்க வேண்டும் - முயற்சி எடுக்க வேண்டும். ஏறக்குறைய இது ஒரு நெருக்கடியை - அபிவிருத்தி குறித்த நெருக்கடியை ஏற்படுத்தும். இத்தகைய ஒரு நிலையின் வளர்ச்சியே இலங்கைத் தீவின் அபிவிருத்திக்கும், இனப்பிரச்சி னைத் தீர்வுக்கும் அமைதிக்கும், சமாதானத்துக்கும் தேவை. ★






## வாகனங்கள் கழுவும் தன்னியக்க இயந்திரம்



சென்ரல் பினான்ஸ் நிறுவனத்தில் பாவனையிலுள்ள கிரிஸ்டல் வொஷர் வகையைச் சேர்ந்த வாகனங்கள் கழுவும் தன்னியக்க இயந்திரம் விற்பனைக்குண்டு.

*Rs. 400,000/- (Negotiable)*

அலுவலக நேரத்தில் விசாரிக்கவும்

**Tel: 077 - 7736213, 077 - 7744052**



## ஆடைத் தொழிற்சாலையில் வெற்றிடங்கள்

வத்தளையில் அமைந்துள்ள பிரபல ஆடைத் தொழிற்சாலைக்கு உதவியாளர்களும், இயந்திரங்களில் வேலை செய்யக்கூடிய 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரிடத்திலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**ரூபா 17,000/-ற்கு**

மேல் சம்பளமும் குறைந்த விலையில் உணவு மற்றும் இலவச தங்குமிட வசதி இருபாலாரிற்கும் செய்து கொடுக்கப்படும்.



விலாசம் **கிலிப்டெக்ஸ்**
இல. 18, வெலியமுன ரோட்,
ஹேகித்த, வத்தளை
☎ 011 2933 0223

# நேர் வழியில் முயற்சிக்க வேண்டிய மனிதர்களின் பொருளாதார வாழ்க்கை!

தனது வாழ்க்கைக்குத் தேவையானவற்றை நேர்மையான உழைப்பின் மூலம் சம்பாதித்துக்கொள்ள வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமை மட்டுமல்ல மாட்சிமைமிக்க சிறந்த நற்குணமுமாகும்.

உழைத்திடும் திறன் இருந்தும் முயற்சிகளை மேற்கொள்ளாமல் அடுத்தவர்களை அண்டிப் பிழைத்திடுவது மிகப் பெரிய பாவமாகும். அத்தோடு அது ஒரு அவமானமுமாகும். ஒருவர் தனது உழைப்பாலேயே வாழ்க்கையை நடத்திட வேண்டும். எவருக்கும் ஒரு சுமையாக ஒருவர் இருந்திடக் கூடாது.

செய்யும் தொழிலில் பேதங்கள் பார்த்திட வேண்டிய அவசியமில்லை. நேர்மையான தொழில்கள் அனைத்தும் மதிக்கப்பட வேண்டியது. ஒருவர் தனது வாழ்க்கையை நடத்திட மேற்கொள்ளும் வழி ஒழுக்க நெறிகளுக்குப் புறம்பானதாகவோ, தவறிழைப்பதாகவோ இருந்திடக் கூடாது.

தூய்மையான உள்ளத்தோடு சமுதாயத்துக்குத் தந்திட வேண்டிய மரியாதையையும் தந்து ஒருவர் தன் கரங்களைத் தாராளமாகப் பயன்படுத்தித் துணிவோடு எந்த வேலையை வேண்டுமானாலும் செய்து தானும் தன்னைச் சார்ந்தவர்களும் வாழ்ந்திட வழிவகை தேடிக்கொள்ளலாம்.

அடுத்தவர்களிடம் கையேந்தி வாழ்வதைவிட தனது கையினால் ஏதாவதொரு நேர்மையான, சமுதாயத்திற்குத் தீங்கு தராத தொழிலைச் செய்து வாழ்வது எவ்வளவோ மேல்.




-ஏ.எச்.ஏ.ஹுஸைன்-

உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும்
குடும்பப் பிரச்சினைகள், சந்தேகங்கள்
தொடர்பான கேள்விகளுக்குப்
பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர்
ஏ.எச்.ஏ.ஹுஸைன்.
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
A.H.A. HUSSEIN
KAYAR ROAD,
ERAVUR.
ஈமெயில் :
abdulhussein525@gmail.com

## நெருப்பு விறகை அழிப்பது போல் பொறாமை நன்மை எல்லாவற்றையும் அழித்து விடும்



**கேள்வி: நான் சமூக நலன்களின் பால் அக்கறை கொண்ட ஒருவர். பொது நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் சில விடயங்கள் நடக்கின்றன. இவற்றைக் கண்டும் காணாமல் இருப்பதா அல்லது இவற்றுக்கெதிராகக் குரல் கொடுப்பதா? பொது மக்களின் நன்மையின் பொருட்டு வழக்கொன்றைத் தாக்கல் செய்து சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா?**

பதில்: நீங்கள் என்ன பிரச்சினை என்று குறிப்பிடவில்லை. இருந்தாலும் பொது நன்மையின் பொருட்டு வழக்கொன்றைத் தாக்கல் செய்து நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்பதே கருத்தாகும்.

சுற்றாடல் மாசடைதல், நுகர்வோர் பாதுகாப்பு, சமூகத்தின் நலிவான பிரிவினரின் அடிப்படை உரிமைகள் மீறப்படுதல் என்பனவற்றுக்காக பொது மக்களின் நன்மையின் பொருட்டான வழக்கொன்றைத் தாக்கல் செய்யமுடியும்.

சுற்றாடல் மாசடைதல் துறையே இலங்கையில் பொதுமக்கள் நன்மையின் பொருட்டான அதிகமான வழக்குகளைக் கொண்டுள்ள துறையாகும். 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கம் கொண்ட தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் ஏனைய விதிமுறைகள் மூலம் சுற்றாடல் பாதுகாப்பின் பொருட்டு மிகவும் முக்கியமான பல விதமான கட்டளைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

இச்சட்டத்தின் கீழேயே மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் நிறுவப்பட்டுள்ளது.

வறுமையில் வாடுவோர், வலது குறைந்தோர், இடம்பெயர்ந்தோர் அல்லது வேறு காரணங்களினால் உதவியற்ற மக்கள் தங்களுடைய அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்வதின் பொருட்டு பொதுமக்கள் நன்மையின் பொருட்டான வழக்கொன்றைத் தாக்கல் செய்ய, நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்விடத்தில் சமூகத்தில் நலிவடைந்த மக்களின் அடிப்படைகள் மீறப்படுதலை ஆட்சேபித்து நலிவடைந்த மக்கள் சார்பாக வேறு எவரோ அல்லது வேறு நிறுவனங்களோ முன்வந்து அவர்கள் சார்பாக வழக்கொன்றைத் தாக்கல் செய்து நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கலாம்.

**கேள்வி: பொறாமைக் குணம் கொண்டவர்களை எப்படி மாற்ற முடியும்?**

பதில்: பொறாமை என்பது கொடியதொரு வியாதி; மனோவியாதிகளில் மிகவும் கொடியதும் இதுவே. இத்தகைய பொறாமை எனும் மனப் பிணிக்கு அறிவின் உதவியாலும், செயலாற்றலின் உதவியாலுமே சிகிச்சை செய்ய வேண்டும். பொறாமை உணர்ச்சி என்பது அதனைக் கொண்டிருக்கும் ஒருவருக்கும், சூழ்ந்ருக்கும் அனைவரையுமே பாதிக்க வல்லது.

பொறாமை உணர்வு மனக்கறைகளால் ஏற்படுகிறது. இவை நன்மையானவற்றை அழிக்கும் ஆற்றல் கொண்டவை. நேர்மையான எண்ணங்களை தரை மட்டமாக்கும் சக்தி கொண்டவை. நெருப்பு விறகை அழிப்பது போல் பொறாமை நன்மை எல்லாவற்றையும் அழித்து விடும்.

பொறாமையால் உலகியல் விவகாரங்களிலும் கேடுகள் விளைகின்றன. பொறாமையின் காரணமாக உள்ளத்தில் இனம் புரியாத வேதனை உண்டாகிறது. அதை அனுபவிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதனால் எந்த நேரத்திலும் சோர்ந்த முகத்துடனும் கசங்கிய உள்ளத்துடனும் காட்சியளிக்க நேரிடும்.

முதலில் பொறாமை உணர்ச்சியை அடக்கியாள முயற்சி செய்ய வேண்டும். பொறாமையை உண்டாக்கும் சொல், செயல் யாவற்றையும் இயன்றவரை தவிர்க்க வேண்டும். மனம் வராவிட்டாலும் பொறாமைப்படுபவர் தான் எதிரி எனக் கருதுபவரைப் பாராட்ட வேண்டும். இப்படியெல்லாம் செய்வது பொறாமைக்காரருக்கு சிரமமாகத்தான் இருக்கும்.. இது கசப்பாக இருந்தாலும் பொறுமை என்பது இனிப்பான பயனைத் தரவல்லது. கசப்புக்கு அஞ்சியவர்கள் இனிப்பின் பயனை அனுபவிக்க முடியாது.

**கேள்வி: நான் சாதாரணதரம் படிக்கும் ஒரு மாணவன். வீட்டில் நல்ல வறுமை. ஆயினும் பட்டினி என்றில்லை. அதே நேரத்தில் ஆடம்பரங்களும், வீண் செலவுகளும் இல்லை. எப்படியோ படிப்பில் மட்டும் கவனம் செலுத்தி அதனையே முழுநோக்காகக் கொண்டு படிக்கிறேன். நான் இதனைவிட என்ன செய்ய வேண்டும்?**

பதில்: வறுமை என்பது ஒரு சாபக்கேடோ விதியோ அல்ல. வறுமை கொடியது, அதிலும் இளமையில் வரும் வறுமை கொடியது, என்றாலும் நீங்கள் பொறுமையோடு அதனைச் சகித்துக் கொண்டு முன்னேற்றப் பாதையில் பயணிப்பீர்களாயின் எந்தத் தடைகளாலும் உங்களது இலக்கு நோக்கிய பயணத்தை நிறுத்தி விட முடியாது.

ஆடம்பரமும், ஊதாரித்தனங்களும் நமது முன்னேற்றத்தின் தடைக்கற்கள் அவற்றை நீங்கள் ஏற்கனவே புறக்கணித்திருப்பதால் உங்களது இலக்கு விரைவாக எட்டப் படலாம்.

கூடவே, சுறுசுறுப்பு, பொறுமை, பணிவு, நேர்மை, தியாகம், அர்ப்பணிப்பு என்பனவற்றையும் உங்களின் சிறந்த பண்புகளாக வளர்த்துக் கொள்ளுங்கள். வெற்றி மிகச் சமீபத்தில் உங்களை நோக்கி நெருங்கி வரும். குறைந்த பட்சம் ஏதாவது ஒரு சிறந்த பண்பில் நீங்கள் ஒரு முன்னுதாரணமாக இருந்து காட்டுங்கள்.

**கேள்வி: நான் ஒரு குடும்பப் பெண். 5 பிள்ளைகள் எல்லோரும் வளர்ந்தவர்கள். என் வாழ்க்கையில் நான் பட்ட கஷ்டங்களை யாரிடமும் சொல்வதில்லை. சில நேரங்களில் மனம் சோர்ந்து விடுகிறேன். ஆனால், விரக்தி கொள்வ தில்லை. நான் எனது மனக்கவலைகளைப் போக்க என்ன வழி?**

பதில்: இந்தளவுக்கு உங்கள் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கியது பெரிய கெட்டித்தனம்தான். ஆயினும் நீங்கள் உங்களது துயரங்களை உங்களுக்குள்ளேயே வைத்துப் புழுங்கிக் கொண்டிருக்கிறீர்கள். இதனால்தான் மனம் அவ்வப்போது சோர்ந்து விடுகிறது.

மனதில் ஆழமாகத் தடம்பதித்துள்ள கவலைகளையும் துயரங்களையும் நாம் நம்பக்கூடிய, பாதுகாப்பான, நமக்கு ஆறுதல் தரக்கூடிய யாரிடமாவது மனம் விட்டுப் பேசவேண்டும். அப்பொழுது மனம் இலேசாகி சோர்வு நீங்கி ஒரு நம்பிக்கை பிறக்கும். என்னைப் பொறுத்த வரையில் இப்போதைக்கு உங்களுக்குள்ள மிக நெருக்கமான நண்பர்களாகவும், பாதுகாப்பும் நம்பகத்தன்மையும் நிறைந்தவர்களாக உங்களது பிள்ளைகளை நீங்கள் கருதமுடியும் என நான் நினைக்கிறேன்.

நான் கருதுவது சரியென்றால் உங்கள் பிள்ளைகளோடு மனம் விட்டுக் கதைத்துப்பாருங்கள். அதன் மூலம் அவர்களும் வாழ்க்கையில் படிப்பினை பெறவும் உங்கள் கஷ்டங்களில் பங்கெடுத்து உதவவும் கூடும் அதன் மூலம் உங்கள் உள்மன வேதனைகள் குறையலாம்.

**கேள்வி: நான் ஒரு பாடசாலை மாணவி, வகுப்பில் ஒரு சில மாணவிகளைக் கண்டால் எரிச்சல் வருகிறதே இதற்கு என்ன செய்யலாம்?**

பதில்: அவர்கள் உங்களோடு என்ன விதத்தில் முரண்படுகிறார்கள் என்பது பற்றி நீங்கள் எதுவுமே சொல்லவில்லை. எனினும் உங்களுககு ஏற்பட்ட சில முன் அனுபவங்களை வைத்து உங்களுக்குள் அப்படியொரு வெறுப்புணர்வு உருவாகியிருக்கலாம். அல்லது உங்களது ஏனைய சக மாணவிகள் நீங்கள் எரிச்சலடையும் அந்த மாணவிகளைப் பற்றிச் ஏதாவது சொல்லி இருக்கலாம். அதுவே அவர்களைப் பற்றி ஒரு கசப்பான முன் அனுமானத்தை உருவாக்கிஇருக்கக் கூடும். எது எப்படி இருந்தாலும் நீங்கள் அவர்கள் மீதான எரிச்சல் உணர்வைக் கைவிட்டு கலந்து பேசி நட்புறவை வளர்த்துக் கொள்வது தான் நல்லது.

பலரின் வேண்டுகோளுக் கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக்கப்படும் வாசகர்களால் அனுப்பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப்பிடப்படவில்லை.

# காலைப் பொழுதை இன்பமாய் மாற்றிட...





காலையில் விழித்தெழும் போது, இன்றைய தினம் செய்ய வேண்டிய வேலைகள் என்னென்ன என்று சிந்தித்துக் கொண்டே எழுந்தால், ''டென்ஷன்'' தானாகவே தொற்றிக் கொள்ளும். இதைத் தவிர்க்க...

முதல் நாள் இரவே, அடுத்த நாள் செய்ய வேண்டிய வேலைகள், தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள், வாங்க வேண்டிய பொருட்கள் என முக்கியமான வேலைகளை ஒரு பேப்பரில் எழுதி விட்டு, நிம்மதியாகப் படுத்து நித்திரை கொள்ளுங்கள்.

அடுத்த நாள் காலை எழும் போது, இதைப் பற்றிய சிந்தனையே இல்லாமல், இனிமையான சங்கீதம் கேட்க வேண்டும்.

பல்துலக்குவது, பால், தேநீர், கோப்பி குடிப்பது, காலைக் கடன்களை முடிப்பது உட்பட முதல் அரை மணி நேர வேலைகளைச் செய்து முடித்த பின், முதல் நாள் இரவு எழுதிய பட்டியலைப் பார்த்துக் கொண் டால், எந்தெந்த வேலைகளை முதலில் செய்வது என்ற தெளிவு பிறக்கும்.

சுறுசுறுப்பாய் வேலைகளைச் செய்யத் ஆரம்பிக்கலாம். இது அடிப்படை. இது தவிர, தினமும் உங்கள் மனதை, ''ரிலாக்ஸ்'' செய்து கொள்ள சில யோசனைகள்...

✱ இனிமையான சங்கீதம் கேட்க அடிப்படைத் தேவையாக அமைவது, குறைந்தபட்சம் ஒரு கருவி. அது கேசட் பிளேயராகவோ, எம்.பி.,3யாகவோ, கம்ப்யூட்டராகவோ இருக்கலாம்; இனிமையான சங்கீதத்தை இதமாகக் கேட்கும் வகையில், அறைகளில் ஸ்பீக்கர் வசதி செய்து கொண்டால், மிக நல்லது. இன்று ஃகையடக்க தொலைபேசியில் கூட பாடல் கேட்டு மகிழ கூடிய வசதிகள் வந்துவிட்டது.

நீங்கள் பயன்படுத்தும் அந்தக் கருவி எந்தப் பிரச்சினையும் இல்லாமல், சரியாக இயங்குகிறதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். சரியாக இயங்கவில்லை என்றால், அதைச் சரி செய்வதில் எவ்வித தாமதமும் இருக்கக் கூடாது.

✱ செடி வளர்க்கலாம். தினமும் ஒரே ஒரு பூவாவது தரக் கூடிய வகையில், பூச்செடி வளர்க்கலாம். எந்தச் செடியையும், அதன் அருகில் அமர்ந்து பேசி, கொஞ்சி, தண்ணீர் விட்டு வளர்த்தால், நீங்கள் எதிர்பார்ப்பது போலவே, பூக்களைக் கொடுக்கும்.


அவற்றுக்கும் மனது உண்டு என்பதை மறந்து விடாதீர்கள். நாமே வளர்த்து, ஒரே ஒரு பூ பூத்தால் கூட, அதில் கிடைக்கும் மன நிறைவு, நமக்கு நிம்மதியைக் கொடுக்கும்.

✱ கவிதை எழுதப் பிடிக்குமா? அடி மனதில் தோன்றும் எண்ணங்களை வெளிப்படுத்தும் கவிதையாக அமைய வேண்டும். கவிதை எழுதப் பழகினால், மன வளம் பெருகும்; எழுத்து வளம் பெருகும். உங்களிடம் உள்ள வலிமை யான கருத்துக்கள், பலவீனமான கருத் துக்கள் என்னென்ன என்பதைப் பாகு படுத்திப் பிரித்துப் பார்க்கும் அறிவு வளரும்.

✱ பாட்டு பாடலாம், ஓவியம் வரையலாம். தையலில் ஈடுபடலாம்.நகைகள் செய்யலாம். இது போன்ற ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபடும் போது, உங்களிடையே உள்ள கலைத்தன்மை வெளிப்படும். இதுவே உங்களின் தனித் தன்மையை நிலைநாட்டும்.

✱ ஒரு வேலை செய்து கொண்டி ருக்கும்போது, தேவையற்ற விஷயங் களை மனதில் அசை போட வேண்டாம். உங்களுக்குச் சம்பந்தம் இல்லாத விஷயங்களில் நாட்டம் செலுத்தும் போது வேலையில் கவனம் குறையும்.

அதுவே உங்களுக்கு ஆபத்தாய் அமைந்துவிடும். முழுமையான பணி செய்த திருப்தி ஏற்படாது; மன நிம்மதி கெடும். மேலே சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் அனைத்தையும் பின்பற்றுவது மிகவும் கடினம் தான். வாழ்க்கையில் சந்தோஷமும் நிலைப் பதில்லை; துன்பங்களும் நிலைப் பதில்லை. இன்றைய தினத்தில் உள்ள கடமைகளையும், பணிகளையும் செய் யும் போது கிடைக்கும் நிம்மதியுடன், திருப்தியாக வாழப் பழகிக் கொள்ளுங் கள். வாழ்க்கை வாழ்வதற்கே! ✱




தொகுப்பு: சாந்தி

# எளிய உடற்பயிற்சிக்கு பிறகு... பால் குடித்தால் பெண்கள் எடை ஏறாது



வழக்கமான சில எளிய உடற்பயிற்சிகளுக்குப் பிறகு தினமும் 2 டம்ளர் பால் குடித்தால் பெண்கள் எடை அதிகரிக்காது என ஒரு ஆய்வு முடிவு கூறுகிறது.

கனடாவைச் சேர்ந்த மெக்மாஸ்டர் யுனிவர்சிட்டியின் உடலியல் துறை பேராசிரியர் ஸ்டு பலிப்ஸ் தலைமை யிலான குழுவினர், பெண்களின் கொழுப்புச் சத்தை குறைப்பது தொடர்பாக ஆய்வை மேற்கொண்டனர்.

ஒரே உடல்வாகு உடைய இளம் பெண்கள் தேர்வு செய்யப்பட்டு, இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டனர். தினமும் எளிய உடற்பயிற்சிகள் செய்யும் வழக்கம் உடையவர்கள் அவர்கள்.

பயிற்சியை முடித்தவுடன் ஒரு பிரிவினருக்கு கொழுப்பு நீக்கப்பட்ட ஒரு டம்ளர் பால் கொடுக்கப்பட்டது. மற்றொரு குழுவுக்கு சீனியை அடிப்படையாகக் கொண்ட பானம் கொடுக்கப்பட்டது. பயிற்சி முடிந்த 1 மணி நேரத்துக்கு பின், மீண்டும் அதே அளவு பால் மற்றும் பானம் கொடுக்கப்பட் டது. இவ்வாறு 12 வாரங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டது. பின்னர் அவர்களின் உடல் எடை, கொழுப்புச் சத்தின் அளவு பரிசோதிக்கப்பட்டது. பானம் குடித்த பெண்களைவிட பால் குடித்த பெண்களின் உடலில் கொழுப்பு அதிகம் சேராதது ஆய்வில் தெரியவந்தது. இவர்களின் உடல் எடையும் அதிகரிக்கவில்லை.


தினமும் எளிய உடற்பயிற்சிக்குப் பிறகு பால் குடித்து வந்தால் பெண்களின் உடல் ஆரோக்கியமாக இருக்கும் என்பது ஆய்வில் நிரூபக்கப் பட்டுள்ளது. இந்த நடைமுறை உடல் எடையைப் பராமரிக்க உதவும் என பிலிப்ஸ் தெரிவித்தார்.

# பனீர் போண்டா

## தேவையான பொருட்கள்:

**பூரணத்துக்கு:**

துருவிய பனீர் - 1 கப்
பொடியாக நறுக்கிய காய்கறிக் கலவை - 1 கப்
பெரிய வெங்காயம் - 1 (பொடியாக நறுக்கவும்)
பொடியாக நறுக்கிய பூண்டு - 1 மேசை கரண்டி
பொடியாக நறுக்கிய இஞ்சி
கொத்தமல்லித் தூள் - 1 தே. கரண்டி
மிளகாய்த் தூள் - 1 /12 தே. கரண்டி
பொடித்த மசாலா (பட்டை, லவங்கம், ஏலக்காய்) - 1 தே. கரண்டி
பொடியாக நறுக்கிய கொத்தமல்லி - 1/4 கப்
எலுமிச்சை சாறு - 2 தே.கரண்டி
மஞ்சள்தூள் - 1 சிட்டிகை
உப்பு - 1 சிட்டிகை
எண்ணெய் - 2 மேசை கரண்டி



**மேல் மாவுக்கு:**

கடலை மாவு - 1 கப்
அரிசி மாவு - 1 மேசை கரண்டி
மைதா மாவு - 1/4 கப்
ஓமம் - 1/4 தே.கரண்டி
மிளகாய்த் தூள் - 1/2 தே.கரண்டி
சமையல் சோடா - 1/4 தே.கரண்டி
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு

## செய்முறை:

எண்ணெயைக் காய வைத்து நறுக்கிய பூண்டைப் போட்டு வெங்காயம், இஞ்சி, உப்பு, மஞ்சள்தூள் சேர்த்து வதக்கவும். நன்றாக வதங்கியதும், பொடியாக நறுக்கிய காய்கறிகளைச் சேர்க்கவும். காய்கள் கருள வதங்கியதும், உப்பு, மிளகாய்த்தூள், பனீர் சேர்த்து நன்கு வதக்கி தனியாத்தூள், பொடித்த மசாலாத்தூள், கொத்தமல்லி, எலுமிச்சைச் சாறு சேர்த்துக் கிளறி இறக்கினால் பூரணம் ரெடி! மேல் மாவுக்கு கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எண்ணெய் நீங்கலாக மற்ற எல்லாவற்றையும் கலந்து தேவையான தண்ணீர் சேர்த்து, பஜ்ஜி மாவு பதத்தில் கரைத்துக் கொள்ளவும். பூரணத்தை சிறு உருண்டைகளாக உருட்டி, மாவில் தோய்த்தெடுத்து கொதிக்கும் எண்ணெயில் போட்டுப் பொரித்தெடுக்கவும்.

# சிம்புவுடன் மாதவன்?

விண்ணைத்தாண்டிய வெற்றிக்குப் பிறகு இரண்டு படங்களில் ஒரே நேரத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார் விரல்வித்தை மன்னன் சிம்பு. ஒன்று வரலட்சுமியுடன் ஜோடி சேரும் 'போடா போடி'. இதன் படப்பிடிப்பு லண்டனில் நடக்கிறது.
இன்னொன்று லிங்குசாமி இயக்கும் படம். தமிழ், தெலுங்கு இரு மொழிகளில் இந்தப் படம் தயாராகிறது. தெலுங்கில் சிம்பு வேடத்தில் மகேஷ் பாபு நடிக்கிறார். இந்தப் படத்தில் சிம்புவுக்கு அண்ணன் கதாபாத்திரம் ஒன்று வருகிறது. ஹீரோவுக்கு இணையான கதாபாத்திரமாம் இது. இந்தக் கதாபாத்திரத்தில் மாதவன் நடித்தால் நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கிறார் லிங்குசாமி. இரண்டு ஹீரோக்களுடன் மாதவன் நடிப்பது புதிதல்ல. இப்போதும் 'மன்மதன் அம்பு' படத்தில் கமலுடன் நடிக்கிறார். கமலுக்குக் காட்டிய அதே கரிசனத்தை சிம்புவுக்கும் அவர் காட்டுவாரா? காத்திருக்கிறது லிங்குசாமி குழு.



ராவணன் பட விசேஷ விழா ஒன்றின்போது...

# ஈழத் தமிழர் வேடத்தில் பாஸ்கர்!

கமலின் 'மன்மதன் அம்பு' படத்தில் மாதவன், திரிஷா, சங்கீதா, ஓர் அறிமுக ஜோடி, இரண்டு குழந்தைகள் என்று ஒரு சின்ன நடிகர் பட்டாளமே நடிக்கிறது. இவர்களுடன் கடைசி நேரத்தில் இணைந்து கொண்டிருக்கிறார் நடிகர் எம்.எஸ்.பாஸ்கர். எம்.எஸ்.பாஸ்கரனின் வசன உச்சரிப்பைச் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வியந்து பேசுவது கமலின் வழக்கம். காரணம் கமலைப் போலவே சென்னைப் பாஷை முதல் கோயம்புத்தூர் பாஷைவரை அனைத்தையும் சரளமாகப் பேசக்கூடியவர் பாஸ்கர். இதன் காரணமாகவே 'தசாவதாரம்' படத்தில் ஆங்கிலம் கலந்த தமிழ்ப் பேசும் கதாபாத்திரத்தில் பாஸ்கரை நடிக்க வைத்தார் கமல். 'மன்மதன் அம்பு' படத்தில் இலங்கைத் தமிழர் வேடமாம் எம்.எஸ்.பாஸ்கருக்கு. 'தெனாலி' படத்தில் கமல் சொதப்பியது போல் சொதப்பாமல் இருந்தால் சரி...!







# சன் குழுமத்துக்கு விஜய் குட்பாய்!

'சுறா' கருவாடாக தங்களை வாடி வதங்கச் செய்துவிடும் என்று கனவிலும் நினைக்கவில்லை விநியோகஸ்தர்களும், திரையரங்க உரிமையாளர்களும். இந்தியாவின் 160 திரையரங்க உரிமையாளர்கள் ஐந்து முதல் பதினைந்து இலட்சம் வரை இழப்பைச் சந்தித்திருக்கின்றனர் எனக் கணக்கு காட்டியிருப்பதாகத் தகவல் தெரிவிக்கிறது. 'வேட்டைக்காரன்' படத்தில் கூட இலாபமில்லாவிட்டாலும் நஷ்டமில்லை என்கிறார்கள். பொதுவாக ஒவ்வொரு படமும் வெளியிடும்போதும் விஜயின் படங்களால் இழப்பீட்டைச் சந்திக்கும் ஒருசில 'எக்ஸிபிட்டர்'கள், விஜயின் தந்தையான எஸ்.ஏ.சியைச் சந்தித்துக் கணக்கை நேர்மையாகக் காட்டி இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வது வழக்கமாம். விநியோகஸ்தர்களுக்கும் திரையரங்க உரிமையாளர்களுக்கும் கொட்டிக்கொடுத்த 'கில்லி' கூட சில திரையரங்குகளில் சரியாகப் போகவில்லை என்று சொல்கிறார்கள் தொழில் கரை கண்ட சில 'மீடியேட்டர்'கள். இந்தமுறை 'சுறா' இவ்வளவு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்ததற்கு காரணம் விஜய் ரசிகர்களே ஒழுங்காகப் படம் பார்க்கவில்லை. (மொத்தம் 40 இலட்சம் ரசிகர்கள் என்பது மன்றக் கணக்கு) என்பதுதான். உயிரைக் கொடுக்கிற ரசிகர்களாக இருந்தாலும் கதை பழசாக இருந்தால் அது ரஜினியாக இருந்தாலும் பார்க்க மாட்டார்கள் என்பது 'சுறா' மூலம் உறுதிப்பட்டு விட்ட நிலையில், சிங்கத்தின் அதிரடி வசூல் கண்டு மலைத்துப் போய் நிற்கிறது கோடம்பாக்கம். தற்போதைய நிலவரப்படி ஒரு திரையரங்கில் 300 பேர் படம் பார்த்தாலும் கூட பத்து நாட்களில் 30 கோடி வசூலைத் தாண்டிவிடும் என்கிறார்கள் விநியோகஸ்தர்கள்.
விஜயின் 90 கோடி வசூல் சாதனையை முறியடிக்க ரஜினி படத்தால் மட்டுமே முடியும். இன்னும் விஜய் வசூல் சக்கரவர்த்திதான். ஆனால், அவர் 'எக்ஸ்ட்ரீம்' ஹீரோயிஸம் பண்ணாமல் கில்லியைப் போல யதார்த்தமான ஹீரோயிஸம் பண்ண வேண்டும் என்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில்தான் நடிகர் சங்கத்தலைவர் சரத்குமார், படத்தயாரிப்பாளர் சங்கிலி முருகன் திரையரங்கு உரிமையாளர் சங்க நிர்வாகக்குழுவினர், விஜய், எஸ்.ஏ.சி உள்ளிட்டோர் கலந்து கொண்ட கட்டப்பஞ்சாயத்தில் ஒரு முடிவு எட்டப்பட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்கிறார் விஜய். தற்போது நடித்து வரும் 'காவல்காரன்' படத்தை முதல்பிரதி அடிப்படையில் அதன் தயாரிப்பாளரிடமிருந்து வாங்கி அதை நஷ்டப்பட்ட திரையரங்க உரிமையாளர்கள் அனைவருக்கும் நஷ்டத்தைக் கழித்துக்கொண்டு குறைந்த விலைக்கு கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறாராம் விஜய். இதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட விஜய், இந்தமுறை தானே படத்தை வாங்கி விநியோகிக்கவிருப்பதால் சன் தொலைக்காட்சிக்குத் தற்காலிகமாக 'குட்பாய்' சொல்லவிருக்கிறார் என்கிறார்கள். ஆனால், சன் நிறுவனமோ எந்தத் திரையரங்குக்கு எவ்வளவு நஷ்டம் என்று சொல்லுங்கள் நாங்க தருகிறோம் என்கிறார்களாம். அதேவேளை, ஒகஸ்டில்தான் 'எந்திரன்' வெளிவரும் என்று ரஜினி சொன்னாலும் அதைத் தீபாவளிக்குத்தான் என்று நாங்கள் நினைத்திருக்கிறோம். எனவே எங்களுக்கு ஒகஸ்டில் வெளியிட படம் வேண்டும் என்று கேட்கிறார்களாம்.
ஆனால், விஜய் காரராக மறுத்து விட்டார்.
சித்திக்கின் கையில் சிக்கிய நேரம் விஜய் பழையபடி வசூல் சக்கரவர்த்தியாக தனது இடத்தைத் தக்க வைப்பார் என்கிறார்கள் அவரது அபிமானிகள். பார்க்கலாம்.....!

# கவதைக்கு எதிராக திரிஷா!

மிருகவதைக்கு எதிரான அமைப்பு ஒன்று இந்தியாவில் பெடா என்ற பெயரில் உள்ளது. இதில் திரிஷாவும் தன்னை இணைத்துள்ளார். இந்த அமைப்பின் விளம்பரத் தூதுவராக அவர் செயற்படவுள்ளார். பெடா அமைப்பில் சினிமாப் பிரபலங்கள் பலர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் மிருகவதைக்கு எதிராக பிரசாரம் மேற்கொள்வார்கள். மேலும் மிருகவதைக்கு எதிரான விளம்பரங்களிலும் நடிப்பார்கள். திரிஷா மிருகங்களின் மீது அன்பு கொண்டவர் என்பதால் அவரை பெடாவின் புதிய விளம்பரத் தூதுவராக நியமித்துள்ளனர். இவர் நடிக்கும் விளம்பரம் விரைவில் வெளிவர உள்ளது.





படம் - உத்தம புத்திரன்

# வேலையை காட்ட ஆரம்பிச்சிட்டார் விமல்!

'பசங்க' படத்தில் அறிமுகமான விமலுக்கு அதைத் தொடர்ந்து 'களவாணி' படம் வெளிவரவுள்ளது. மேலும் இரண்டு படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் விமலை இப்போது கையிலேயே பிடிக்க முடியவில்லையாம். அந்த அளவுக்குப் பிஸியாகி விட்டாராம். காரணம் மேலும் பல படங்களுக்குக் கதை கேட்டு வருகிறாராம். கால்ஷீட் புல்லாக ஆரம்பித்ததும் மனுஷன் வேலையைக் காட்ட ஆரம்பிச்சிட்டார். அடுத்து, தான் நடித்துக் கொண்டிருக்கும் படத்தில் விமல் இன் என்று டைட்டிலில் போடச் சொல்கிறாராம். அப்படின்னா ஆரம்பிச்சிட்டார் என்றுதானே அர்த்தம்.

தொகுப்பு
எஸ்.ஜெப்



படம் - இரண்டு முகம்

# நான்தானுங்க ராவணன்!

ராவணன் படம் குறித்து சிறப்புப் பேட்டியளித்துள்ளார் விக்ரம். அப்போது, தொலைக்காட்சி, பத்திரிகை, இணையத்தளம் என்று விக்ரமைப் பிழிந்தெடுத்து விட்டனர் ஊடக நண்பர்கள். 'ராவணன்' பாத்திரம் உட்பட ஐஸ்வர்யா ராய், பிருத்வி ராஜ் ஆகியோரின் பாத்திரங்கள் குறிப்பிட்டுப் பேசப்படும் விதமாக இருக்கும் என்ற விக்ரம், பிரியாமணியின் பாத்திரம் வித்தியாசமானது என்றார். 'ராவணன்' எப்போது அமைதியாக இருப்பான், எப்போது ஆக்ரோஷம் கொள்வான் என்பது தெரியாது. அவன் பழகும் பகுதியும் புதிதாக இருக்கும். இதுவரை இந்தியத் திரையுலகம் காணாத காட்சிகள்தான் அது. அத்தோடு, 'ராவணன்' திரைப்படம் தமிழ் ரசிகர்களுக்குள் வித்தியாசமான ரசிப்புத் தன்மையை ஏற்படுத்தும்' என்றார் விக்ரம்.



# பிரகாஷ்ராஜ் மனைவியாக மனிஷா கொய்ராலா!

மலையாளத்தில் நயன்தாரா நடித்து வரும் 'எலக்ட்ரா' என்ற படத்தில் அவருடைய அப்பாவாக பிரகாஷ்ராஜ் நடிக்கிறார். அம்மா வேடத்தில் மனிஷா கொய்ராலா நடிக்கிறார். இயக்குநர் ஷியாமாபிரசாத் இயக்கும் படம்தான் 'எலக்ட்ரா'. ஒரு குடும்பத்தின் உறவுகளுக்குள் ஏற்படும் பிரச்சினைகளை அலசும் படமாம் இது. கிரேக்க நாடகத்தைத் தழுவி, அதன் அடிப்படையில் இந்தப் படத்தின் கதையை உருவாக்கியுள்ளார் ஷியாமாபிரசாத். இந்தப் படத்தில் நாயகியாக நடிப்பவர் நயன்தாரா. 'எலக்ட்ரா அலெக்சான்டர்' என்ற பாத்திரத்தில் நடிக்கிறார் நயன். அவருடைய பெற்றோராக நடிக்கிறார்கள் பிரகாஷ்ராஜும், மனிஷாவும். தமிழில் பல படங்களில் நடித்துள்ள மனிஷா, மலையாளத்தில் நடிப்பது இதுவே முதல் முறையாகும். ஏற்கனவே தமிழில் 'மாப்பிள்ளை' படத்தில் தனுஷுக்கு மாமியாராக நடித்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கவிதைப்புனல்

## அறம்பாடி அளிக்கோமா நாம்....!


நெற்றிக்கண் விழித்தாலும் நிமிர்ந்து நின்று குற்றமென
நிமலனுக் கேயுரைத்தோன் வாரிசுநாம்
தற்பெருமை பேசிநின்று தகைமைசொல்லி யடிபட்டுத்
தரங்கெட்ட உணர்வுகளைத் தான்பாடி
அற்புதங்க ளற்றவுடற் காதலையும் ஆயிழையார்
அந்தரங்க உறவினையும் பாடிநின்று
சொப்பனந்தான் காண்போமா சொரணையற்ற கவிஞர்களா
சூட்டுக்கோல் தூக்கோமோ நாம்?

காதலென்றா லென்னவென்று கண்டுகொள்ள நேரமற்றுக்
கடைத் தெருவில் ஒழுங்கைகளிற் பாழ்வீட்டில்
கூதலினைத் தீர்த்தேகும் கொடுமைகளைக் கண்டபின்னும்
குடிகெடுக்க நாமும்பாத் தொடுப்போமா?
பேதலித்த இளசுகளைப் பிழையின்றி வழி நடத்தப்
பெருங்கவிதைச் சுடர்கொளுத்தத் தெம்பற்று
ஏதேதோ பாடிநின்று இதுதான்பார் கவியென்று
இறுமாந்து போவோமோ போ...!

காலத்தைக் காட்டிவருங் கண்ணாடி யாயெங்கள்
கவிதைகள் அமைய வேண் டும்!
ஏலத்தில் விலைபோகும் ஏதிலிக் கொள்கைகளை
எழுத்தினாற் சாய்க்க வேண் டும்!
ஞாலத்தி லின்னபடி நடவென்று நல்வழியை
நறுங்கவிஞர் காட்ட வேண் டும்!
ஆலமெ மன வருத்தவரு மநியாய அவலங்களை
அறம்பாடி அழிக்கோமோ நாம்....?

அடதம்பி நீபாடு ஒருநூறு இருநூறு
ஒரு கோடிக் கவிபா டிடு!
திடமாயெம் மினம்வாழத் திசையெங்கு மொளியேறத்
தீமையிங் ககன் றேகிட
எடுகோலைத் தொடுபோரை இவன்தான் கவிஞனென
இசைவாழும் பேர் வாங் கிடு!
தடுமாறித் தலைசாய்த்துத் தவறுபவன் கவியல்லத்
தலை நிமிர்ந் திசைபாடு வோம்!

-தமிழ் மணவாளன்-





## குறிஞ்சிக் கோவில்கள்

### நாவல்நகர் ஸ்ரீ அருள்மாரி

வற்றாத கால்வாய் வடிகால்கள் வீசி
வளமூட்டும் விளைச்சல் பூமி
பொற்கதிர்கள் காற்றில் கலகலத்து நிற்கும்
நெற்புலங்கள் விரிந்த காணி
கற்பாறை வெற்பு தோட்டங்கள் தொலைவில்
கவின்கூட்டும் அள்ளுஞ் சீரூர்
நற்றமிழ்க் கலைகள் தழைத்தோங்க பல்லோர்
நிமிர்தொண்டு புரிந்த பேரூர்!

மூங்கில்மரக் காடு இருமருங்கும் ஓங்கி
முட்டியொலி எழுப்பிக் களிக்கும்
வாங்குபுகழ் கங்கை மாவலிநீள் நங்கை
நிலம்வாழ்த்தி மெல்ல நகர்வாள்
ஓங்குமுயர் தெங்கு உயர்கோப்பி மிளகு
முக்கனிகள் குலுங்குந் திருவூர்
பாங்குநகர் வீதி ஓரத்தில் அம்மை
தேங்குபுகழ் கோயில் கொண்டார்!

பெருந்தொண்டு அன்று முத்தையா ஆசான்
பெரும்ஞானி சைவ வாதி!
அருந்தொண்டு எங்கும் ஆன்மீகம் பரப்பி
அன்னாரின் ஆத்ம ஜோதி!
திருமறைகள் ஓதி தெளிவுரைகள் பகர்ந்து
திருத்தொண்டு புரிந்த சான்றோன்
குருவாக நின்றோன் பன்னூல்கள் யாத்தோன்
கரங்கூப்பித் துதித்த அம்மை!

ஊர்தோறும் அம்மை அருள்மாரி கோயில்
உயர்பூமி குறிஞ்சி மண்ணில்
கார்மேகன் தங்கை சிவசக்தி என்றும்
காசினியைப் புரக்குந் தேவி
பூர்வீக நாவல் மரக்காடு பிறழ்ந்து
நாவல்நகர் ஆன தென்பர்
பேர்பூத்த நகரில் நீள்பாதை யோரம்
பெருங்கோயில் பூண்டார் அம்மை!

-கவிஞர் வி.எஸ். காந்தி-
(தொடரும்).

## ஆண்மை!

உடல் பருத்து மீசை பருத்து
ஊன் மிதம் திண்டு திளைத்து
கடல் கதறும் குரல் படைத்து
கண்ட நங்கையர் கண்டு மிரள
திடம் கொண்ட உடல் திரள
திமிர் கொள் காளை அடக்கும்
மடல் விரிந்தால்போல் உடல் விரிந்த
மனித ஆண்மை ஆண்மை அல்ல!

உடல் தழுவி உள்ளம் தழுவா
உரை பகரா உள்ளம் அறியா
மிடறு பருகி முகமே சோர
மிதித்து மலரை கசக்கிப் பிழிந்து
படரும் கொடியை பாடு படுத்தி
பருகிக் காமம் மலரில் வண்டாய்
உடலை மதிக்கும் மனித ஆண்மை
ஆண்மை யல்ல! ஆண்மை யல்ல!!

கடவுள் தன்னில் சரி பங்காக்கி
கடல் சூழ் புவிக்கு தேவியாக்கி
விட, எவன் அவள் உடலை நோக்கா
விரிந்த உள்ள இருக்கை தேடி
உடலால் அவளாய் உள்ளத்தால் தாயாய்
உணர்வை மதித்து உண்மையான் பூட்டி
மூடமே யாகிலும் பெண்மை மதிக்கும்
முறையே ஆண்மை! இதுவே
உண்மை!!

-கந்தவளம் ஸ்ரீரங்கநாதன்-

## காத்திடுங்கள்!

ஊருக்குப் பாலம் பார்க்க
உவகையுடன் வந்த பையன்
பேருந்து தாக்கப் பட்டு
பிண மாகிப் போனானே!

பாலர் வகுப்பு தன்னில்
பாடம் கற்ற வனாய்
பாலம் பார்க்க வந்து
பாவம்! மாண்டு விட்டான்!

பெற்றோர் கண் முன்னே
பேருந்து வந்து மோதி
மற்றோர் கண்டு அழ
மாண்டான் என் செய்ய?

தவமாய் தவ மிருந்து
தாயைர் பெற்ற மகன்
சவமாய்ப் போன நிலை
சங்க டத்தில் ஆழ்த்துதே!

வீதியில் பிள்ளை தனை
விளையாட விட்ட தனால்
மோதியது அப் பேருந்தே
மோசம் அது யாராலே?

துடிப்பான சிறு பிள்ளையை
துணை யின்றி விடலாமா?
படிப்பினை இது வென்பேன்
பாலரைக் காத்தி டுங்கள்!

-வி.எம். அன்ஸார், கின்னியா.

## செல்வம்

வீசி உலுக்கிடும் காற்று-கடல்
வேகும் சுவாலைபோல் பொங்கிக் கிளம்பும்
மாசிப் பனிக்குளிர் வேறு-அலை
மப்பில் அலைகின்ற மணிபோல் ஆடும்!

பூசிக் கிடக்குங்கார் இருட்டு-மழை
பொசியும்; திவல் மின்னல் கண்ணைக் குடிக்கும்
கூசும் மனத்தோடு யாக்கை-இதற்
குள்ளும் படகேறிச் செல்வான் செல்வம்!

கால நிலையெனப் பார்த்தால்-மறு
காலை நிலைக்கெவர் கஞ்சி அருள்வார்
வீழும் அலையென்று இருந்தால்-நாளை
வீட்டு விளக்குக்கார் எண்ணெய் தருவார்?

ஆதலால்செல்வம் ஓயான்-வீட்டில்
அவனை நம்பிவாழ் சிறுசைக் காக்க
மோதல் ஆழிக்கு ஏகி-வலை
வீசி காத்தங்கு இருந்தே மீள்வான்!

-த. ஜெயசீலன்-

# கவிதையில் கவித்துவம் மணம் கமழும் மலருக்கு ஒப்பானது

தமிழ் இலக்கியப் பரப்பில் பழந்தமிழ் இலக்கியங்கள் யர்வும் செய்யுள் நடையிலேயே அமைந்துள்ளன. உரைநடை இலக்கியங்கள் தோன்றுவதற்கு முன்பு எல்லாமே மரபு வழி யாப்பு இலக்கணங்களுக்கு அமைவாகவே உருவாகின. அத்தகைய செய்யுள்கள் படித்த பண்டிதர்களாலேயே கற்றுணர முடிந்தது. வழி வந்தவர்களும் அதே நிலையில் தமது வித்துவச் செருக்கைக் காட்டி வந்துள்ளனர்.

"உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்" என்று தொல்காப்பியம், பொருளதிகாரம் கூறி நிற்கின்றது. பாரதியாரின் வருகையுடன் தமிழிலக்கியத்தில் புதிய போக்குத் தோன்றுவதை அவதானிக்கமுடிகிறது. அவருடைய பின்வரும் பாடலை நோக்கும்போது அதைநாம் புரிந்து கொள்ளமுடியும்.

"அக்கினிக்குஞ் சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு - தழல்
வீரத்திற் குஞ்சென்றும்
மூப்பென்றுமுண்டோ
தத்தரிகிட தத்தரிகிட - தித்தோம்"

பாரதியின் மேலேயுள்ள வரிகள் செய்யுள், பாடல், கவிதை என்று எதற்குள் வகைப்படுத்தலாம் என்று எண்ணினாலும், ஒரு விடயத்தை மட்டும் மனங்கொள்ள முடியும். இதற்குள் கவித்துவம் அபாரமாய் உறைந்திருக்கிறது என்பதை நோக்க முடியும். அதேவேளை மரபுவழி வந்த எல்லாச் செய்யுள்களிலும் அல்லது கவிதைகளிலும் கவித்துவத்தைக் காண முடியுமா? என்ற கேள்வி எழுதலும் நோக்கற்பாலது. மக்கள் இலக்கியக் கோட்பாடு ஊற்றெடுக்க முனைந்த காலகட்டத்தில், தீவிர சமூக சிந்தனைகளை அவதானத்தோடும் - அர்த்தத்தோடும் கவிதைக்குள் உள்ளடக்கிய இருபதாம் நூற்றாண்டின் முதற்கவி மகாகவி சுப்பிரமணிய பாரதியார். அவரைத் தொடர்ந்து பாரதிதாசன், புதுமைப்பித்தன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், தொ.மு.மு. ரகுநாதன் போன்றவர்கள் சாதாரண மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் கவிதைகளையும் பாடல்களையும் படைத்தனர்.

காலம் தோறும் கவிதையின் முகம் மாறிக்கொண்டேயிருப்பதை அவதானிக்க முடிகிறது. இதனால் பாடுபொருளை நேரடியாகச் சொல்லக் கூடிய கவிதைகளை, செய்யுட்களை இனங்காண்பதில் தெளிவின்மை ஏற்படலாம். ஆனால், எந்தச் செய்யுளில் - பாடலில் அல்லது கவிதையில் கவித்துவம் தொக்கியிருக்கிறதோ அவை காலந்தோறும் மனிதமனதை இன்புறச் செய்து தன்னையும், தான் சார்ந்த மொழியையும் காப்பாற்றிக் கொண்டு வருகின்றது.

கவிதைத்துறையின் வளர்ச்சிக்கு இலங்கையில் முன்மாதிரியான பங்களிப்பினை கே. கணேஷ், அ.ந. கந்தசாமி, மஹாகவி ஆகியோர் 'பாரதி' சஞ்சிகையின் ஊடாக வழங்கியுள்ளனர். தோட்டத் தொழிலாளர்களை பாடுபொருளாகக் கொண்டு அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் துன்ப துயரங்களையும் எடுத்துக் காட்டுவதோடு நின்றுவிடாமல், பரந்த அறிவையும், சர்வதேச விவகாரங்களில் நாட்டத்தையும் பெறச்செய்யும் நோக்குடன் செயலாற்றியது. அதேவேளை தமிழகத்தின் 'மணிக்கொடி' போன்று இலங்கையில் உருவான 'மறுமலர்ச்சி' பழைய செய்யுள் மரபில் நவீன கவிதைக்குரிய இயல்புகளை உருவம், நடை, உள்ளடக்கம் எனக்கொள்ளலாயிற்று.



'கவித்துவம்' என்பதை விளக்குவதற்கு வார்த்தைகளில்லை; அது அனுபவம் சார்ந்தது. இதனை எளிமையாகச் சொல்வதானால், பூக்கள் எல்லாம் பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் எல்லாவற்றிலும் வாசம் இருப்பதில்லை. ஆனால், மணம் கமழும் பூக்கள் தன்னில் ஒரு கவர்ச்சியை தக்கவைத்து மனித உணர்ச்சிகளோடு நெருங்கி அமர்ந்து விடுகின்றன. பூக்களின் நறுமணம் போலத்தான் கவிதையில் கவித்துவம் வார்த்தைகளுக்குள் பொதிந்து வைக்கப்பட்டிருக்கும். இத்தகைய கவித்துவமிக்க கவிதைகள் காலங்கள் கடந்தும் தம் இளமையைத் தக்கவைத்துக் கொள்கின்றன. மனித உணர்ச்சிகளினூடே இரு வேறு அறிவுலகங்களுக்குள் நடக்கும் புணர்ச்சி என அதனைக் கூறலாம்.

ஈழத்துப் புதுக்கவிதை மரபினர் நாற்பதுகளின் நடுவில் அரங்கேறுகின்றனர். "என்னுடைய கருத்துப்படி எல்லாச் சிறந்த எழுத்தாளர்களுக்குள்ளும் ஒரு கவிஞன் இருக்கிறான். நல்ல எழுத்தாளர்களின் எழுத்து நடையிலும் கருத்திலும் ஒரு கவிதைநயம் இருக்கும். அப்படி இல்லாதவை இலக்கியம் ஆகா என்று நினைக்கிறேன். 'கவிதை என்பது எதுகை, மோனை, சீர், தளை எல்லாம் சரியாக அமைத்து ஓசைநயத்தை எழுப்ப வேண்டும்; ஓசையில்லாமல் கவிதை இல்லை' என்றுதான் நானும் - இன்னும் புலவரைப் போல முன்பு நினைத்துக் கொண்டிருந்தேன். இந்த நிலையில் கவிதை என்றால் என்ன? என்று நான் சிந்தித்தபோது 'கவிதைநயம்' என்று ஒரு பண்டம் இருப்பதை நான் உணர்ந்தேன். ஒரு கவிதையை எந்த உருவத்தில் படைத்த போதிலும் அதில் 'கவிதைநயம்' என்ற பண்டம் இல்லாமல் போகுமானால் அது கவிதை ஆகாது. இந்தக் கவிதை நயத்தை ரசிக்கிற இயல்பு என்னுடைய சிறுவயதிலிருந்தே இருந்துள்ளது' என்று 'மறுமலர்ச்சி' ஆசிரியர் வரதர் கூறியுள்ளார்.

ஒருவன் தனக்குத் தெரிந்ததை சில வார்த்தைகள் மூலம் சொல்ல முற்படுகின்றான். இன்னொருவன் அதனை வாசிப்பதன் மூலம் எடுத்துக் கொள்ளுகின்றான். எடுப்பவனும் கொடுப்பவனும் வேறுகாலத்தில் வேறுவேறு வெளியில் இருக்கின்றனர். எனவே, சொற்கள் மூலம் கவிதை அவர்களுக்கிடையில் பாலத்தை அமைத்து உணர்ச்சியையும், அனுபவத்தையும், கருத்தையும் கடத்துகிறது. இது எவ்வளவுக் கெவ்வளவு ஒரு படைப்பாளருக்கும் அதை வாசிப்பவருக்குமிடையில் ஒரு அணுக்கமான அளவில் நடைபெறுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்தக் கவிதை காலங்களைக் கடந்து செல்லும் தகுதியைப் பெறுகிறது. அப்படி அணுக்கமாகக் கவித்துவத்தை கடத்தும் பாடல்களில் ஒன்று பாரதியின் "அக்கினிக்குஞ்சொன்று கண்டேன்..."

அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டிருந்த மக்களைத் தட்டி எழுப்பிச் சுதந்திர தாகத்தை ஊட்டுவதற்காக, தேசத்தின் விடுதலை உணர்ச்சி கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த காலத்தில் அம்மக்களிடையே தேசப்பற்றையும் போராட்ட உணர்வையும் தூண்டி விழிப்படையச் செய்ய பாரதியின் 'வந்தே மாதரம்....', 'சுதந்திரப் பள்ளு...' ஆகிய பாடல்கள் மக்கள் மனங்களில் வீறுகொண்டெழக் காரணம் அதனுள் உறைந்து நிற்கும் கவித்துவமே.

இலங்கைத் தமிழ் மக்களிடையே, தமிழகத் திராவிட இயக்கச் செல்வாக்குத் தாக்கத்தை ஏற்படுத்திய காலத்திலே - இலங்கையில் முனைப்புற்றிருந்த தமிழர் உணர்வு வலுவடைந்து பிரசாரத்தன்மை கொண்ட கவிதைகள் உருவாக்கம் பெற்றன. தமிழ் உணர்வை ஊட்டத்தக்க உணர்ச்சிமயமான ஓசைப்பாங்கான கவித்துவம் மிக்க கவிதைகள் எழுந்தன.

1956 இல் ஏற்பட்ட தேசியம் தொடர்பான எழுச்சி இலக்கியத்தில், கணிசமான அளவு தமிழ் இலக்கியத்திலும் பிரதிபலிப்பை ஏற்படுத்தியது. இந்தத் தேசியம் தொடர்பான சிந்தனையை இயக்க ரீதியில் பொருள்

(18 ஆம் பக்கம் பார்க்க)

# சங்கீதம் பழக்கப்போன கழுதையின் கதை

## பாரதியார் கதை

(சென்றவாரத் தொடர்ச்சி)

குயில் சொல்லுகிறது -

"கேளாய் ரஸிகமாமா, கங்காதீரத்தில் ராமநகரம் என்ற ஊரில் ஒரு வண்ணான் வீட்டிலே 'பக்திவிஸ்தாரண்' என்றொரு கழுதை இருந்தது. தாய் சொன்ன வார்த்தை தட்டாது. யார் சொன்ன வார்த்தையும் தட்டாது. சிறு பிள்ளைகள் கல்லெறிந்தால் கனைத்துக்கொண்டு ஓட வேண்டாமோ? அதுகூடச் செய்யாது. பொறுமையே அவதாரம் செய்தாற் போன்ற கழுதை. ஒருநாள் நதிக்கரையிலே புல் மேய்ந்து கொண்டிருக்கையிலே பக்கத்திலிருந்த ஒரு மரத்தின் மேல் இரண்டு காக்கைகள் பின்வருமாறு சம்பாஷனை செய்து கொண்டிருந்தன. அந்த வார்த்தைகளையெல்லாம் கழுதை கவனத்துடன் கேட்டது. ஒரு காகம் சொல்லுகிறது -

"பிரயாகையில், கங்கையும் யமுனையும் வந்து சேரும் இடத்தில் ஒருவன் போய் விழுந்து பிராணனை விடும்போது அடுத்த ஜன்மத்தில் என்ன பிறவி வேண்டுமென்று நினைத்துக் கொள்ளுகிறானோ, அதே பிறவி அவனுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். இந்த விடயம் உனக்கு இதுவரை கேள்வியுண்டா?"

இதற்கு இரண்டாம் காகம் - "உனக்கு யார் சொன்னார்கள்?" என்று கேட்டது.

முதற்காகம் - "இன்னார் சொன்னார்களென்பதை உன்னிடம் சொல்லக் கூடாது. அது ரகசியம். ஆனால், உண்மைதான், எனக்கு நிச்சயமாகத் தெரியும்"

இரண்டாவது காகம் - "உன்னிடம் சொல்லியது யார்?" என்று மறுபடியும் வற்புறுத்திக் கேட்டது.

முதற்காகம் - "அட நம்பிக்கையில்லாத ஜந்துவே! உனக்கு நல்ல கதி ஒரு நாளும் ஏற்படாது! யார் சொன்னதென்றா கேட்கிறாய்? என்னுடைய குரு சொன்னார். அவரைப் போன்ற ஞானி பிரமலோகத்திலே கூடக் கிடையாது. ஒரு காலத்தில் பிரம தேவனுக்குப் படைப்புத்தொழில் சம்பந்தமாக ஒரு சந்தேகமேற்பட்டது. உடனே பிரம்மா நாரதரை அனுப்பி என் குருவை அழைத்துவரச் சொல்லித் தமது சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொண்டார்." இந்த வார்த்தையைக் கேட்டவுடனே இரண்டாங்காகம் 'கலகல'வென்று சிரித்து, அங்கிருந்து பறந்தோடிப் போய்விட்டது. சம்பாஷணை முழுவதையும் மிகுந்த சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருந்த கழுதை உடனே அவ்விடத்திலிருந்து புறப்பட்டு இராப்பகலாக நடந்து "திரிவேணி சங்கமம்" (அதாவது, பிரயாகையில் கங்கையும் யமுனையும் கூடுமிடம்) வந்து சேர்ந்தது.

அந்த இடத்திலே போய்க் கழுதை, பின்வருமாறு நினைத்துக்கொண்டு முழுகிப் பிராணனை விட்டது - "இந்த வடதேசத்திலே எனக்கு சந்தோசமில்லை. அடுத்த ஜன்மம் தென்னாட்டிலே பிறக்க வேண்டும். ஒருவிதமான குடும்பத் தொல்லையுமில்லாமல், எல்லா இடங்களிலும் இஷ்டப்படி சஞ்சாரம் செய்து கொண்டு, எல்லா ஜனங்களும் இனாமாகப் போடும் போஜனத்தைத் தின்று கொண்டு, சந்தோஷத்துடன் வாழும் ஒரு மனித சந்நியாசியாகப் பிறக்க வேண்டும். ஆனால், இந்தக் கழுதைப் புத்தி மாறாதபடி இருக்கவேண்டும். வெளியில் சந்நியாசி போலிருந்து எல்லாரும் உபசாரங்கள் செய்தபோதிலும், என் மனதிற்குள்ளே 'நாம் கழுதை' யென்ற ஞாபகம் நிலைபெற்றிருக்க வேண்டும்"

இவ்விதமான தியானத் துடன் இறந்து

# கர்த்தப ஸ்வாமிகள் என்ற ஆண்டி கதை

போன கழுதை மறுஜன்மத்திலே தென்னாட்டில் ஒரு ஊரில் ஒரு நல்ல குடும்பத்திலே ஆண் குழந்தையாகப் பிறந்து வளர்ந்தது. தாய் தந்தையர் இந்தப் பிள்ளைக்கு 'முத்துசாமி' என்று பெயர் வைத்தார்கள். முத்துசாமி மனதிலே தான் கழுதை என்ற ஞாபகம் பரிபூர்ணமாக இருந்தது. பூர்வ ஜன்மத்தைப் பற்றி வேறுயாதொரு நினைவுமில்லை. ஆனாலும், தான் மற்ற மனிதர்களைப் போலில்லை என்பதும், உள்ளுக்குள்ளே கழுதை என்பதும் அவன் சித்தத்தைவிட்டு நீங்கவில்லை. பதினாறு வயதாகும் முன்பாகவே இவன் சந்நியாசியாகிக் காவி வஸ்திரம் தரித்துக் கொண்டு ஊரூராகப் பிச்சை வாங்கி யுண்ணும் துறையிலே இறங்கிவிட்டான். முத்துசாமி என்ற பெயரைத் துறந்து கர்த்தப ஸ்வாமிகள் என்று பெயர் வைத்துக்கொண்டான்.

கர்த்தபமென்றால் சம்ஸ்கிருத பாஷையில் கழுதைக்குப் பெயர். இவனுக்குத் தமிழ், சம்ஸ்கிருதம் இரண்டு பாஷையும் தெரியும். வயிரவர் உபாசனையுமுண்டு. உலகத்திலுள்ள பாஷைகளெல்லாம் சம்ஸ்கிருதத்திலிருந்து வந்ததாகவும், அது தமிழிலிருந்து முளைத்ததாகவும் ருஜுப்படுத்தி ஒரு புத்தகமெழுதினான். இப்போது பாரத கண்டத்திலே நாலாயிரம் ஜாதிகளாகக் குறைந்துபோய் விட்டது நியாயமில்லையென்றும், ஆதியிலே நாற்பதினாயிரம் ஜாதிப் பிரிவுகள் இருந்தனவென்றும், அந்த ஏற்பாட்டை மறுபடி ஸ்தாபனம் செய்ய வேண்டுமென்றும், ருஜுப்படுத்தி மற்றொரு நூல் செய்யுளாக எழுதினான். நிகண்டைப் பார்த்து அதிலுள்ள தெய்வப் பெயர்களையெல்லாம் ஒன்று சேர்த்து, இவையெல்லாம் தன்னுடைய இஷ்ட தேவதையாகிய வயிரவ மூர்த்தியின் திருநாமங்களென்று சொல்லி ஒரு நாமாவளி ஏற்படுத்தினான். பூணூல் போடும் வரை, பிராமணப்பிள்ளை சூத்திரனாக வேயிருப்பதால், அவன் பார்க்க மற்ற பந்துக்கள் ஆஹாரம் பண்ணுவது கொடிய அநாசாரமென்று ஒரு கக்ஷி கொண்டு வந்தான். பூணூல் போடாத பிராமணக் குழந்தைக்குத் தாய்பால் கொடுக்கும்படி நேரிட்டால், பின்பு ஸ்நானஞ் செய்யாமல் வீட்டுப் பாத்திரங்களைத் தொடக்கூடாது. அப்படித் தொட்டால் அவள் ரௌரவாதி நரகங்களுக்குப் போவதுடன், அந்தக் குடும்ப முழுமைக்கும் அதோகதி நேரிடுமென்று ஸ்தாபனம் செய்தான். இவனுக்கு வேண்டிய மட்டும் சிஷ்யர்கள் சேர்ந்து விட்டார்கள். பணமும் சேர்ந்தது. ஒரு மடம் கட்டினான். "நாற்பதினாயிர - ஜாதிபேத - பூர்வத்திராவிட - வயிரவ - கர்த்தப - பிராமணாசிரம - பஹிஷ்கார - மஹா - மடம்" என்று அந்த மடத்துக்கும் பெயர் வைத்தான்... இந்த மடத்துக்கு, ரோஜாப் பூ என்ற பாம்புப்பெண் வந்து சேர்ந்தாள்.

(தொடரும்)



# 'இரத்தக் கண்ணீர்' எம்.ஆர். ராதா

✱ சினிமாவில் சீர்திருத்தக்காரர். நாடகத்தில் கலகக்காரர். அரசியல் மேடையில் சீறினால் இடியாக இறங்குவார். தனிமையில் சீண்டினால் வெடியாக வெடிப்பார். எம்.ஆர்.ராதா... எவருக்கும் அஞ்சாத ராஜா!

✱ மதராஸ் ராஜகோபாலன் ராதாகிருஷ்ணன் என்பதன் சுருக்கம் எம்.ஆர்.ராதா. ஜெர்மன் போர்க் கப்ப லான 'எம்டன்' சென்னையில் குண்டு வீசிய அன்று பிறந்தவர் என்பதால், அவரது வாழ்க்கை முழுவதும் வெடிச் சம்பவங்கள் நிறைய!

✱ அப்பா ராஜகோபாலன், இந்திய இராணுவத்தில் இருந்தவர். முதலாம் உலகப் போரில் பங்கேற்று மெசபடோமியாவில் பலியானவர். அதற்காகப் பெற்ற வீரப் பதக்கத்தை எப்போதும் பொக்கிஷமாகவைத்து இருப்பார் ராதா!

✱ சின்ன வயதிலேயே வீட்டுக்கு அடங்காத பிள்ளை. அதனால் பாடசாலையில் படிக்க மனம் இல்லை. 'நான் ஓர் அநாதை' என்று சொல்லி, ஆலந்தூர் அரங்கசாமி நாடகக் குழுவில் சேர்ந்தார். நல்லதங்காள் நாடகத்தில் அவள் கிணற்றில் வீசும் குழந்தைகளில் ஒன்றாக மேடையேறியது முதல் அனுபவம். 'நாடகத்தில் நடிக்கச் சொல்லிக்கொடுத்தவர் ஜெகநாதய்யர்தான்' என்பார்!

✱ ராதா நடித்த முதல் படம் 'ராஜசேகரன்' (1937). கடைசிப் படம் 'பஞ்சாமிர்தம்' (1979). சினிமா வாய்ப்பு கிடைத்ததும் பலரும் நாடகத்தை விட்டுவிடுவார்கள். ஆனால், சினிமா - நாடகம் இரண்டை யும் விடாமல் வைத்திருந்தவர் இவர் மட்டும்தான்!

✱ 'உலகப் பாட்டாளி மக்களே ஒன்று சேருங்கள்' என்று சொல்லி, அரிவாள் சுத்தியல் சின்னத்தைக் காட்டு வதைத் தனது ஆரம்ப கால நாடகங்களில் வழக்கமாக வைத்திருந்த ராதா, அதன் பின்பு திராவிடர் கழகக் கொடியையும் பெரியார் படத்தையும் காட்டிவிட்டுத்தான் நாடகத்தை ஆரம்பிப்பார்!

✱ ரத்தக் கண்ணீர் நாடகம் 3 ஆயிரத்து 21 நாட்கள் அரங்கேற்றப் பட்டது. தூக்குமேடை நாடகம் 800 நாட்களும், லட்சுமிகாந்தன் நாடகம் 760 நாட்களும் அரங்கேற்றப்பட்டுள்ளன!

✱ ப்ளைமௌத், அம்பாஸடர், இம்பாலா எனப் பல கார்களை வைத்திருந்தார். இம்பாலாவில் ஒருநாள் எருமை மாட்டுக்கு வைக்கோல் எடுத்துச் சென்றதைப் பார்த்துப் பலரும் ஆச்சரியப்பட்டார்கள். 'நமக்குப் பயன்படுறதுக்குத்தானப்பா கார். தகரத்துக்கு கலர் பெயின்ட் அடிச்சதுக் காக, தலையிலயா தூக்கிட்டுப் போகமுடியும்?' என்று கேட்டார்!

✱ நாடகம் நடந்துகொண்டு இருக்கும்போது, செருப்பு, கல், அழுகிய முட்டை போன்றவை எதிரிகளால் வீசப்படுவது வாடிக்கை. அந்தப் பொருட்களை மறு நாள் கண்காட்சியாக வைப்பார். 'நேற்று பேடிகள் விட்டுச்சென்ற சாமான்கள்' என்று அதில் எழுதி வைப்பார்!

✱ எம்.ஜி.ஆரை 'ராமச்சந்திரா' என்றும், சிவாஜியை 'கணேசா' என்றும் அழைப்பார். மற்ற நடிகர்களை எல்லாம் வாடா, போடாதான்!

✱ இவரது நாடகங்களைத் தடை செய்வதற்காகவே காங்கிரஸ் ஆட்சி நாடகத் தடைச் சட்டம் கொண்டுவந்தது. அந்தச் சட்டம் விவாதத்துக்கு வந்தபோது கால்சட்டை, பனியனோடு சபை வளாகத்துக்குப் போய்விட்டார். ஒரு நாடகத்தைத் தடை செய்தால், அதையே பெயர் மாற்றி மறு நாள் போடுவார்!

✱ என்.எஸ்.கிருஷ்ணனைச் சுடுவதற்காக உளுந்தூர்ப்பேட்டையில் கள்ளத் துப்பாக்கி வாங்கினார். விடயம் தெரிந்து, 'நண்பன் கையால் சாகக்கொடுத்து வைத்திருக்கணும்' என்று என்.எஸ்.கே. சொன்னதும், மனம் மாறி கட்டி அணைத்தார் ராதா. திருப்பதி கோயிலுக்கு குண்டுவைக்கப் போய் வெடி மருந்தைக் காயவைத்து, அது வெடித்துச் சிறு விபத்தான சம்பவமும் உண்டு!

✱ எம்.ஜி.ஆரை அவரது ர்மாவரம் தோட்டத்தில் சுட்டு, தானும் சுட்டுக்கொண்டதாகப் பதிவான வழக்கில் ஏழு ஆண்டு கடுங்காவல் தண்டனை தரப்பட்டது. 'நண்பர்கள் இரண்டு பேரும் துப்பாக்கியை வைத்து விளையாடிகிறோம். என்னடா துப்பாக்கி கண்டுபிடிக்கிறான்கள். நானும் சாகலை... ராமச்சந்திரனும் சாகலை. இதுல எல்லாமா ரூப்ளிகேட் வர்றது?'' என்று அதற்கும் காமெடி விளக்கம் கொடுத்தார்!

✱ நான்கரை ஆண்டு காலம் சென்னை மத்திய சிறையில் இருந்தார். அவர் மீது ஆர்வம்கொண்ட வராகக் காட்டிக்கொண்ட கைதி ஒருவர், ஒருநாள் சமையல் செய்து கொடுத்தார். ராதா வளர்த்த பூனை அதை முதலில் சாப்பிட்டதும் சுருண்டு விழுந்து செத்துப்போனது. ஆய்வுக்கு அனுப்பப்பட்ட அந்த உணவில், விஷம் கலக்கப்பட்டு இருந்தது பின்னர் தெரிய வந்தது!

✱ 'அடியே காந்தா... பாரின்ல நீராவியில கப்பல் விடுறான்... நீங்க நீராவியில புட்டு செஞ்சு வயித்துக்குள்ள விடுறீங்க', 'ஊருக்கு ஒரு லீற்றர்... அவனவனுக்கு ஒரு கொள்கை.. அவனவனுக்கு ஒரு பட்டினிப் பட்டா எம்... நான்சென்ஸ்' - இப்படி ராதாவின் வார்த்தைகளைவைத்தே மிமிக்ரி நடிகர் ஆனவர்கள் அதிகம்!

✱ ராமாயணத்தை அதிகப்படியாகக் கிண்டலடித்தவர். 'கீமாயணம்' என்று நாடகம் போட்டார். ராமன் வேடத்தில் இருக்கும்போதே கைது செய்தார்கள். பக்தர்கள் மனம் புண்படுகிறது என்று வழக்குப் போட்டார்கள். 'மனம் புண்படுபவர்கள் யாரும் வர வேண்டாம்' என்று விளம்பரம் கொடுத்தார்!

✱ 'நீங்கள் எதில் அதிக இன்பம் காண்கிறீர்கள்?' என்று கேட்டபோது, 'எதிர்ப்பில்தான். மக்கள் எதை விரும்புகிறார்களோ... அதை எதிர்ப்பதுதான் என் பழக்கம்' என்றார்!

✱ ராதாவுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. எவ்வளவு நீளமான வசனங்களாக இருந்தாலும், யாராவது வாசித்தால் அப்படியே மனதுக்குள் ஏற்றிக்கொள்வார். அவர் சொல்லச் சொல்ல எழுதப்பட்டவை சிறுசிறு வெளியீடுகளாக அந்தக் காலத்தில் வெளிவந்தன. 'அண்ணாவின் அவசரம்', 'ராமாயணமா? கீமாயணமா?' என்ற இரண்டும் அதிக சர்ச்சையைக் கிளப்பியவை!

✱ ரத்தக் கண்ணீர், பாகப்பிரிவினை, பாவ மன்னிப்பு, பலே பாண்டியா, பாலும் பழமும், தாய் சொல்லைத் தட்டாதே, படித்தால் மட்டும் போதுமா, பெரிய இடத்துப் பெண், தொழிலாளி, பெற்றால்தான் பிள்ளையா ஆகிய படங்கள் ராதா வாழ்ந்து காட்டிய படங்கள். 118 படங்கள் நடித்த ராதா 1963 ஆம் ஆண்டில் சாதனையாக 22 படங்கள் நடித்தார்!

✱ மு.கருணாநிதி என்று அதுவரை அழைக்கப்பட்டு வந்தவரை 'கலைஞர் கருணாநிதி' என்று அழைத்துப் பட்டம் கொடுத்தவர். 'நடிகவேளின் தலைமுடியும் நடிக்கும்' என்று கலைஞரும் பாராட்டி இருக்கிறார்!

✱ ''திராவிட இயக்க ஆட்சி தமிழகத்தில் மலரும் போது ராதாதான் கலைத்துறை அமைச்சராக நியமிக்கப்படுவார்'' என்று பகிரங்கமாக அறிவித்தார் அண்ணா. 67 இல் ஆட்சி மலர்ந்தபோது, ராதா கடுங் காவல் தண்டனை பெற்று சிறையில் இருந்தார்!

✱ தன்னைப் பார்க்க இளைஞர்கள், மாணவர்கள் வந்தால் விரட்டுவார். ''போய்ப் படிங்கடா... நாங்க எங்க வேலையைப் பார்க்கிறோம். நீங்க உங்க வேலையைப் போய்ப் பாருங்கடா'' என்பார். மாணவர்கள் சினிமா பார்க்கக் கூடாது என்பது அவரது அழுத்தமான கருத்து!



✱ விழாக்கள், பாராட்டுக்கள் ஆகியவற்றில் விருப்பம் இல்லாத காமராஜர், ராதாவுக்கு மட்டும்தான் புனித ஆடை போர்த்தும் விழாவை நடத்தினார். 'ஆடையில் என்ன புனிதம் வேண்டி இருக்கு? போர்த்துகிறவர் புனிதர்... அதனால் ஏத்துக்கிறேன்' என்று அங்கும் கர்ஜித்தார் ராதா!

✱ 'மக்களின் அஞ்ஞானத்தைப் போக்க விஞ்ஞானம் மட்டும் போதாது. ராதா நடத்துவது போன்ற நாடகங்களும் தேவை' என்று சொன்னவர் விஞ்ஞானி சேர். சி.வி.ராமன்!

✱ 'சுட்டாள்... சுட்டான்... சுட்டேன்' என்ற தலைப்பில் நாடகமும் சினிமாவும் எடுக்கத் திட்டமிட்டார். வி.என். ஜானகி சுட்டாள், எம்.ஜி.ஆர். சுட்டான், நான் சுட்டேன்... என்று விடயம் அறிந்தவர்களால் விளக்கம் சொல்லப்பட்டது!

✱ ''தமிழினத்துக்குத் துரோகம் செய்கிறவர்களை ஒழிக்க ஒரு தற்கொலைப் படை வேண்டும். அதுதான் என்னுடைய லட்சியம். 300 பேர் அதற்குக் கிடைத்தால் போதும்'' என்று தனது கடைசிக் காலத்தில் சொல்லிக்கொண்டே இருந்தார்.

## கவிதையில்......

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதிந்த முறையில் வெளிப்படுத் தியது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம். கவிதைத்துறையில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. எனவே, இலங்கைத் தமிழ்க் கவிதை இலக்கியத்தின் விழிப்புணர்ச்சிக் காலமாக இதனைக் கொள்ளலாம். பாரதிக்குப் பின் தமிழ்க் கவிதைக்குப் புது அர்த்தம் கொடுத்த பெருமையை இதற்குப் பின்னரே இலங்கை பெற்றுக்கொள்கின்றது. சமகால அன்றாட வாழ்வினை ஆதார சுருதி யாகக்கொண்டு, சமுதாய வாழ்வின் சகல முனைகளையும் முனைப்புகளையும் கலாபூர்வமாகக் கவித்துவத்துடன் பதிவாக்குகின்ற கவிதைகள் கவிதை வரலாற்றில் புதிய அத்தியாயத்தை உருவாக்கியுள்ளன.

தாம் சொல்லவந்த கருத்தை நேரடியாகக் கூறாமல் வேறொன்றைக் கூறி அதன் மூலம் மேலும் ஆழமாக நம் மனதில் அக்கருத்தை பதிய வைப்பதன் பொருட்டு தேசிய எழுச்சி சார்ந்த பாடல்களில் பாரதி பயன்படுத்திய சொல் மற்றும் காட்சிப் படிமங்கள் ஆகியவை கவித்துவத்தின் சாரத்தை கண்டுணர ஏதுவாக இருக்கின்றன. இந்த படிமங்களினூடேதான் பாடலின் பொருளானது வார்த்தைகளுடன் ஒட்டிக்கொண்டிருக்கிறது. கவிஞனின் தன்னியல்பில் வார்த்தைக் கூட்டங்க ளுடன் பீறிட்டு வெளிக்கிளம்பி வரும்போது அவை படிமமாக நமக்குள் தேங்கி உயிரியக்கம் கொள்ளத் தொடங்குகின்றன.

சமூகப் பொருளாதார அடிமைத்த ளங்களால் கட்டுப்பட்டிருக்கின்றமை குறித்தும் சாதியம், தீண்டாமை, போலி ஆசாரம் என்பவற்றைச் சாடி கவிதைகள் பேசத்தொடங்கின. உள்ளடக்கச் செறிவில் ஏற்பட்ட மாற்றங்களோடு பேச்சோசை கொண்ட வசனத்தின் உச்ச நிலையே செய்யுள் என்பதைப் புரிந்து கொண்டு, வடிவம் தொடர்பான அழுத்தம் கொடுக்க முற்பட்டனர். இத்தகைய காலகட்டத்தில் முகிழ்ந்த கவிஞர்களை நவீன தமிழ்க்கவிதைக ளின் முன்னோடிகள் என அழைக்கலாயினர்.

கவிஞர்களின் ஆளுமைகள், தனித்தனியாக நோக்கப்பட வேண்டி இருந்தபோதிலும் ஒட்டுமொத்தமாக அவர்களின் நிலைப்பாடுகளை நோக்குவோமாயின் சாதியம், சீதனம், பெண்நிலை, மூடக்கொள்கைகள், கல்வி, இளைஞர் நிலை, வர்க்க முரண்பாடு, சுரண்டல் முதலான பல்வேறு கோணங்களில் முகிழ்ந்தெழும் கவிதை வார்ப்பில் பிரதேச சொல்லாட்சிகளும், பாட்டு அம்சங்களும் இயல்பாகவே அமைந்துள்ளன. மேலும் சமூகப் பலவீனங்களை எள்ளல் சுவையோடு கிண்டல் செய்வதும் அவதானிக்க முடிகிறது. பொதுவாக நோக்கும்போது ஒரு குறிக்கோளை நோக்கி எழுதப்படும் கவிதைகள் பெரும்பாலும் கவித்துவம் மிக்க கவிதைகளாகவே அமைந்துவிடுகின்றன. ✱

# பாசமலர்



"அண்ணாச்சி இந்தா... இந்த தோடுகள புடி அண்ணாச்சி. ஒரு பவுனுக்கு எண்ணாயிரம் காசு குடுக்கிறாங்களாம். வலைஞர்மடம் குருசடி ரோட்டிக்கு பக்கத்துல நகை வேண்டுற ஆட்கள் இருக்கிறாங்களாம். வித்து ஏதாவது சாமான் வேண்டு அண்ணாச்சி." தனது தோடு ஒன்றினை கழற்றிய படியே தங்கை அற்புதா சொன்னபோது, என்ன பேசுவது என்றே அற்புதனுக்கு தெரியவில்லை. அவனுக்கு கண்கள் கலங்கின தங்கையிடம் இருப்பது தோடு மட்டுமே. மோதிரம், சங்கிலி எல்லாம் ஏற்கனவே விற்கப்பட்டாகி விட்டன தோட்டினையும் விற்றுவிட்டால் அவளின் காதுகூட வெறுமையாகிவிடும்.

''வேணாம் செல்லம்; அண்ணன் ஏதாவது ஒரு வழி பார்த்து புள்ளைக்கு சாப்பாடு தருவன். நீ தோட்டை போடு. கழட்டாதை அது ஒன்டுதான் காதோட இருக்கு'' என சொல்லியபடி அவளை அணைத்து அவளின் தலையை தாய்மை உணர்வோடு தடவினான் அற்புதன். அவளை அவன் ஒரு தாய் போலத்தானே பார்த்துக்கொள்கிறான்.

இப்போது நேரம் நான்கு மணி ஆகிறது. வலைஞர்மடம் குருசடி வீதியிலே அந்த சிறிய தாமரைக்குளத்தினை அண்டி இருக்கும் ஆயிரக்கணக்கான தரப்பாள் கொட்டகைகளில் அறுபுதன். அற்புதா இருக்கும் கொட்டகையும் ஒன்று. வெறும் வெட்டைவெளி. ஆனாலும் இவர்களின் கொட்டகை அருகோடு சிறிய நாவல்மரம் ஒன்று இருந்ததால் வெயிலின் முழுமையான ஆக்கிரமிப்பிலிருந்து கொஞ்சமாவது தப்பி இருந்தார்கள். மலசலம் கழிப்பது தான் பெரிய பிரச்சினை. அவ்விடத்திலே அதற்கான வசதிகள் இல்லை. சிலர் ஏதோ... தற்காலிக மலசல கூடங்களை அமைத்து இருந்தார்கள். ஆனால், இவர்கள் இருக்கும் கொட்டகையை சுற்றி நாலாபுறமும் மிக அருகாகவே வேறு ஆட்களின் கொட்டகைகள் இருந்ததனாலும் இவர்களுக்கு மலசலக்கூடம் அமைக்க இடமே இல்லை. அந்த இடமிருந்து எண்ணூறு மீற்றர் கடந்து, பிரதான வீதிக்கு மறுபக்கமுள்ள சிறு பற்றைகள்தான் கழிப்பிடமாக மாறி இருக்கிறது. அந்த நெருக்கடியிலும் சுகாதாரத்திற்கு முக்கியம் கொடுத்தார்கள். மலம் கழிக்க போகும்போது ஒரு மண்வெட்டியுடனே போவார்கள் சிறிதான கிடங்கு வெட்டி மலம் கழிப்பது அப்போதைய வழமை. ''அண்ணாச்சி ... நான் போய் கல்வீட்டு வளவில தண்ணி எடுத்திட்டு வாறன். நீ எங்கையும் போறியா அண்ணாச்சி.'' செல்லமாகவே தங்கை அற்புதா கேட்டாள். ''நீ தண்ணி

-யோ. புரட்சி

எடுத்திட்டு வா அங்க இங்க திரியாதை. கண்டபாட்டில செல்லுகள் வந்து விழுது கிணத்தடிக்கு பின்னுக்குள்ள தென்னைக்கு பக்கத்துல மூடாத பங்கர் இருக்கு. செல்லுகள் விழப்போகுதென்டா ஓடிப்போய் அதுக்குள்ள இருந்திரு. வெட்கப்பட்டுக்கொண்டு இருக்காதை'' அறிவுரையாகவே சொன்னான் அற்புதன். ஐ.சி.ஆர்.சி நிறுவனம் கொடுத்த ஐந்து லீற்றர் அளவுள்ள அந்த இறப்பர் நீர்க்கானை தூக்கியபடி கல்வீட்டு வளவு நோக்கி நகர்கின்றாள் அற்புதா. பத்தொன்பது வயதுப்பெண் அற்புதா. அவளின் கால்களில் உள்ள செருப்புக்கள் கூட இப்போது வேறு வேறுதான். முன்பு பலவிதமான சான்டில்ஸ் வைத்திருந்தாள் அவள். இப்போதோ வலதுகாலில் மெல்லிய நீலநிற ஏழுசைஸ் செருப்பு. இடதுகாலில் கறுப்புநிற எட்டு சைஸ் செருப்பு. ஆனந்தபுரத்தில் இருந்து ஏழெட்டு நாட்களுக்கு முன்பு இரவிரவாக இடம்பெயர்ந்து ஓடிவந்தபோது பச்சை புல்மோட்டை பகுதியூடான சேற்றுப் பகுதியால்தான் ஓடி வந்தார்கள். உயிர் தப்பியதே போதும் என்று வந்தபோது செருப்பு, உடுப்பு எதுவும் அவர்களால் கொண்டுவர முடியவில்லை.

இன்று சாப்பாட்டுக்கு என்ன செய்வது? அற்புதனுக்குள் ஒரு யோசனை. காலை வேளைகளில் வரிசையில் நின்று கஞ்சியை வாங்கிக்கொள்ளலாம். பகல்வேளை சாப்பிடாமலேயே இருக்கலாம். இரவு ஏதாவது செய்ய வேண்டுமே. அதுவும் தங்கை அற்புதா பாவம் மூன்று நாட்களுக்கு முன்பு அற்புதனின் தூரத்து உறவுமுறை குடும்பமொன்று இரவுவேளை கடல்வழியாக படகிலே புல்மோட்டைக்கு போய்விட்டார்கள்.

அவர்கள் போவதற்கு முதல் அவர்களிடம் இருந்த ஓர் ஆட்டோவையும், ஒரு மிதிவண்டியையும் அற்புதனுக்கென்று கொடுத்துவிட்டு போயிருந்தார்கள். அவர்கள் மட்டுமே இவர்களுக்கு தெரிந்த உறவு. இப்போது அவர்களும் போய்விட்டார்கள்.

அந்த சிறிய பகுதிக்குள் அந்த ஏப்ரல் மாத நெருக்கடியான பொழுதிலே வாகனங்களுக்கு அதிக முக்கியம் இருக்கவில்லை. அதுவும் எரிபொருள் தட்டுப்பாடு என்பதால் ஆட்டோ, வான் எல்லோருக்கும் பயன்தராது. ஆட்டோவை வைத்திருப்பதிலும் பார்க்க அதை கொடுத்துவிடுவது என்று தீர்மானித்தான் அற்புதன். குருசடி வீதியூடே மிதிவண்டியிலே போகிறான் அவன். முள்ளிவாய்க்கால் செல்லும் தார்ச்சாலையை அண்டி கிளிநொச்சி கந்தபுரத்தைச் சேர்ந்த ஒரு பண்ணையார் தனக்கு ஆட்டோ தேவையென்று அறுபுதனிடம் சொன்னார். அதற்கு பதிலாக மூன்று கிலோ அரிசியும், ஒரு மீன் ரின்னும், பாதி தேங்காயும் தருவதாக பண்ணையார் சுந்தரலிங்கம் சொன்னார். உண்மையில் ஓர் ஆட்டோவைவிட அரிசியும், மீன் ரின்னும், பாதி தேங்காயும் அன்றைய பொழுதில் பெறுமதிதான் என்பதில் கடவுளுக்கு கூட சந்தேகம் வரமுடியாது. மனதுள் மகிழ்ந்தான் அற்புதன். கடவுள் இருக்கின்றார் என்பது உண்மைதான் என மனதுள் நினைத்துக்கொண்டான். மிதிவண்டியில் தரப்பாள் கொட்டகை நோக்கி போனான். அங்கே தண்ணீர் எடுத்துவிட்டு அற்புதாவும் வந்திருந்தாள். ''எங்க அண்ணாச்சி போனாய்...'' என்றாள் அவள் ''எல்லாம் சக்ஸஸ், நில்லு வாறன்...'' என்றபடி ஆட்டோவை நோக்கி போனான் அற்புதன். அவளுக்கு விடயத்தைச் சொன்னான். அவள் என்னதான் சொல்ல முடியும். ஆயிரக்கணக்கான வாகனங்கள் இந்த குறிப்பிட்ட காலத்தில் எறிகணைகளில் சிக்கி இல்லாமல் போயிருக்கின்றன. இதுகூட நிலையில்லாத இடம். இந்த ஆட்டோவுக்கு நாளை ஒன்று நடந்தால் காற்சுண்டு அரிசிக்குகூட ஆட்டோ கொடுக்க முடியாது. ஆட்டோவை கொடுப்பது நியாயமாகவே பட்டது.

கந்தபுரம் சுந்தரலிங்கத்தின் கையிற்கு ஆட்டோ மாறியது. மூன்று கிலோ வெள்ளைப்பச்சை அரிசி, ஒரு ஜக்மகரல் மீன்ரின், முட்டுக்காயை ஒத்த பாதி தேங்காய் அதற்கு ஈடாக கிடைத்தது. அந்த அரிசி போதுமே மூன்று நாட்களின் வயிற்றுப்பாட்டுக்கு. இரண்டு, மூன்று நாட்களில் ஐ.சி.ஆர்.சி கப்பல் வந்தால் இடையிலே வேறு நிவாரணம் ஏதும் கிடைத்துவிடும். ஒருவாறு சாப்பாட்டு பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைத்துவிட்டது. அற்புதாவின் தோடு விற்கவேண்டியது இல்லை.

***

அற்புதனும், அற்புதாவும் மாங்குளம் பனிக்கன்குளம் எனும் பகுதியைச் சேர்ந்தவர்கள். அற்புதனுக்கு வயது 23, அற்புதாவிற்கு வயது இருபது. 1990ஆம் ஆண்டு இவர்களின் அப்பா யுத்த வன்முறையொன்றிலே துப்பாக்கிச் சூட்டுக்கு இரையானார். தாய் செல்லமுத்துதான் மாவிடித்து, தூளிடித்து இவர்களை வளர்த்து ஆளாக்கினாள். பாவம் செல்லமுத்து, இயற்கையாகவே இருந்த இதயநோய் காரணமாக இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டு அவள் இறந்து போனாள். அற்புதாவுக்கு அன்னையாய், தந்தையாய் மாறினான் அற்புதன். அவளை கஷ்டப்பட்டு படிக்க வைத்தான். ஒரு தனியார் மினிபஸ் ஒன்றில் கிளீனர் வேலை பார்த்தான் அவன். மண்வீடு என்றாலும் மகிழ்ச்சி வீடு. கிளிநொச்சியில் உள்ள கிறிஸ்தவ கன்னியர் மடம் ஒன்றில் தங்கியிருந்து படித்தாள் அற்புதா. அவளுக்கு தேவையான எல்லாவற்றையும் உழைத்து வாங்கி கொடுப்பதுதான் அற்புதனின் வேலை. அவளுக்கு ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்துவைத்து. அவளை வாழவைத்து அழகு பார்க்க

**உண்மைக்கதை**

வேண்டுமென நித்தம் ஆசை வளர்த்து வந்தான் அவன். ஆனால், கணக்குகள் பிழையானது. யுத்த நிறுத்த சூழல் முடிந்து யுத்தம் தொடங்கியது. இவர்கள் வாழ்க்கையும் யுத்தமானது. கல்வி, தொழில், வாழ்விடம், நிம்மதி எல்லாம் தொலைவானது. நாள்தவறா இடப்பெயர்வும் சென்று பதினாறாவது இடமாக இருப்பதுதான் இந்த வலைஞர்மடம்.

***

பொழுது புலரப்போகிறது. வலைஞர்மடம் இருளில்தான் இருக்கிறது. காலை ஐந்துமணி. பற்றைப் பகுதியில் மலம் கழிக்க செல்ல வேண்டும் என்பதால் இருளோடு மலம் கழிக்க செல்வது அற்புதனின் வழமை. அற்புதா நான்கு மணிக்கே எழுந்து போய் வந்துவிட்டாள்.

''அற்புதா செல்லம் மண்வெட்டி எங்க அம்மா''

''விறகுக் கட்டுக்கு பக்கத்தில இருக்கு அண்ணாச்சி''

மண்வெட்டியையும் எடுத்துக்கொண்டு, ஒன்ரரை லீற்றர் சோடாப்போத்தலில் தண்ணீரும் எடுத்துக்கொண்டு குருசடி கிரவல் வீதியூடே சிறுபற்றை நோக்கி போகிறான் அற்புதன். மலம் கழிக்க போவதுகூட ஏதோ வயல்வேலைக்கு போவது போலத்தான். ஆங்காங்கே எறிகணைகள் விழுந்து வெடிக்கும் சத்தத்தையும் 'பளீர்' வெளிச்சத்தையும் உணர முடிகிறது. தார்ச்சாலை கடந்து போகிறான் அற்புதன்.

அரைமணி நேரம் கழிந்திருக்கும். போன அண்ணா இவ்வளவு நேரம் தாமதிப்பது இல்லையே என யோசித்துக்கொண்டிருந்தாள் அற்புதா. இப்போதெல்லாம் காலைத் தேநீர் இல்லை. காரணம் சீனி அவர்களிடம். இல்லை காலையில் அடுப்புக்கு வேலை இருப்பது இல்லை. நிறுவனம் ஒன்று கொடுக்கும் கஞ்சியே காலையுணவு.

மெல்லமெல்ல பொழுது புலரத் தொடங்கி வெளிச்சம் தெரிகிறது. 'திடுதிடு'வென அற்புதா இருந்த கொட்டகை நோக்கி அந்த சின்னத்தங்கை ஓடி வந்தாள் ''அக்கா...அக்கா...'' என கூப்பிட்டபடி தரப்பாள் கொட்டகையின் வாயிலுக்கு அந்த தங்கை வந்தபோது அதிர்ச்சி கலந்த பயத்தோடு 'என்ன...' என்றாள் அற்புதா. முதலில் தடுமாறிய தங்கை மூச்சிரைத்தபடியே சொன்னாள் ''உங்கட அண்ணா ரெய்லெற்றுக்கு போய் திரும்பி வந்துகொண்டிருக்கேக்குள்ள ஷெல் விழுந்ததில காயப்பட்டிட்டார். தார் ரோட்டடி பவா அக்கா கடையோடதான் காயப்பட்ட ஆட்கள வைச்சிருக்கினம்.'' என்று சொன்னாள் தங்கை.

(23ஆம் பக்கம் பார்க்க)


# கடலைக்கொட்டையை தேடிய குரங்கு

புத்தாக்கம்: கே.கர்ன்

1




2




3







## சிறுவர் கைவண்ணம்



Y. கோகிலவாணி, தரம்-03,
இ/இராசகலை த.வி, பலாங்கொடை.



R. தாருணி, தரம்-03
இ/இராசகலை த.வி, பலாங்கொடை.

## புலியின் இறைபக்தி

ஒரு பாதிரியார் காட்டினூடாகச் சென்று கொண்டிருக்கும்போது புலி ஒன்று எதிர்ப்பட்டது. பயத்தினால் அவருடைய கண்கள் மூடிக்கொண்டன. சில கணங்களுக்கு பிறகு அவர் கண்களைத்திறந்து பார்த்த போது புலியும் கண்களை மூடியவாறு ஏதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

இதனைக்கண்டு மகிழ்ச்சியுற்ற பாதிரியார் "சகோதரன் புலியே, நீ இறைவனை நம்புகிறாய் என்று எனக்கு தெரிந்து விட்டது. உண்மையிலேயே நீ நல்லவன். நான் தான் வீணாகப் பயந்து போய்விட்டேன்" என்றார்.

"ஆம், பாதிரியாரே இன்றைய உணவுக்காக நான் இறைவனுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டிருந்தேன்" என்று கூறிய புலி, அவர்மீது பாய்ந்து கொன்று தின்றது.

-எம்புரோஸ் பியர்ஸ்

# சதுரங்க ஆட்டக்காரன் 7

-ஸியெம்மே அமீன்



அன்று மாலை நகரத்திலிருந்து வீடு திரும்பும்போது பகீரதன் தனது தங்க நாணயங்களைப் பத்திரப்படுத்தி வைப்பதற்காக ஓர் அலுமாரியை வாகனமொன்றில் கொண்டு வந்து இறக்கினான். அவனோடு சில கொத்தர்களும் வந்தார்கள். புதிதாக இரண்டு வீடுகள் கட்டுவதற்காகவே அவன் அவர்களை அழைத்து வந்திருந்தான். கொத்தர்கள் வீடு கட்டுவதற்கான இடத்தைச் சென்று பார்த்தனர். மறுநாள் வேலைகள் தொடங்கவிருப்பதாக வீட்டார்கள் தெரிந்து கொண்டார்கள். தேவையான சாமான்களுக்கு ஆடர் கொடுத்திருப்பதாக அவன் கொத்தர்களிடம் சொன்னான்.

அன்று இரவுச் சாப்பாட்டுக்கு அனைவரும் அமர்ந்தபோது விசாலாட்சி சம்பந்தமில்லாத சில விஷயங்களைப் பேசிவிட்டு பகீரதனைப் பார்த்து, "உங்கள் முழங்காலுக்குக் கீழே வெட்டுக்காயத் தழும்பு ஒன்று இருப்பதாக அம்பிகா சொன்னாள். அது உண்மை தானா?எப்படி அந்தக் காயம் ஏற்பட்டது?" என்று கேட்டாள்.

பகீரதன் இதைக் கேட்டுத் திடுக்கிட்டான். அந்தக் காயம் எப்படி ஏற்பட்டது என்றும் அவளுக்குத் தெரியும் என்பதை அறிந்த பகீரதன், "எல்லார் கால்களிலும் காயத் தழும்புகள் இருக்கத்தானே செய்யும்" என்று சொல்லிவிட்டு, தான் கட்டப்போகும் வீட்டைப் பற்றிய பேச்சை ஆரம்பித்தான். இது எல்லோருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. வீடுகளின் நீள, அகலம், அறைகளின் எண்ணிக்கை என்பன பற்றியெல்லாம் எல்லோரும் விசாரித்தார்கள். பகீரதன் எல்லோருடைய கேள்விகளுக்கும் பதில் அளித்துக் கொண்டிருந்தான்.

விசாலாட்சிக்கு இப்போது மீண்டும் சந்தேகம் வந்துவிட்டது. 'இவர் அவராக இருக்க முடியாது; நான் தான் வீணாக மனதைப் போட்டு அலட்டிக் கொள்கிறேன். எனக்குப் பைத்தியம் தான்' என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டாள்.

பகீரதன் படுத்தபடியே 'எனது காலில் உள்ள காயத்தழும்பை அவளுக்குத் தெரியும். அவள் முன்னிலையில் தானே அந்த விபத்து நடந்தது. சமாளித்து விட்டேன். நான் யார் என்ற உண்மையை எப்படிச் சொல்வது? ஒரு புறம் தேவதைகள் எச்சரிக்கை! மறுபுறம் என்னுடைய வயது. ஆண்டவா, என்னுடைய வயது மாறாமலே இருந்திருந்தால் செத்தாலும் சரி என்று உண்மையைச் சொல்லியிருக்கலாம். இப்போது பிள்ளைகளிடம் நான் தான் அவர்களுடைய அப்பா என்று சொன்னால் நம்பிவிடவா போகிறார்கள்? என்னைப் பைத்தியக்காரன் என்றல்லவா சொல்வார்கள்' என்று வெகு நேரம் சிந்தனை செய்தபடியே இருந்தான். எப்போது நித்திரை வந்தது என்று அவனுக்கே தெரியவில்லை.

காலையில் லாரி லாரியாக வீடுகட்டும் சாமான்கள் வந்து இறங்கின. சிறிது நேரத்தில் கொத்தர்களும் பல உதவியாளர்களும் வந்து சேர்ந்தார்கள். இரண்டு வீடுகளுக்கும் பிளானைப் பார்த்து அத்திவாரம் போடுவதற்கான நூல்களை அடித்தார்கள். அதன்பிறகு நிலத்தைத் தோண்டும் வேலை ஆரம்பமாயிற்று. அன்று மாலை வரை அந்த வேலைகள் நடைபெற்றுன. பகீரதன் கட்டுக்கட்டாக பணத்தை வைத்துக்கொண்டு அவர்களுடைய கூலிகளைக் கொடுத்ததை எல்லோரும் கண்டார்கள்.

அதனைத் தொடர்ந்து வந்த நாட்களில் மளமளவென வேலைகள் நடந்தேறின. இதற்குள் கதவு, யன்னல் சட்டங்களும் ஒரு புறத்தில் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. பெருந்தொகையானோர் வேலை செய்துகொண்டிருந்ததால் வேலைகள் துரித கதியில் நடந்தன. இரு வாரங்கள் எப்படிக் கழிந்ததென்றே தெரியவில்லை.

அதற்குள் விசாலாட்சியை டாக்டரிடம் அழைத்துச் செல்லும் நாள் வந்தது. தகப்பனும் இரு புத்திரர்களுமாக அவளைக் கூட்டிக்கொண்டு நகரத்துக்குச் சென்றனர். டாக்டர் விசாலாட்சியின் கண்களைப் பரிசோதித்துப் பார்த்தார். பின்னர், "பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. கண்களிலே வெள்ளை படர்ந்திருக்கிறது; ஒபரேஷன் செய்து விடலாம். ஒவ்வொரு கண்ணாகத் தான் ஒபரேஷன் செய்ய வேண்டும்" என்று கூறி அதற்கான செலவையும் கூறினார். குறிப்பிட்ட தனியார் மருத்துவ மனையிலே நிறுத்திவிட்டுச் செல்லுமாறு டாக்டர் அவர்களைப் பணித்தார்.

அந்தத் தனியார் மருத்துவ மனைக்குக் கூட்டிச் சென்று விசாலாட்சியைத் தங்க வைத்துவிட்டு. எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுத்த பின்னர் அனைவரும் வீடு திரும்பினர்.

ஆனால், ஒபரேஷன் என்றால் என்னவென்று பகீரதனுக்குத் தெரியவில்லை. அதைப் பற்றி விசாரித்தால் தன்னுடைய அறியாமையை வெளிக்காட்டியதாகி விடும் என்று பேசாமல் இருந்தான். 'டாக்டர் ஏதாவது செய்வாரே. கண் குணமடைந்தால் சரி ; விசாலாட்சி வருவதற்குள் வீடுகளைக் கட்டி முடித்துவிட வேண்டும். அவள் பார்த்து ஆச்சரியப்பட வேண்டும்' என்று நினைத்த அவன், அவளுடைய கண்கள் குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து திரும்பி வந்த பிறகு தன்னை அடையாளம் கண்டு கொண்டால் என்ன நடக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்த்தான். அவனால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. மனதுக்குள் ஒரே குழப்பமாக இருந்தது. எனவே, அதைப் பற்றிப் பிறகு யோசிப்போம் என்று விட்டுவிட்டு, வீடு கட்டும் வேலையை இன்னும் துரிதப்படுத்துவோம் என்று எண்ணிக்கொண்டான்.

வீடு கட்டும் வேலை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இடையில் ஒரு நாள் பகீரதன் வைத்தியசாலைக்குச் சென்று டாக்டரைச் சந்தித்தான். விசாலாட்சியின் உடல் பலவீனமாக இருப்பதால் ஓரிரு வாரங்கள் நல்ல உணவுகள் கொடுத்து அவளுடைய உடம்பைத் தேற்ற வேண்டும் என்று டாக்டர் கூறினார். 'அதுவும் நல்லது தான்; அந்த வகையில் இன்னும் கொஞ்சம் நாட்கள் கழிந்துவிடுமே' என்று அவன் எண்ணினான். மனைவிக்கு ஆறுதல் கூறி, அவளுக்குத் தேவையான உலர் உணவுகள், பழங்கள், என்பவற்றையெல்லாம் அவன் அவளுக்கு வாங்கிக் கொடுத்ததோடு, கைச் செலவுக்கென்று பணமும் கையில் கொடுத்தான்.

'நான் கண்ணால் கண்டிராத இவர் என்மீது எவ்வளவு அக்கறை காட்டுகிறார்' என்பதைப் பற்றி நினைக்கும் போது அவளுக்குப் பெருமையாகவும் பேராச்சரியமாகவும் இருந்தது. 'ஒரேயொரு தடவை என் கண்களால் இவரைப் பார்க்க முடிந்தால்.......இந்தப் புண்ணியவானுக்குக் கடவுள் அருள் புரியட்டும்' என்று அவள் மனதுக்குள் பிரார்த்தித்துக் கொண்டாள். கண்கள் குணமானவுடன் முதன்முதலாக அவரைத் தான் பார்க்க வேண்டும் என்று அவள் நினைத்துக் கொண்டதைப் பகீரதனிடம் தெரிவித்தபோது, அவன் பயப்படவே செய்தான். அதன் பிறகு என்ன நடக்குமோ என்பதை அவனால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

பகீரதன் அவளை விட்டுப் பிரிந்து செல்லும்போது, வீடு கட்டும் வேலை நடைபெற்றுக்கொண்டிருப்பதால் அடிக்கடி வைத்தியசாலைக்கு வர முடியாதென்றும், பிள்ளைகளை அனுப்பி வைப்பதாகவும் சொல்லிவிட்டு வந்தான். விசாலாட்சியோ அவர் எப்போதும் தனக்கு அருகில் இருப்பதையே விரும்பினாள்.

(தொடரும்)

## அடைமழையைத் திட்டாதே!

மழையைக் கண்டு அஞ்சாதே!
மானைப் போல மிரளாதே!
விளையும் பயிர்கள் அதனாலே
கற்பனை வீணாய்ச் செய்யாதே

வானம் குமுறலும் மின்வெட்டும்
வீணுக்கென்றே எண்ணாதே
ஞானபூமியைப் வளப்படுத்தும்
நைதரசனைத் தந்திடுமே


அடைமழையைத் திட்டாதே
அரிய பெரிய மரங்களெல்லாம்
தடைகளின்றி வளர்வதற்கு
தேவை தண்ணீரன்றோ!

குளிக்க குடிக்க கழுவவும்
குடம்குடமாய்த் தேக்கவும்
படிக்க உதவும் மின்னொளியை
பாங்காய் தருவதும் நீரன்றோ!

-ஏ.ஆர். ஸீனத் நஹ்மா

## செய்து பாருங்கள்

## வண்ண மீன்கள்



**தேவையான பொருட்கள்**

வண்ண பிளாஸ்டிக் பேப்பர், எண்ணெய், ஷாம்பூ, கற்பூரகட்டி, கத்தரிக்கோல், வாயகன்ற பாத்திரத்தில் தண்ணீர்.

**செய்முறை**

படத்தில் உள்ளது போல் மீன் போன்ற மூன்று வடிவங்களில் பிளாஸ்டிக் பேப்பரை வெட்டி எடுத்துக் கொண்டு அதன் வால் பகுதியில் சிறிது கற்பூரத்தை வைத்து தண்ணீரில் விடவும். அல்லது இந்த வடிவங்களை தண்ணீரில் விட்டு விட்டு அதன் நடுவில் உள்ள வெற்றிடத்தில் ஒரு சொட்டு எண்ணெயோ அல்லது ஷாம்பூவையோ விடவும். இப்போது, பிளாஸ்டிக் மீன்கள் தண்ணீரில் அழகாக வட்டமடித்து நீந்தும். செய்து பாருங்கள்!

## இளஞ்சுடர்

தயாரிப்பு : தினா



இரண்டு படங்களுக்கும் இடையில் ஆறு வித்தியாசங்கள் உள்ளன கண்டுபிடியுங்கள்





# மீண்டு(ம்) வந்தார் நித்தியானந்தா!

அஞ்செண்ணெய் குளியல்...
அக்னி சூழ யாகம்..!

பூரண கும்ப மரியாதையோடு, 44 நாட்கள் சிறைவாசத்தை முடித்துவிட்டு ஆசிரமத்துக்குள் கால் வைத்திருக்கிறார் நித்தியானந்தா. ஆசிரம வாசலில் நுழைந்ததுமே நெஞ்சில் கைவைத்து, கண்களை மூடி ஒருகணம் நின்ற நித்தியானந்தா விழிகளைத் திறக்க... உருண்டோடியது கண்ணீர்!

ஆசிரமத்துக்கு வந்ததும் சீடர்களை அழைத்துப் பேசி நலம் விசாரித்தார். "எதுக்கும் கவலைப்பட வேண்டாம்; எல்லாம் நன்மைக்கே!" என்று சொல்லிவிட்டு அறைக்குள் போய்விட்டார். அங்கே அவருக்கு அஞ்செண்ணெய் தயாராக வைத்திருந்தோம். (எள் எண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், விளக் கெண்ணெய், பசு மாட்டு சாணத்தைப் பிழிந்து எடுக்கும் சாறு ஆகியவற்றை ஒன்றாக்கிய கலவைதான் அஞ்செண்ணெய்!) தலையில் தடவிக் குளித்தால், உடல், மனசு எல்லாமே சுத்தமாகிவிடும் என்பது ஐதீகம். அஞ்செண்ணெயைத் தடவிக் குளித்த சுவாமிகள், தியான மண்டபத்துக்குப் போனார். ஆழ்ந்த தியானத்தை முடித்துவிட்டு, ஆசிரமப் பொறுப்பாளர் நித்ய சதானந்தாவை தன் அறைக்கு வரச் சொல்லி நீண்ட நேரம் பேசினார்.

மறுநாள் காலையில் எல்லோரும் ஐந்து மணிக்குத் தயாராக இருக்க வேண்டும் என்று சொல்லி இருந்தார். ஆசிரமத்தில் நந்தி பகவான் சிலைக்கு முன்னால் சுவாமிகள், பஞ்ச தபசு யாகம் செய்யப்போவதுக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டு இருந்தன. பஞ்ச தபசு யாகம் என்பது வட்ட வடிவில் ரெண்டு அடிக்கு குழி வெட்டுவார்கள். அதற்குள் விறகுகளை அடுக்கி அதுக்கு மேல் நெய்யை ஊற்றி தீ மூட்டுவார்கள். வட்டத்துக்கு நடுவில் சுவாமி உட்கார்ந்து யாகம் செய்வார். ராமாயணத்தில் தன்னைக் களங்கம் இல்லாதவள் என்று நிரூபிக்க சீதை தீக்குளித்தார் அல்லவா...! அந்த மாதிரியானதுதான் இந்த யாகம்!

சரியாக காலை ஆறு மணிக்கு குளித்துவிட்டு ஈரத்தோட அந்த வட்டத்துக்குள் சுவாமி வந்ததும் உடனே தீ மூட்டப்பட்டு, தொடங்கிய யாகம் ஒன்பது மணி வரை நடந்தது. தீ அணையாமல் இருக்க தொடர்ந்து அதில் நெய் ஊற்றிக் கொண்டே இருந்தார்கள். சுவாமியோடு சேர்த்து மொத்தமாக 21 சந்நியாசிகள் இந்த யாகத்தைச் செய்தார்கள். யாகம் முடித்ததும் பக்தர்களோடு சர்வ தரிசனத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை என்பதால் தொடர்ந்து பக்தர்கள் வந்தபடியே இருந்தார்கள். எங்கள் கணக்குப்படி அன்றைக்கு மட்டும் சுவாமியோடு சர்வ தரிசனத்தில் ஆயிரம் பேர் ஆசீர்வாதம் வாங்கி இருப்பார்கள். இந்த யாகம் இன்னும் சில தினங்களுக்கு தொடர்ந்து நடக்கும்... !" என்ற ஒரு பக்தர், "இனியாவது சுவாமிகளுடைய அருமை பெருமை எல்லாம் பத்திரிகைகளுக்குப் புரியுமில்லியா..." என்றார் ஏதோ ஒரு நம்பிக்கையில்!

பிடதி ஆசிரமத்தின் தற்போதைய தலைவரான நித்ய சதானந்தாவிடம் செய்தியாளர்கள் பேசினார்கள். "சுவாமி நித்தியானந்தாவுக்கும் எங்களுடைய ஆசிரமத்துக்கும் இது சோதனைக் காலம். அதற்காக, சோதனைகளைக் கண்டு துவண்டு விடமாட்டோம். இப்போது தடைபட்டிருக்கும் சமுதாயப் பணிகளை உடனடியாகத் தொடரச் சொல்லி, சுவாமிகள் சொல்லி இருக்கிறார். நீதிமன்றத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு என்ன செய்ய முடியுமோ, அதைச் செய்வோம்!" என்றார் சதானந்தா.

ஆசிரமத்தோடு நெருங்கிய வட்டத்தில் இருக்கும் சிலரையும் செய்தியாளர்கள் சந்தித்தார்கள்.



"ஆசிரமத்தை மீண்டும் பொலிவோடு நடத்த நித்தியானந்தா முடிவு எடுத்திருக்கிறார். 'ஆன்மிகப் பிரசாரம் எதுவும் செய்யக் கூடாது' என நீதிமன்றம் தடை விதித்து இருப்பதால், அவரால் பக்தர்கள் முன்னால் பெரிதாக ஏதும் பேச முடியாது. ஆனாலும், கர்நாடக வி.ஐ.பிக்கள் பலரிடமும் நித்தியானந்தா தொடர்ந்து பேசி வருகிறார். கர்நாடக முதல்வர் எடியூரப்பா, ஒரு காலத்தில் நித்தியானந்தாவின் தீவிரமான பக்தராக இருந்தவர். சி.டி. விவகாரம் பரபரப்பாகக் கிளம்பியபோதும் கூட, வாயே திறக்காமல்தான் இருந்தார் எடியூரப்பா. ஆளுங்கட்சி முக்கியப் புள்ளிகள் மூலமாக அவரைச் சந்திக்க நேரம் கேட்டார் நித்தியானந்தா. 'நம் சந்திப்பு வெளியே தெரிந்தால், தேவை இல்லாத சங்கடங்கள் வரும். நீங்கள் சம்மதிக்கும்பட்சத்தில் நானே உங்களை வந்து சந்திக்கிறேன். உங்களிடம் சில விஷயங்களை மனம் விட்டுப் பேச விரும்புகிறேன்' என தனது ஆதரவாளர்கள் மூலமாக எடியூரப்பா சொல்லி இருக்கிறாராம். அதனால், விரைவில் மீடியாக்களுக்குத் தெரியாமல் எடியூரப்பா - நித்தியானந்தா சந்திப்பு நிகழும்! என்கிறார்கள் உறுதியாக.

நித்தியானந்தா விவகாரத்தை அம்பலப்படுத்திய லெனின் தர்மானந்தா தரப்போ, "எங்கள் ஆட்கள் இன்னமும் ஆசிரமத்துக்குள் இருக்கிறார்கள். மறுபடியும் நித்தியானந்தா அருள்வாக்கு, மந்திரம் எனச் சொல்லி ஏமாற்று வேலைகளைத் தொடர்ந்தால், நாங்கள் சும்மா இருக்க மாட்டோம். விரைவில் லெனின் தலைமையில் ஓர் அமைப்பை உருவாக்கி, நித்தியானந்தாவுக்கு எதிராகப் போராடுவோம்!" என்கிறார்கள், அடுத்த கட்ட அஸ்திரத்தைத் தீட்டியபடி!

நன்றி - இணையம்


# சம இரவு நாள்

சம இரவு நாள் என்பது சூரியன் நிலநடுக்கோட்டைக் கடந்து செல்லும் நாளாகும். ஆண்டுக்கு இரு தடவைகள் சூரியன் இவ்வாறு நிலநடுக்கோட்டைக் கடப்பது நிகழும். சம இரவு நாள் இவற்றில் எந்தவொரு நாளையும் குறிக்கும். இந்நாட்களில் இரவும் பகலும் ஒரே அளவாக (ஏறத்தாழ 12 மணி நேரம்) இருக்கும். இலத்தீனில் ஈக்வீநாக்சு என வழங்கப்படுகிறது. ஈக்வீ என்பது சமம் என்றும். நாக்சு என்பது இரவு என்றும் பொருள்படும்.



சம இரவு நாட்கள் எப்போது நிகழும் என்பது நிலநடுக்கோட்டிலிருந்து எத்தனை தொலைவு தள்ளி அளக்கப்படுகிறது என்பதைப் பொறுத்தது. சாதாரணமாக மார்ச் 20 அன்றும் செப்டம்பர் 22 அன்றும் இவை நிகழும்.

நிலநடுக்கோட்டிற்கிணையான வட்டப்பாதையில் வலம் வரும் செயற்கைகோள்கள், இந்நாட்களில் புவிக்கு பின்புறம் வரும் நேரம் சூரியகிரகணத்தை சந்திப்பதால் அந்நேரத்தில் சேமிப்பு மின்கலங்களை பயன்படுத்தும். பயனர் தகவல்களை சுமக்காது. புவியின் வடக்குப் பகுதியில் இவை இளவேனில் மற்றும் இளங்கதிர் காலங்கள் ஆரம்பிக்கும் நாட்களாக அறியப்படுகின்றன. பொதுமக்களும் இந்நாட்களை எளிதாக அறிய முடிவதால், பல பண்பாடுகளில் இந்நாட்களில் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.



# 350 கோடி ஆண்டுகளுக்கு முன் செவ்வாயில் தண்ணீர் !

'ஹலோ ரோபோ' பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் ஆய்வின் படி 350 கோடி ஆண்டுகளுக்கு முன்பே செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

அதன் வடக்கு துருவத்தில், அட்லாண்டிக் கடல் அளவு தண்ணீர் இருக்கிறது. இது பூமியில் உள்ள அளவுக்கு சமமானதாகும்.

செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் உள்ளதா, இல்லையா என்ற சர்ச்சை பல ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இதுகுறித்து விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஹலோ ரோபோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் வெளியிட்ட செவ்வாய்க் கிரகத்தின் படங்களை வைத்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

தவிர, ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்க செயற்கைகோள் வெளியிட்ட தகவல்கள் மூலமும் ஆராய்ச்சி செய்தனர்.

செவ்வாய்க்கிரகத்தில் 54 ஆறுகளின் டெல்டா படுகைகள் உள்ளன. இதனால் அங்கு ஆறுகள் உற்பத்தியாகி ஓடிக்கொண்டிருக்க வாய்ப்பு உள்ளது என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இசைப் பிரியர்களே உஷார்...!

இசையை ரசிக்காதவர்கள் யாருமில்லை. தினமும் பாட்டுக் கேட்கும் பழக்கம் பெரும்பாலானவர்களுக்கு உண்டு. சிலருக்கு பாட்டுக் கேட்காமல் தூக்கம் வராது. இன்னும் சிலருக்கு வேலையே ஓடாது. அதனால்தான் பாடல்களை ஒலிபரப்பும் பண்பலைகள் (எப்.எம். ரேடியோ) 24 மணி நேரமும் செயல்படுகின்றன,

பாடல்கள் உற்சாகம் தரக்கூடியவை. அதிக நேரம் பாட்டுக் கேட்பதும், செய்து ஆய்வு நடந்தது.

ஆய்வில் விருப்பமான பாடல்களைக் கேட்பது மனச்சோர்வில் இருந்து விடுவிப்பது, சில மோசமான நினைவுகளை மறக்கச் செய்வது, சில எண்ணங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது போன்றவற்றில் துணைபுரிவது தெரியவந்தது.

பாடல்களை கேட்பதால் 2 பாதிப்புகள் ஏற்படுகிறது என்பதுதான் இந்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட



பாடல்களை முணுமுணுத்துக் கொண்டு இருப்பதும் சில பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று புதிய ஆய்வு கூறுகிறது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மாணவர் மிக்நல்லி, பி.எச்.டி. படிப்பதற்காக இதுதொடர்பான ஆய்வில் ஈடுபட்டார். 100 க்கும் மேற்பட்ட சிறந்த 'பாப்' இசைப் பாடல்களை, இசை உலகைச் சார்ந்தவர்கள் மற்றும் இசை உலகம் சாராதவர்களை கேட்கச் புதிய விஷயமாகும். அதாவது பாடல்களை முணுமுணுத்துக் கொண்டே இருப்பது ஒருவித மன அழுத்தத்தை தருகிறதாம். மேலும் தொடர்ந்து பாட்டுக் கேட்பது காதைப் புண்ணாக்கும் 'இயர்வோர்ம்' என்னும் பாதிப்பு ஏற்படவும், இதன் விளைவாக சோர்வு ஏற்படவும் காரணமாக இருப்பது தெரியவந்தது.

பாட்டுப் பிரியர்களே உஷார்!

## காலியாகிறது...

(06 ஆம் பக்க தொடர்ச்சி)

மூத்ததலைவர் செங்கோட்டையன் திருவாய் மலர்ந்தருளி உள்ளார். 1976 இலும் இவ்வாறு முதல்வராக இருந்த போது கலைஞர் கோவையில் மாநாடு நடத்தினார். அதுமுடிந்த கையோடு 1977 இல் ஆட்சியை இழந்தவர் தான் 13 வருடங்களாக மீண்டும் ஆட்சிக்கு கலைஞரால் வரவேமுடியவில்லை. அதேபோல இம்முறையும் கோவை மாநாட்டுக்குப் பிறகு தி.மு.க ஆட்சி இல்லாதுபோகும் என செங்கோட்டையன் கூறியிருக்கிறார். ஆனால், 1977 இல் கலைஞரை வீழ்த்த மலைபோல எம்.ஜி.ஆர். இருந்தார். இந்தமுறை அப்படி முடியாது. மேலும் அப்போது அனுபவமற்ற 53 வயது கலைஞர் தி.மு.க தலைவராக இருந்தார். இன்றோ 86 வயதில் பழுத்த அனுபவத்துடன் அதே கலைஞர் இருப்பதுடன் ஸ்டாலின் கூட 53 வயதை தாண்டிவிட்டார். எனவே 1976 கோவை மாநாட்டின் பின்பு தி.மு.க கவிழ்ந்தது போல இம்முறை கவிழப்போவதில்லை.

ஜெயலலிதாவை பொறுத்தவரை அடுத்த வருடத் தேர்தல் தனக்கு சவாலாக இருக்குமென்பதை ஓரளவு உணர்ந்தே உள்ளார். காங்கிரஸுடன் கூட்டணிக்கு முயல்வது, புதிதாக ஆர்ப்பாட்டம், மனு வாங்குதல், தொண்டர்களை தரிசித்தல், மீண்டும் பா.ம.கவுக்கு அழைப்பு விடுத்தல் என பல காய் நகர்த்தல்களை செய்ய முயன்று வருவது கவனிக்கத்தக்கது. ஆனால், இந்த முறை தி.மு.க என்ற இமாலயமலையை வீழ்த்த இவைமட்டும் போதாது. காங்கிரஸுடன் கூட்டணி இன்னும் அமையவில்லை. எதிர்பார்த்த படி ராகுல் காந்தி அ.தி.மு.கவுக்கு சமிக்ஞைகளை அனுப்பவும் இல்லை. ஆனால், சமீபத்தில் இளைஞர் காங்கிரஸ் கூட்டத்துக்காக சென்னை வந்த ராகுல்காந்தி அடுத்தநாள் பிறந்த நாள் கொண்டாடிய கலைஞரை மரியாதை நிமித்தமாவது சந்தித்து வாழ்த்து சொல்லவில்லை. இதை அவதானித்து வரும் ஜெயலலிதா உற்சாகமடைந்துள்ளார் என்பது உண்மையே. போதும் ஜெயலலிதாவின் சமீபகால நடவடிக்கைகள்.

சசிகலா குடும்பத்தினால் ஒரு சதத்துபலனும் கிடையாது என்பதை உணர்ந்திருப்பதைக் காட்டுகின்றன. உதாரணமாக நடந்து முடிந்த ராஜ்யசபா தேர்தலில் சசிகலா குடும்பத்தில் எம்.பி.யாவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட தினகரனுக்கோ டாக்டர் வெங்கடேஷுக்கோ இடமளிக்காது உண்மை. அ.தி.மு.க தொண்டர்கள் இருவருக்கு ஜெயலலிதா எம்.பி.பதவி வழங்கியுள்ளார். இவ்வாறு ஒரு சில சரியான நடவடிக்கைகளை எடுத்தபோதும் முத்துசாமி, கரூர் சின்னசாமி போன்ற பெரும் தலைவர்களை இழந்தது அவருக்குப் பேரிழப்பே. உண்மையான எம்.ஜி.ஆர் விசுவாசிகளை புறக்கணித்து சசிகலா குடும்பத்தை முன்னிலைப்படுத்தியதன் விளைவே முத்துசாமி, சின்னசாமி போன்றோரின் இழப்பு ஆகும். ஈரோடு கரூர் மாவட்டங்களில் அ.தி.மு.கவுக்கு இதனால் ஈடுசெய்ய முடியாத நஷ்டம் ஏற்பட்டுள்ளது. கொங்குநாட்டில் தி.மு.கவுக்கு திடீர் உத்வேகம், வளர்ச்சி ஏற்பட இந்த இரு தலைவர்களும் பெரும் உதவியாக இருப்பர். ஏற்கனவே அழகிரி மூலம் தென்பகுதியை அ.தி.மு.க செல்வாக்கிலிருந்து மீட்ட சந்தோசத்தில் இருக்கும் கலைஞருக்கு மேலும் தெம்பு தரும் விதமாக கொங்குநாட்டு அ.தி.மு.க. தலைவர்கள் அணி மாறியமை அமைந்துள்ளது. இது தவிர வடக்கே பா.ம.கவை தந்திரமாக அகப்படுத்துவதிலும் தி.மு.க வெற்றி பெற்றுள்ளது. அன்புமணிக்கு எம்.பி பதவி தேடி தி.மு.கவினர் காலில் விழுந்ததால் இப்போது தி.மு.க அதற்கு மறுத்தநிலையிலும் தி.மு.கவை எதிர்த்துப் பேசும் அருகதையை இழந்தும் தி.மு.கவுடன் ஒத்துப்போக முடியாத நிலையிலும் பா.ம.க உள்ளது. அக்கட்சி தி.மு.க அணியில் இணைந்தாலும் விரும்பிய தொகுதிகளை வற்புறுத்தி பெறமுடியாத பலவீன நிலையிலேயே சேரவேண்டிவரும். தி.மு.கவுக்கோ பா.ம.க தனது அணிக்கு வராவிடினும் அ.தி.மு.க அணியில் சேராதுவிட்டால் போதுமானதாகும். அதாவது, பா.ம.க. தனித்து நின்று அ.தி.மு.கவுடனும் மோதுவதை காணவே தி.மு.க. விரும்புகிறது. அத்தகைய தர்மசங்கடத்துக்கு பா.ம.கவை தள்ளுவதே கலைஞரின் வியூகம் என்பது தெளிவு. *

## பாச...

(19ஆம் பக்க தொடர்ச்சி)

விடிந்துகொண்டிருந்த பொழுதிலே இருண்டது அற்புதாவின் நெஞ்சம்.

ஆண்கள் பயன்படுத்தும் அந்த மிதிவண்டியை எடுத்தாள். அந்த தங்கையோடு குருசடி சந்திக்கு விரைந்தாள். காயப்பட்ட ஆறுபேர் கிடத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு உரப்பைக்கு மேலே படுத்திருக்கும் அற்புதன் எந்த பேச்சுமின்றி கண்களை விழித்து இருக்கிறான். சற்றுத்தள்ளி எறிகணையில் இறந்துபோன மூவரின் உடல்கள் ஒரு கிழிந்த தறப்பாளினால் மூடி வைக்கப்பட்டு இருக்கிறன. "அண்ணாச்சி... அண்ணாச்சி... என்னைப் பார் அண்ணாச்சி உனக்கு ஒன்டும் ஆகாது அண்ணாச்சி" அலறி துடித்தபடி அவனருகோடு குந்துகிறாள் அற்புதா. அந்த தார்ச்சாலை அருகோடு வீழ்ந்த இரு எறிகணைகளில், வீதியில் பயணித்தோரும், மலம் கழிக்க சென்றோரும், அந்த இடத்தில் நடமாடித் திரிந்தவர்களும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். குருதிவாடை தாராளமாகவே வீசுகிறது. இப்போதுதான் இறந்தவர்களின் - காயப்பட்டவர்களின் உறவுகள் செய்தியறிந்து அலறியடித்தபடி ஓடி வருகிறார்கள். காயமடைந்த சிலரின் முனங்கல் ஒலி கேட்கிறது. அற்புதனின் வாயிலிருந்து வார்த்தை இல்லை. அன்பாய் தடவி தேற்றிக்கொண்டிருக்கிறாள் அற்புதா. காயப்பட்டவர்களை நான்கு கிலோமீற்றர் தூரமுள்ள முள்ளிவாய்க்கால் வைத்தியசாலைக்கு ஏற்ற வேண்டும். உடனடி வாகன ஒழுங்குகள் இல்லை. யாரோ ஒருவர் தனது உழவு இயந்திரத்தை எடுத்து வருவதாக ஓடிச்சென்றார். அற்புதனின் இடதுகால் தொடையில் செந்நிறத்தில் சதைத்துண்டங்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. வயிற்றுப் பகுதியிலும் ஓர் எறிகணைச் சிதறல் பட்டிருக்கிறது. பிடரிப் பகுதியில் இன்னுமொரு சிதறல் பட்டிருக்கிறது. அவன் இறந்துவிட்டானா? உயிரோடு இருக்கிறானா என்பதை விவாதிக்கும் நேரமல்ல இது. தான் அணிந்திருக்கும் பாவாடையினால் அவனின் குருதியை துடைத்துக்கொண்டிருக்கிறாள் அற்புதா. இப்போது நிறையவே மக்கள் கூட்டம் செறிந்துவிட்டது. அதோ உழவு இயந்திரம் புகையை கக்கியபடி விரைந்து வருகிறது. உழவு இயந்திரப் பெட்டியிலே ஒரு தறப்பாள் விரிக்கப்பட்டது. அற்புதன் உட்பட காயப்பட்டவர்கள் ஏழு பேர் அதில் ஏற்றப்பட்டனர். கூடவே அற்புதாவும் அந்த உழவு இயந்திரத்திலே போகிறாள். காயப்பட்டவர்களின் உறவினர்கள் பலரும் ஏறிக்கொண்டனர். 'இன்டைக்கு பின்னேரம் ஐ.சி.ஆர்.சி கப்பல் வந்தால் அண்ணாவை எப்படியும் ஏத்திக் கொண்டுபோய் புல்மோட்டையில சுகமாக்கலாம்... கடவுள் ஏன்தான் எங்களையே போட்டு இப்படி ஆட்டிப்படைக்கிறானோ...' அழுதபடியே அந்த உழவு இயந்திரத்தில் இருந்து சிந்தித்தபடி வைத்தியசாலை போய்க்கொண்டிருக்கிறாள் அற்புதா. அவளின் மடியிலே அற்புதனின் தலை. குலுங்கி குலுங்கி போகிறது உழவு இயந்திரம். அவனை பார்க்கவே மனதால் முடியாமல் தவிக்கிறாள் அற்புதா. தனக்காக வாழ்ந்த, தன்னை தாயாக அணைத்த ஒரே உறவு அவன்தானே! அற்புதாவின் கையிலும், மடியிலும் அற்புதனின் குருதி படிந்திருக்கிறது.

முள்ளிவாய்க்கால் வைத்தியசாலையில் காயப்பட்டவர்கள் 'மளமள'வென இறக்கப்படுகிறார்கள். இருந்த வைத்தியர்கள் உஷாரானார்கள். அந்த நெருக்கடியான பொழுதில் ஏதோ இயன்ற அத்தியாவசிய சிகிச்சைகள் மட்டுமே வைத்தியர்களால் வழங்கப்படும். வேறு வசதிகளும் இல்லை. மாமரத்தின் கீழ் வைத்துத்தான் சிகிச்சை. காலை ஆறரை மணி இருக்கும். அற்புதன், ராஜா டொக்டரினால் பரிசோதிக்கப்படுகிறான். கடவுளை வேண்டியபடி தங்கை அற்புதாவின் மனது. அவன் இறந்து எப்படியும் பத்து நிமிடங்களுக்கு மேலிருக்கும் என்பது வைத்தியருக்கு புலப்பட்டது. உழவு இயந்திரத்தில் ஏற்றி வரப்பட்ட வேளையிலேயே அவன் உயிர் அற்புதாவின் மடியிலே பிரிந்துவிட்டது.

அதே உழவு இயந்திரத்தில் வலைஞர்மடம் குருசடிக்கு அற்புதனின் உடல் போகிறது. அந்த இருண்ட காலைப் பொழுதிலே பைத்தியம் பிடித்தவள் போல ஆனாள் அற்புதா. ஏற்கனவே இறந்த மூவரின் உடல்களோடு வலைஞர்மடத்திலே அற்புதனின் உடலும் அடக்கமாகிறது. அந்த கொட்டகையில் மட்டுமல்ல, தன் வாழ்க்கையிலும் வெளிச்சம் இல்லாமல் போய்விட்டது என ஏங்கியது அற்புதாவின் மனசு. அவளால் என்னசெய்ய முடியும். ''அண்ணாச்சி... என்னையும் ஏன் அண்ணாச்சி கொண்டு போகயில்லை. வேகமா என்னையும் உன்னோட எடுத்திரு அண்ணாச்சி...'' அவள் எந்த நேரமும் இப்படி புலம்பியே அழுகின்றாள். மாங்குளம்-பனிக்கன்குளம் பகுதியில் இருந்த அவளின் பாடசாலை நண்பி அஜந்தாவின் வீடுதான் அவளுக்கு அடைக்கலமானது.

ஒரு வாரம் ஓடியது. இப்போது அஜந்தாவின் குடும்பம் வலைஞர்மடத்தில் இருக்கமுடியாமல் இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்கால் ஐ.பி.சி சந்தி எனும் இடத்தின் அருகோடு இருக்கிறார்கள். அற்புதாவும் அவர்களுடன்தான் இருக்கிறாள். இன்று அற்புதன் இறந்து எட்டாவது நாள். பொதுவாக எட்டாம் நாளிலே இறந்தவர்களுக்கு கிரியைகள் செய்வது வழமைதானே. ஆனால், இந்த சூழலில் அயலவரை அழைத்து உணவு எல்லாம் கொடுக்கும் நிலைமை இல்லை. அதற்கு அற்புதாவிடம் வசதியா இருக்கின்றது. சோறும், ஒரு கறியுமாவது அண்ணனுக்கு படைத்துவிட வேண்டும் என எண்ணினாள். சோறு பிரச்சினை இல்லை. கறிக்குத்தான் வழியில்லை. 'அண்ணாச்சிக்கு நஞ்சி சரி படைக்கோனும்' என மனதுள் யோசித்தாள் அற்புதா. அதற்கு முன்பு அண்ணாவுக்காக கோயிலில் சென்று வழிபாடு செய்துவர முடிவெடுத்தாள். அஜந்தாவுடன் சேர்ந்து ஐ.பி.சி. சந்திக்கு அருகிலே உள்ள பாலைமரத்தடியில் அந்த சிறு கோயிலுக்கு போய்க்கொண்டிருக்கிறாள் அற்புதா. அண்ணாவின் ஆத்மா சாந்திக்கு பிரார்த்தனை செய்யவே போகிறாள். அந்த மணற்பகுதி பனைமரங்களை கடந்து சென்றுகொண்டிருக்கிறார்கள்.

கோயிலில் இருந்து நூறு மீற்றர் தூரம் இருக்கும். ஒன்றிரண்டு குடியிருப்புக்கள் இருந்த அந்த வெளியிலே வீழ்கிறது ஒரு ஆட்லெறி எறிகணை. எதிர்பாராமல் வீழ்ந்ததால் இவர்களால் படுக்க முடியவில்லை. புகை சூழ்கிறது. பேச்சு மூச்சின்றி போனாள் அற்புதா. முகத்தில் பட்ட பெரிய எறிகணைச் சிதறலினால் அடையாளமே இன்றிப் போனது அற்புதாவின் முகம். குருதி நிரம்பி கோரமாய் முகம். காயப்பட்ட அஜந்தா சுயநினைவுடன்தான் இருக்கிறாள். அவளின் காலிலே காயம் எழும்ப முடியவில்லை. கால் விறைத்துவிட்டது. தரையூடே இழுபட்டு நகர்ந்து 'அற்புதா...' என்கிறாள். அற்புதா விழிக்கமாட்டாள். அவள் தன் அண்ணாச்சியுடனே போய் சேர்ந்துவிட்டாள். அவளின் ஆத்மா சாந்திக்கு யார் பிரார்த்திப்பார்கள்.

(இறைவா சாந்தி கொடு) *



# மக்கள் களரி

## தற்போது யாழ்ப்பாணத்தில்

மக்கள் களரி நாடக குழு இம்மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 07 ஆம் திகதி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது. இந்த நாட்களில் யாழ்ப்பாண நல்லூர் செம்மணி வீதியில் அமைந்துள்ள தமிழ் கலவன் பாடசாலை மைதானத்தில் நிறுவியுள்ள மக்கள் களரி நடமாடும் மேடையில் ஜூன் மாதம் 21 அம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 02 ஆம் திகதி வரை நாடக விழாவொன்றை நடத்தவுள்ளது.

மக்கள் களரி 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிக்கான வேலைத்திட்டமாகும். நாட்டின் பல்வேறுபட்ட பகுதிகளிலிருந்தும் ஒன்று சேர்ந்துள்ள சிங்கள மற்றும் தமிழ் இளைஞர் யுவதிகளை வைத்து நடத்தப்படுகின்ற முழு நேர நாடக நிகழ்ச்சிகளை கடந்த காலங்களில் நாடுமுழுவும் நடத்தியுள்ளது. ஒரே நேரத்தில் 800 ரசிகர்கள் நாடகங்களை பார்த்து ரசிக்கக்கூடிய 'நிவ்ஸரீனா' நடமாடும் மேடையை மாவட்டம் தோறும் கொண்டு சென்று நடத்தியுள்ளனர். நாகரீக அரங்குகளுக்கு செல்ல முடியாத ரசிகர்கள் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் சரந்தாஸ், மரராக்ஷ மெட்டிகரத்தய, செக்குவ, சீதாம்பரபட்டய (மங்கள சேனாநாயக்க), அந்தாமல் போன்ற நாடகங்களையும், சொரு எவில்லா (சுமித் சமரசிங்க) மற்றும் தெவ் லொவ கமன ஆகிய சிறுவர் நாடகங்களையும் பார்த்து ரசித்துள்ளார்கள். இந்த நாடகங்களில் 'சரந்தாஸ்' நாடகம் 2006 ஆம் ஆண்டு அரச நாடக விழாவின் போது சிறந்த நாடகத்திற்கான விருதைப் பெற்றுக்கொண்டதுடன், மேலும் 9 விருதுகளை தட்டிக்கொண்டது. அதே நேரம், 2008 ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற சர்வதேச நாடக விழாவிற்காக பரிந்துரைக்கப்பட்டது. 'செக்குவ' நாடகம் 1976 ஆம் ஆண்டு அரச நாடக விழாவின் போது 7 விருதுகளைப் பெற்றுக்கொண்ட நாடகமாகும். இம்முறை யாழ்ப்பாணத்தில் இந்த அனைத்து நாடகங்களில் தமிழ் நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன. இந்த நாடக விழாவின் போது கௌரவ நாடகங்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழக லலிதகலா பிரிவினால் விரிவுரையாளர் நவதர்சினி கருணாகரன் தயாரிப்பில் மகாகவி காளிதாசனின் 'அபிஞான சகுந்தலம்' நாடகமும், திருமறைக் கலா மன்றத்தின் 'அட்டை திங்கள்' நாடகமும் மேடையேற்றப்பட்டுள்ளன. இதற்கு






புறம்பாக, யாழ்ப்பாண பாரம்பரிய நாடகக் கலைஞர்களின் பல்சுவை நிகழ்ச்சிகள் ஜூன் மாதம் 27 ஆம் திகதி இந்த நாடக விழாவின் போது உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக வேண்டி யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 வலயக் கல்விப் பிரிவுகளில் நாடகம் மற்றும் கலை பயிற்சிப்பட்டறைகளும் நடைபெறவுள்ளன.

மக்கள் களரி நாடகம் அனைத்தும் பராக்கிரம நிரியெல்லையினால் நிர்ணயிக்கப்பட்டவையாகும். நடராஜசிவம், அமித்த வீரசிங்க, திலீப் ரோஹண, கமலினி செல்வராஜன் மற்றும் பிரேம திலக்க பேருகந்த ஆகியோர் இந்த நிகழ்ச்சிகளை வழிநடத்துவார்கள். நிஷாந்த குலரத்ன, சொக்கலிங்கம் கிருஷாந்தன், அஜந்தன் சாந்தகுமார், வேணி திரேஸா, தியாகராஜன் சிவநேசன், முனியாண்டி காளிதாஸ், சுமுது மல்லவராச்சி, பாலித்த அபேலால், அரோஸா தரங்கனி, ரொனிக்கா ஷாமலி, சினேத் தேவிந்த, மஞ்சுள ரணசிங்க, தாஸன் ஷாம்போல், இராசையா லோகாநந்தன், மலிந்த குமாரி, செல்வராஜ் லீலாவதி, இனோக்கா லங்காபுர, சாந்தினி மல்காந்தி, ரஞ்சித் சுமித், ஜயந்த முத்துதந்ரி, தினேஸ் சுவர்ண சிறி லிவேரா, சுனெத் சாந்தப்ரிய, அசேல சத்தியப்ரபா, தினேஸ் ஆகிய மக்கள் களரி நாடகக் குழு உறுப்பினர்கள் நாடகத்தில் பங்கேற்று நடிக்கிறார்கள். வட மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் மக்கள் களரி வேலைத்திட்டத்திற்கு உதவுகின்றது.



ஏனைய உண்மைச் சம்பவங்கள் மற்றும் மக்கள் அறிந்த கதைகள், அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தச் சமூக அறிவித்தல் தயாரிக்கப்பட்டுள்ளது.



**கையடக்கத் தொலைபேசிகளும், ஆபாசப்படங்களும், தொலைக்காட்சியும் என்று சுருக்கமாகக் கூறலாம்.**


அமலநாதன்,
கண்டி.
கேள்வி: எம்.ஜீ.ஆரின் நிறைவேறாத ஆசைகள் என்று ஏதேனும் உண்டா?
பதில்: இந்த உலகத்திலே எந்தப் பெரிய மனிதனுடையவும் எல்லா ஆசைகளும் நிறைவேறுவதில்லையே. அவர் பல காலமாகக் கனவு கண்டுவந்த 'எல்லைக் காவலன்' என்ற படத்தை எடுக்காமலே அவருடைய உயிர் பிரிந்தது. இத்தனைக்கும் அவர் இதற்கான அத்தனை ஆயத்தங்களையும் செய்துவைத்தே இருந்தார். இது தான் உலகம்!

தயாளன்,
கொழும்பு.
கேள்வி: மீள்குடியமர்வு, புனரமைப்பு போன்ற தேவைகளுக்கு உத்தேசமாக இரண்டு பில்லியன் ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாமே?
பதில்: பாதுகாப்புச் செலவுகளுக்காகப் பெருந்தொகை ஒதுக்கப்பட வேண்டுமே! பாதுகாப்புக்குப் பிறகு தானே மீள் குடியமர்வு!!

பிரதீபன்,
யாழ்ப்பாணம்.
கேள்வி: காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவி ஒரு குடும்பத்துக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டிருப்பதாக பா.ஜ.க. தேசியத் தலைவர் நிதின் கட்கரி குற்றம் சாட்டியிருக்கிறாராமே...?
பதில்: இது குடும்ப ஆட்சிகளின் காலமல்லவா! ஆட்சி மட்டுமென்றால் பரவாயில்லை; நாட்டு வருமானங்களைப் பெறுவதும் அந்தக் குடும்பங்கள் தான் என்று கிசுகிசு இருப்பதை நீங்கள் அறியவில்லையா?

பரணி,
வத்தளை.
கேள்வி: வாக்கெடுப்பின் மூலம் அதிருப திக்குள்ளாகியுள்ள நாட்டுத் தலைவரை

**இன்றைய இளைஞர் சமுதாயம் சீரழியக் காரணம் என்ன?**



நீக்கும் அதிகாரம் மக்களுக்கு வழங்கப்பட்டால்?
பதில்: அந்தத் தேர்தல் முடிவுகள் நியாயமாகத் தான் வெளிப்படுத்தப்படும் என்பதற்கு என்ன அத்தாட்சியிருக்கிறது?

நேசன்,
பதுளை.
கேள்வி: பித்தரே, உணவே மருந்தெனச் சித்தர்கள் அந்தக் காலத்தில் சொல்லியிருக்கிறார்கள்; இந்தக் காலத்தில் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?
பதில்: மென்பானங்களிலும் நாம் உண்ணும் தானியம், பருப்பு, பழவகைகளிலும் இரசாயனப் பொருள்கள் இருப்பதால் இன்று உணவே விஷம் என்று தான் சொல்வேன்.

கோகிலன்,
அம்பாறை.
கேள்வி: அள்ள அள்ளக் குறையாதது எது பித்தரே?
பதில்: அறிவு.

தினேஷ்,
செட்டித்தெரு.
கேள்வி: மகா கொடிய பாவிகளுக்கு அழிவு வராதா?
பதில்: அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்.

அற்புதன்,
கொட்டாஞ்சேனை.
கேள்வி: எளிதில் கிடைக்காதது எது?
பதில்: நிம்மதி.

பெனடிற்,
மானிப்பாய்.
கேள்வி: சிறந்த அரசியல்வாதியாக வருவதற்கு அறிவு அவசியமா, புத்தி அவசியமா?
பதில்: இன்று அராஜகம் தான் அவசியமாக இருப்பது போல் தெரிகிறது!

நாதன்,
வவுனியா.
கேள்வி: எனது ராசி பலன் ஒரு பத்திரிகையில் ஒரு விதமாகவும் இன்னொரு பத்திரிகையில் வேறுவிதமாகவும் இருக்கிறது. இதில் எதனை நம்பலாம் பித்தரே?
பதில்: நம்பினார் கெடுவதில்லை என்பதை நம்பிக் கொண்டு இராதீர்.



செந்தில்,
கிளிநொச்சி.
கேள்வி: பழைய மனக்கசப்புகளை மறக்க முயன்றாலும் என்னால் முடியவில்லையே.
பதில்: அவசரமாக ஒரு மனோதத்துவ நிபுணரைச் சென்று பாருங்கள். அவரால் உங்களுடைய சிக்கலை அவிழ்க்க முடியும்.

பாரதி,
ஹட்டன்.
கேள்வி: இலங்கை அரசியலில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு பற்றி?
பதில்: அது அவசரமாகவும் அவசியமாகவும் அணுக வேண்டிய பிரச்சினை. அவர்கள் இன்று அரசியலில் அநாதைகள் போல் இருக்கின்றனர்!

பரந்தாமன்,
நீர்கொழும்பு.
கேள்வி: அறுபது கோடி ரூபாவுக்கு மேல் செலவிட்டு நடத்தப்பட்ட ஐபா விருது வழங்கல் விழா படுதோல்வியில் முடிந்ததாமே?
பதில்: அது தென்னிந்தியர்களின் சாத்வீகப் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி. எதிர்காலப் போராட்டங்களுக்கான ஒரு முன்னுரை.

மாதவன்,
நெல்லியடி.
கேள்வி: ஆனானப்பட்ட அமெரிக்காவுக்கு பின்லேடனைப் பிடிக்க முடியாமல் இருப்பதேன்?
பதில்: பிடிக்க முடியும்; பிடித்தால் மத்திய கிழக்கு நாடுகள் மீது அதற்கு ஆதிக்கம் செலுத்த முடியாதே.

## சொற்சிலம்பம் போட்டி இல. 423

சொற்சிலம்பம் 423 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் தினம் 2010 ஆம் ஆண்டு ஜூலை 04 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூலை 10 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 419 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்கிலம்பம் போட்டி இல.421

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 த | 2 ரா | த | ர | 3 ம் | ■ | 4 ப | 5 கு |
| 6 வ | கு | ■ | 7 த | ■ | ப | ரி | தி |
| று | ■ | 8 து | ம் | 9 பி | ■ | 10 த | ரை |
| ■ | 11 எ | ரு | ■ | 12 சி | 13 தை | வி | ■ |
| 14 க | ள் | ■ | 15 கு | ன் | ய | ■ | 16 கு |
| ல் | ■ | 17 சா | து | ■ | ல் | ■ | ட் |
| 18 ஞா | க் | கா | ■ | 19 க | ■ | 20 கா | டு |
| ரி | ■ | 21 த | ரு | வி | ■ | ர் | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல. 421 பரிசு பெறுவோர்

1. எம்.பி. முகைடீன், 351, 'பிறிதேளஸ்', பெரியநீலாவணை.
2. என். துஷ்யந்தினி, வம்மியடி வீதி, நற்பிட்டிமுனை - 02, கல்முனை.
3. சீ.எம்.ஏ. துலீஸ், 26, பாடசாலை ஒழுங்கை, ஹேனமுல்ல, சலிக்கமுல்ல.

## சொற்சிலம்பம் போட்டி இல. 421

### பாராட்டுப் பெறுவோர்

01. சி. குமுதினி, மட்டக்களப்பு.
02. ஞான. செந்தமிழ் செல்வன், யாழ்ப்பாணம்.
03. வி. செல்வநாயகம், புத்தூர்.
04. எஸ். முரளிதரன், கொழும்பு - 15.
05. எம்.எம். மலர்விழி ஜேசுதாசன், கொழும்பு - 13.
06. வே. கார்த்திகேசு, வாழைச்சேனை.
07. எஸ்.வி. நாராயணன், கொழும்பு - 07.
08. யோ.யோ. யோகராசா, சங்கானை.
09. நெல்சன் ஜெயத்துரை, பண்டாரவளை.
10. திருமதி. சந்திரா ரவீந்திரன், ஹட்டன்.
11. சந்திராணி தங்கத்துரை, கல்முனை.
12. திருமதி. இளநிதி சதானந்தன், மட்டக்களப்பு.
13. திருமதி. சரஸ்வதி பாலகிருஷ்ணன், வெள்ளவத்தை.
14. ஜெ. சிவகுமார், கொழும்பு - 03.
15. எஸ்.என். மணி, நுவரெலியா.

## சொற்சிலம்பம் போட்டி இல.423

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | ■ | 2 வி | கு | 3 தி | ■ | 4 ஆ | று |
| 5 மா | 6 நா | டு | ■ | 7 யா | 8 க | ம் | ■ |
| 9 தா | ய் | ■ | 10 ப | க | ல் | ■ | 11 க |
| ன | ■ | 12 கோ | ல | ம் | ■ | 13 கா | டு |
| ம் | ■ | 14 ப | கை | ■ | 15 த | கு | தி |
| ■ | 16 நா | ம் | ■ | 17 ப | ■ | 18 கை | தி |
| 19 தே | ர் | ■ | 20 ம | ண் | டு | ■ | ■ |
| ன் | ■ | 21 கு | ரு | தி | ■ | 22 வ | ழி |

## சொற்சிலம்பம் போட்டி இல. 423

### இடமிருந்து வலம்

2. பகுபதத்தின் இறுதி உறுப்பு.
4. நதி
5. பேரவை
6. தேசம்
7. வேள்வி
9. மாதா
10. சூரியன் உதித்ததில் இருந்து மறையும் வரையான நேரம்
12. மாவு அல்லது பொடியால் பெண்கள் போடும் அலங்கார வடிவம்
13. வனம்
14. உறவுக்கு எதிர்
15. ஏற்ற/ போதுமான அளவு
16. தன்மைப் பன்மைச் சொல்
18. சிறையில் இருப்பவன்
19. உற்சவ மூர்த்தியை இழுத்துச் செல்லும் கோயில் வாகனம்
20. எளிதில்புரிந்து கொள்ளாதவன்
21. இரத்தம்
22. பாதை

### மேலிருந்து கீழ்

1. சண்டைக்கு எதிர்
2. பிடித்திருப்பதை நழுவச்செய்தல்
3. அர்ப்பணம்
4. இல்லை என்பதற்கு எதிர்
6. வீட்டைக் காக்கும் பிராணி
7. வேள்வி
8. கற்றுக்கொள்/ ஒரு பருப்பொருள்
10. நீள, சதுர வடிவங்களில் அறுக்கப்பட்ட மரத்துண்டு
11. விரைவு வண்டி
12. சினம்
13. எங்கும் காணப்படும் கருநிறப் பறவை
16. வாழை முதலியவற்றின் இழை
17. இறைவன் மீதான பற்று
19. பூக்களிலிருந்து தேனீக்கள் சேர்ப்பது
20. பாலுண்ணி/ மணமகனுக்குப் பெண் வீட்டார் அளிக்கும் விருந்து

# தலைமயிர் உதிர்வுக்கு பல காரணங்கள் உள்ளன



**கேள்வி:** எனது குழந்தைகளுக்கு சீன உணவுகள் என்றால் அலாதிப்பிரியம். சீன உணவு முறைகளில் சோயா சம்பந்தப்பட்ட சோஸ் (SAUCE) சோயா புரதம் என்பவையும், அஜினிமோட்டோ (AJINIMOTO) போன்ற வாசனைத் திரவியமும் அதிகமாக உபயோகப்படுத் தப்படுகின்றன. இவை எமது உடல் நலத்திற்கு தீங்கு விளைவிப்பதாக நான் சமீபத்தில் கேள்விப்பட்டேன். நான் இப்படி கேள்விப்பட்டது உண்மையா? சீன உணவுகள் எமக்கு ஏற்றதல்லவா? இவற்றை அதிகம் சேர்த்துக் கொள்வதால் உடல் நலத்திற்கு தீங்கு ஏற்படுமா? உங்கள் அபிப்பிராயம் வேண்டுகின்றேன்,

**பதில்:** பல நூற்றாண்டுகளாக சீன உணவுகளில் சோயா பல விதங்களில் சேர்க்கப்பட்டு வருகிறது. சோயா அவரையிலிருந்து தயாரிக்கப்படும் சோயா சோஸ் சீன உணவுத் தயாரிப்பில் பாரம்பரியமாக சேர்க்கப்படுகிறது. சோயா சோஸில் அதிகளவில் உப்புச்சத்து இருப்பதால் உப்புக்குப் பதில் சீன உணவுத் தயாரிப்பில் சோயா சோஸ் சேர்க்கப்படு கிறது. இது தவிர சோயாவில் ANTIOXIDANT எனப்படும் உடலுக்கு நன்மை தரும் பொருளும், நியாஸின் (NIACIN) விட்டமின் சத்தும் இருக்கின்றன. இவை பெண்களுக்கு ஏற்படும் மார்பகப் புற்றுநோய், மற்றும் இதய சம்பந்த நோய்களை தடுக்கும் சக்தி கொண்டவை. பெரியவர்கள் மற்றும் சிறியவர்களின் உணவில்



சோயா சேர்ப்பது நன்மையைத் தரும். ஆனால் சோயா சோஸில் உள்ள அதிகளவு உப்புத் தன்மையைக் கருத்திற்கொண்டு அதாவது, சோடியம் சத்து அபாயகரமானதாக கருதப்படும் நோயாளர்கள் அதிகளவில் சோயா சோஸை தவிர்ப்பது நல்லது. மற்றும் சோயா சோஸ் , தரமான தயாரிப்பானதா என்பதைக் கவனித்துக் கொள்வதும் அவசியம். ஆனால், அஜினிமோட்டோ விடயம் கொஞ்சம் வித்தியாசமானது. அஜினிமோட்டோ என்பது MONO SODIUM GLUTAMATE (MSG) என்ற இரசாயன வாசனைப்பொருள். அநேகமான சீன உணவுத் தயாரிப்பின் போது இது உபயோகப்படுத்தப் படுகிறது. உணவில் சேர்க்கும் போது தயாரிக்கப்படும் எந்த உணவினதும் அதே FLAVOUR எனப்படும் நறுமணத்தையும் குணத்தையும் அதிகரிக்கும் தன்மை கொண்டது.

அதாவது, கோழிக்கறி தயாரிப்பில் சேர்த்தால் கோழிக்கறி வாசம் அதிகமாக இருக்கும். அதேவேளையில் இறால் கறி தயாரிப்பில் சேர்த்தால் இறால் மணம் மேலும் தூக்கி நிற்கும். ஆனால், நீண்ட நாள் இதனை உபயோகிப்பதால் பல கேடுகள் ஏற்படும் என்று இப்போது அறிய வந்துள்ளது. நரம்பு சம்பந்தப்பட்ட PARKINSON நோய் மறதி நோயான ALZHEIMER வியாதி மற்றும் ஒருவித நடுக்கம் தரும் HUNTINGTON வியாதி மேலும் MULTIPLE SCLEROSIS போன்ற வியாதிகளுக்கு அஜினிமோட்டோ காரணமாக இருக்கலாம் என்பது சந்தேகிக்கப்படுகிறது. இது தவிர ஒற்றைத்தலைவலி எனப்படும் MIGRAINE, சுவாச சம்பந்தமான ASTHMA, மார்பக சம்பந்த நோய்களை ஏற்படுத்துவதிலும், இந்த நோயுள்ளவர்களுக்கு அவற்றை உக்கிரப்படுத்துவதிலும் MSG பங்கு வகிப்பதும் அறியப்பட்டுள்ளது. IRRITABLE BOWEL SYNDROME எனப்படும் வயிற்றுளைவு, அஜீரணம் சம்பந்தப்பட்ட வியாதிகளை இது ஏற்படுத்துவதாகவும் நம்பப்படுகிறது. எனவே, அஜினிமோட்டோ உபயோகத்தைத் தவிர்ப்பது நல்லது.

**கேள்வி:** வயது 30. ஆண். எனக்கு அதிகமாக தலைமயிர் உதிர்ந்து வழுக்கை ஏற்படுகிறது. இதற்கு எனது மருத்துவர் FINASTRIDE என்கின்ற ஹோர்மோன் மருந்து தந்தார். அதை உபயோகித்து வந்ததில் தலைமயிர் வளர்ந்தாலும் எனக்கு ஆண்மைக் குறைவு ஏற்பட்டுள்ளது. இதனால் இம்மருந்தை நிறுத்திவிட்டேன். என்றாலும் எனது ஆண்மைக்குறைவு குணமாகவில்லை. எனக்கு எனது ஆண்மை திரும்ப பரிகாரம் கூறவும்.

**பதில்:** தலைமயிர் உதிர்தல் என்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இவற்றில் ஆண்களுக்கு தலைமயிர் உதிர்வதற்கு அவர்களின் ANDROGEN ஹார்மோன் - அதிகமாக சுரப்பது ஒரு காரணமாக கருதப்படுகிறது. இந்த ANDROGEN ஹோர்மோன் தான் ஆண்களுக்குரிய ஹோர்மோன். எனவே, சில மருத்துவர்கள் இந்த ஹோர்மோனின் சுரப்பை சமப்படுத்த பெண் ஹோர்மோனின் அளவை அதிகரிக்க மருந்துகள் கொடுப்பதுண்டு.

பொதுவாகவே - ஆண் பெண் இருபாலருக்கும் உடலில் ஆண் பெண் ஹோர்மோன்கள் இரண்டுமே உள்ளன. ஆண்களுக்கு ஆண் ஹோர்மோன்கள் பெண் ஹோர்மோன்களைவிட கொஞ்சம் அதிகமாகவும், பெண்களுக்கு ஆண் ஹோர்மோன்-பெண் ஹார்மோன்களை விட குறைவாகவும் பொதுவாகவே அமைந்திருக்கும். ஏதோ ஒரு காரணத்தால் இந்த சமநிலை தவறும்போது ஆண்களுக்கு தலைமயிர் உதிர்தலும், பெண்களுக்கு மீசை வளர்தலும் ஏற்படுவதுண்டு.

எனவே, நீங்கள் உபயோகித்த FINASTERIDE என்ற மருந்து உங்கள் ஹோர்மோன் உற்பத்தியை குறைக்கவைத்து, ஏற்கனவே உங்கள் உடலிலுள்ள பெண் ஹோர்மோன் தாக்கத்தை அதிகரிக்க உதவுகிறது. இதனால் தலைமயிர் உதிர்தல் குறைவதால் உங்களுக்கு அதிகம் தலைமயிர் வளர்வதான பிரமை உருவாகிறது. இந்த மருந்து புரஸ்டேட் வளர்ச்சியை கட்டுப்படுத்தத்தான் உபயோகிக்கப்படுகிறது. ஆனால், குறைந்த அளவில் தலைமயிர் உதிர்தலை கட்டுப்படுத்தும். இதனை உபயோகிக்கும் போது - காதல் உணர்வுகள் கட்டுப்படுத்தப்படுத்து கின்றன என்பது உண்மைதான். இதனை LOSS OF LIBIDO என்று கூறுவார்கள். ஆனால், இது ஆண்மைக்குறைவு என்று கருதமுடியாது. ஆணமைக்குறைவு என்று கூறும்போது உடல் உறவு கொள்ளமுடியாத நிலமையைத்தான் மருத்துவத்தில் கருதுகின்றார்கள். காதல் உணர்வு குறைவதும், ஆண்மைக்குறை இரண்டும் வெவ்வேறு விடயங்கள். எனவே, உங்கள் பிரச்சினைக்கு வேறு காரணங்கள் இருக்கலாம். ஒரு மனோவியல் மற்றும் PSYCHO SEXNAL மருத்துவ நிபுணரின் ஆலோசனையைப் பெறவும்.

**கேள்வி:** வயது 19. ஆண். எனது ஒரு விதையைச் சுற்றி SPONGE போன்ற மிருதுவான திசு பகுதி உள்ளதாகத் தெரிகிறது. எனக்கு மலச்சிக்கல் ஏற்படும்போது இந்த திசு இல்லாமல் போகிறது. ஆனால் அதேவேளையில் அடிவயிற்றில் வலி ஏற்படும். வலி குறைந்ததும் விதையைச் சுற்றி இந்த திசு திரும்பவும் ஏற்படுகிறது.

**பதில்:** நீங்கள் தந்த விவரங்களை வைத்து இலகுவாக ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. பொதுவாக விதைப்பையில் ஏற்படும் வீக்கம், கட்டி என்பவை HERNIA எனப்படும் குடல் இறக்கத்தால் ஏற்படுகின்றன. இது தவிர விதையைச் சுற்றி நீர்கோர்த்தலால் ஏற்படும் HYDRO COELE கோளாறு, விதைக்குழாய்க ளில் ஏற்படும். EPIDYDIMAL CYST என்பவையும் இந்த பிரச்சினைக்கு காரணமாக இருக்கலாம். ஆனால், நீங்கள் மலச்சிக்கலால் பாதிக்கப்படும் நேரத்தில் - அதாவது, மலம் கழிக்க - STRAINING எனப்படும் முக்கும் போது இந்த திசு ஏற்படுவது, மலம் கழித்தபின் மறைவது என்பன அநேகமாக ஹேர்னியா எனப்படும் குடலிறக்கம் கோளாறைத்தான் சுட்டிக்காட்டுகிறது. எனவே, ஒரு சத்திரசிகிச்சை அல்லது UROLOGIST என்கின்ற விசேட வைத்திய நிபுணரின் ஆலோசனை பெறுவது உசிதம்.

**கேள்வி:** வயது 27. ஆண். தினமும் இரண்டு மணி நேரமாவது மடிக்கணினியை எனது மடியில் (LAPTOP) வைத்து உபயோகிப்பேன். எனது மடிக்கணினி நிறையவே வெப்பத்தை வெளிவிடுகிறது. இப்படி மடியில் வைத்து மடிக்கணனி உபயோ கிப்பது எனது பாலியல் வாழ்க்கையில் பிரச்சினையை ஏற்படுத்துமா? கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக சுய இன்பம் அனுபவித்து வருகின்றேன் ஆனால், கடந்த சில நாட்களாக எனது பால் உணர்வு குறைந்து வருவதாக உணர்கின்றேன். உங்கள் ஆலோசனை வேண்டுகின்றேன்.

**பதில்:** மடிக்கணினியை மடியில் வைத்து உபயோகிப்பதால் பால் உணர்வு குறையும் என்பது பற்றிய கருத்துகள் இதுவரை எங்கும், எவரும் வெளியிட வில்லை. ஆனால், இது பற்றிய வாதப் பிரதிவாதங்கள் மருத்துவ உலகிலும் இணையத்திலும் அடிக்கடி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த கலந்துரை யாடல்களில் வெளிவந்த கருத்துகளை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

விந்து உற்பத்தியாகும் விதைகள் - ஆரம்பத்தில் வயிற்றறையிலிருந்து விதைப்பைக்கு இறங்கி வருகின்றன. இதற்கு முக்கிய காரணம் வயிற்றறை யின் வெப்பநிலை - விதைப்பை சாதாரண சூழல் வெப்பநிலையில் இருந்து தான் விந்து உற்பத்திக்கு உதவுகிறது. இந்தக்காரணத்தை சுட்டிக்காட்டி, மடிக்கணினியின் வெப்பநிலையால் - மடியில் வைத்து பணி புரியும்போது - விந்து உற்பத்திக்கு பாதகமானதாக அமையும். என்றொரு கருத்து உண்டு. ஆனால் - ஆண்மைக்குறைவுக்கும் மடிக்கணினி உபயோகத்திற்கும் எதுவித தொடர்பும் இதுவரை காணப்படவில்லை மேலும் நீண்ட நேரம் மடிக்கணினியிலோ சாதாரண கணனியிலோ பணிபுரிகின்ற வர்களுக்கு பால் சம்பந்தப்பட்ட விடய ங் களில் பொதுவாகவே ஈடுபாடு இருப்பதில்லை என்றும் சில இணைய கருத்துப்பரிமாறல்களில் பேசப்படுகின் றன. எனவே என்னைப் பொறுத்தவரை யில் உங்கள் ஆண்மைக் குறைவுக்கு மடிக்கணினி காரணமில்லை என்பதே என் கருத்து.

எனவே, உங்கள் பிரச்சினைக்கு ஒரு UROLOGIST அல்லது மனோவியல் நிபுணரின் ஆலோசனை பெறவும். ✱

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு - 14.

# ராசி பலன்

## 21 - 06 - 2010 முதல் 27 - 06 - 2010




**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

நேர்மையான குணம் கொண்ட மேஷ ராசி அன்பர்களே!

இந்த வாரம் எடுத்த பல செயல்களில் வெற்றிகரமான பலன்களைப் பெறுவீர்கள். சில காரியங்களில் தக்கவர்களின் துணையோடு செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். பணவரவுகள் திட்டமிட்டபடி வந்து சேர்ந்தாலும், அவசியமான செலவுகள் ஏற்பட்டு தொல்லை தரலாம். புதிய நபர் ஒருவரால் முக்கிய திருப்பம் ஏற்படலாம். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகளால் செல்வாக்கு அதிகமாகும். அலுவலகத்தில் எதிர்பார்க்கும் பணவரவுகளும், இதர காரியங்களும் வெற்றியைத் தரும்.

குடும்பத்தில், குடும்பத்தலைவர், அதிக வருமானம் பெறுவதால் பொருளாதார நிலை உயரும். மகன் அல்லது மகளின் மங்கல வாழ்வுக்கு முயற்சிகள் மேற்கொள்வீர்கள்.

கலைஞர்களில் சிலர், புதிய ஒப்பந்தம் கிடைத்தாலும், சிறு மனக்கசப்புகளால் பணிபுரிய முடியாமல் போகலாம்.

அதிர்ஷ்ட எண்கள் : 5,6,9 அதிர்ஷ்ட நிறம் : நீலம் , அதிர்ஷ்ட கிழமை : புதன்




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீடம் 1,2**

எந்த வேலையையும் சிறப்பாக செய்யும் ரிஷப ராசி அன்பர்களே!

பணவரவுகள் இருந்தாலும், எதிர்பாராத செலவுகள் அதிகம் ஏற்படலாம். வார்த்தைகளில் நிதானமும், நண்பர்களிடம் சுமூகமாக நடந்து கொள்வதும் அவசியம். உத்தியோகத்தில் உள்ளவர்கள், சக பணியாளர்களின் சொந்த விவகாரங்களில் தலையிட்டு மனவேறுபாடுகளுக்கு ஆளாகலாம். பணப்பொறுப்பில் உள்ளவர்களை அடிக்கடி கண்காணிக்காவிட்டால் பிரச்சினைகள் நேரக்கூடும். குடும்பத்தில் சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டு அவை திறமையாக சமாளிக்கப்படும். பெண்கள் தாய்வழி உறவுகள் இல்லத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கு பெறும்போது வீண் பேச்சினால் மனக்கசப்பு உண் டாகும். கலைஞர்கள் பழைய வாய்ப்புகளிலேயே போதுமான வருமானம் அடையக்கூடும்.

[illegible] எண்கள் : 3,5,9 அதிர்ஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை : செவ்வாய்




**மிருக சீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2,3 ஆம் பாதங்கள்**

சிறந்த சிந்தனை வளம் பெற்ற மிதுன ராசி அன்பர்களே!

கடினமாக உழைத்தாலும் சில காரியங்களில் மட்டுமே எதிர்பார்க்கும் வெற்றிகளை அடைவீர்கள். மற்றவைகளிலும் திருப்தியான பலன்களைப் பெற அதிக முயற்சி தேவைப்படும். பணவரவுகள் கைகளுக்கு வந்து சேர, சிலநாட்களாகும்.

உத்தியோகத்தில் கடினமான பொறுப்புகள் வந்து சேரலாம். சிலருக்கு எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம். செய்யும் பணிகளில் சிறு சிறு தடைகள் ஏற்படலாம். குடும்பத்தில் வீண் பேச்சுகளால் அமைதி குறையக்கூடும். நண்பர்களின் உதவியால் நிலைமையைச் சமாளிப்பீர்கள். பெண்களுக்கு ஆரோக்கியக்குறை ஏற்பட்டு பின்னர் சரியாகும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைத்தாலும், எதிர்பார்க்கும் வருமானம் இல்லாமல் போகக்கூடும்.

அதிர்ஷ்ட எண்கள் : 3,6,9 அதிர்ஷ்ட நிறம் : வெளிர்மஞ்சள் அதிர்ஷ்டக் கிழமை : வியாழன்



**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

கடினமான உழைப்பை வெளிப்படுத்தும் கடக ராசி அன்பர்களே!

பல விஷயங்களில் நீங்கள் மனதை செலுத்தினாலும் சில காரியங்களில் மட்டுமே திருப்தியைக் காண இயலும். எதிர்பார்த்த பணம் கைகளுக்கு வந்து சேர அலைச்சல்களை மேற்கொள்ள வேண்டி இருக்கலாம். செலவுகளைக் கட்டுப்படுத்த திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் உள்ள சிலருக்கு அலுவலகத்தில் அதிகப் பொறுப்புள்ள பணிக்கு மாற்றம் ஏற்படலாம். சிலருக்கு சம்பள உயர்வும், வேறு சிலருக்கு இடமாற்றமும் கிடைக்க நேரலாம். குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை காணப்பட்டாலும், சிறு சிறு பிரச்சினைகளும் உடன் இருக்கக்கூடும். வேலைக்குப் போகும் பெண்களுக்கு அலுவலகம் மூலம் பணவரவுகள் உண்டாகும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளில் உற்சாகத்தோடு பணியாற்றுவார்கள்.

அதிர்ஷ்ட எண்கள் : 5,6,8 அதிர்ஷ்ட நிறம் : வெளிர்நீலம் அதிர்ஷ்டக் கிழமை : சனி




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

உற்சாகத்துடன் செயலாற்றும் சிம்ம ராசி அன்பர்களே!

உங்களது சொந்த முயற்சியால் எதிர்பார்க்கும் வெற்றிகளைப் பெறுவீர்கள். தக்க நபர்களின் உதவியோடு தளர்வடைந்த காரியங்களை சரியாக செய்து முடிக்கப் பாடுபடுவீர்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயரதிகாரிகளின் ஆதரவுடன் சில சலுகைகளை பெறக்கூடும். தேவையில்லாத வீண் பேச்சுக்களால் சக ஊழியர்களிடம் மன வேறுபாடுகள் ஏற்படும். குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகள் ஏற்பட்டாலும், குடும்பத் தலைவர் சாமர்த்தியமாக செயல்படுவதால் அவை சமாளிக்கப்படும். மகன் அல்லது மகளின் புதிய வேலையினால் பொருளாதார நிலை உயரும். கலைஞர்கள் தீவிர முயற்சியின்பேரில் புதிய ஒப்பந்தங்களைப் பெறுவார்கள்.

அதிர்ஷ்ட எண்கள் : 2,8,9 அதிர்ஷ்ட நிறம் : வெளிர்நீலம் அதிர்ஷ்டக் கிழமை : சனி




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

கவலைகள் இல்லாத மனம் கொண்ட கன்னி ராசி அன்பர்களே!

நினைத்த காரியங்களை வெற்றிகரமாக முடிப்பதால் சிறப்பான பலன்களைப் பெறுவீர்கள். பணவரவுகள் இருந்தாலும், செலவுகளும் அதிகம் ஏற்படும். உறவினரின் அவசர செலவுக்குப் பண உதவி செய்யும் சந்தர்ப்பம் உண்டாகும்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் பதவி உயர்வு பெறக்கூடும். சிலருக்கு சம்பள உயர்வு, இடமாற்றம் ஆகியவை ஏற்படலாம்.

குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை இருந்தாலும், சிறு சிறு பிரச்சினைகள் இல்லாமல் இருக்காது. பெண்கள் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்வடைவீர்கள்.

அதிர்ஷ்ட எண்கள் : 3,6,9 அதிர்ஷ்ட நிறம் : வெளிர்மஞ்சள் அதிர்ஷ்டக் கிழமை : வியாழன்




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

உறுதியான மனம் படைத்த துலாம் ராசி அன்பர்களே!

நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் உங்களை சாதகமான சூழ்நிலைக்கு அழைத்துச் செல்லும். முக்கியமானவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருந்து, உங்கள் செயல்களுக்கு வெற்றியைத் தேடித் தருவார்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு, அலுவலகம் மூலம் வரக்கூடிய தனவரவுகள் கிடைக்கக்கூடும். உயரதிகாரிகள் உங்கள் செயல்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

குடும்பத்தில் மகிழ்வான சூழ்நிலை காணப்படும். மங்கல நிகழ்வுகளில் பங்கு கொள்ளும் பெண்களுக்கு புதிய துணிகள் மற்றும் மங்கலப் பொருள்கள் கிடைக்கும். மகன் அல்லது மகளுக்கு நல்ல வரன் அமையலாம். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்கள் பெற்று, மகிழ்வுடன் அவைகளில் செயலாற்றுவார்கள். புகழும் பெருகும்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,3,5 அதிர்ஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை : செவ்வாய்




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**


கம்பீரமான நடைக்கு சொந்தக்காரரான விருச்சிக ராசி அன்பர்களே!

எவ்வளவு முயற்சி செய்தாலும், சிலவற்றில் மட்டுமே வெற்றி கிடைக்கக்கூடும். பணவரவு தாமதமாகலாம்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உயரதிகாரிகளின் கெடுபடியான போக்கு மனக்கசப்பை உண்டாக்கலாம். வீண் பேச்சுகளைக் குறைத்து சக ஊழியர்களிடம் சுமூகமாக நடந்து கொள்வது நல்லது.

குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு அவைகள் சாமர்த்தியமாக சமாளிக்கப்படும். மனைவி வழி உறவுகள் மூலம் அவசியமான உதவிகள் கிடைக்கலாம். கலைஞர்கள், சகக்கலைஞர்கள் மூலம் புதிய ஒப்பந்தங்கள் பெறக்கூடும்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,3,6 அதிர்ஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை : வெள்ளி




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்து முடிவெடுக்கும் தனுசு ராசி அன்பர்களே!

உங்களுக்கு இந்த வாரம் சாதகமான சூழ்நிலை தென்படுகிறது. முன்னேற்றம் அடையும் வகையில் உங்கள் முயற்சிகள் அமைந்திருக்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு செல்வாக்கும், சொல்வாக்கும் அதிகரிக்கும். பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிடைக்கக்கூடும்.

குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்படலாம். பெண்களில் சிலருக்கு அலுவலகம் மூலம் பணவரவுகள் கிடைக்கக்கூடும்.

வருமானம் தடையில்லாமல் வந்து சேரும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.

அதிர்ஷ்ட எண்கள் : 5,6,9 அதிர்ஷ்ட நிறம் : இளம் பச்சை அதிர்ஷ்டக் கிழமை : வெள்ளி




**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

கருத்துச் செறிவுடன் எழுதும் மகர ராசி அன்பர்களே!


பல விஷயங்களைத் திட்டமிட்டாலும் சிலவற்றில் மட்டுமே வெற்றிகரமான பலன்களைப் பெறக்கூடும். சில செயல்களில் ஏற்படும் தொய்வுகளைச் சரிப்படுத்த தகுந்த நபர்களை நாடுவீர்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிக வேலைகளால் அவதிப்பட நேரலாம். வேலைகளில் ஏற்படும் சிறு குறைகளையும் உயர் அதிகாரிகள் பெரியதாக எடுத்துக்கொள்ள நேரிடும்.

குடும்பத்தில் பழைய கடன் தொல்லைகளால் மனச்சஞ்சலம் ஏற்படும்.

கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்க சகக்கலைஞர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்கள்.

அதிர்ஷ்ட எண்கள் : 2,5,6 அதிர்ஷ்ட நிறம் : வெண்மை அதிர்ஷ்டக் கிழமை : திங்கள்




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

செயல்களில் உற்சாகத்துடன் ஈடுபடும் கும்ப ராசி அன்பர்களே!

உங்களது உற்சாகமான முயற்சியால் செயல்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். சில செயல்கள் தாமதமாக நடந்தாலும், நன்றாகவே முடிவுறும். நீண்டகாலம் வராமல் இருந்த உறவினர்களின் வருகை மகிழ்வளிப்பதாக இருக்கும். முக்கிய தகவல் ஒன்று வெளிர் பயணத்தை ஏற்படுத்துவதாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களில் சிலருக்கு பதவி உயர்வும், சம்பள உயர்வும் ஏற்படலாம். எதிர்பார்க்கும் பண வரவுகள் கிடைத்து, பாதியில் விட்டிருந்த பணிகளைத் தொடருவீர்கள். குடும்பத்தில் கணவன், மனைவி ஒற்றுமை மேலோங்கும். செலவுகளைச் சமாளிக்கத் திட்டமிடுவீர்கள். பெண்கள் தெய்வீக காரியங்களில் ஈடுபடுவார்கள். மனம் இனிக்கும் செய்தி ஒன்று மங்கையரைத் தேடி வரும்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,5,6 அதிர்ஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை : ஞாயிறு




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

கலைகளில் அதிக நாட்டம் கொண்ட மீன ராசி அன்பர்களே!

நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் தடைகள் தோன்றினாலும் கவனத்துடன் முயற்சி செய்வது அவசியம். சில காரியங்களில் மட்டுமே எதிர்பார்த்த வெற்றியை அடையக்கூடும். பணவரவுகள் சிறிது அலைச்சலுக்குப் பின்னரே வந்து சேரும். கடிதம் ஒன்று வெளிர் பயணத்தை ஏற்படுத்தலாம். உத்தியோகத்தில் அதிகப் பொறுப்புகள் இருக்கும்.

குடும்பத்தில் தொல்லைகள் இருந்தாலும், சமாளிக்கும்படியாக இருக்கும். பெண்களில் சிலருக்கு ஆரோக்கியக்குறை ஏற்பட்டு சிறு மருத்துவ உதவி தேவைப்படலாம். கலைஞர்களுக்கு பொருள் வரவு கூடும்.

அதிர்ஷ்ட எண்கள் : 5,8,9 அதிர்ஷ்ட நிறம் : இளம்பச்சை அதிர்ஷ்டக் கிழமை : புதன்



19 ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் ஆரம்ப நிகழ்வின் போது

# விழுந்தது முதல் உதை!



ஷபலாலா



பலம் வாய்ந்த மெக்ஸிக்கோ அணிக்கு எதிராக சிறப்பாக ஆடி, 19 ஆவது உலகக் கிண்ணத் தொடரின் முதல் கோலை அடித்தது தென்னாபிரிக்க அணி. எனினும் ஆட்டத்தின் இறுதிக் கட்டத்தில் பதில் கோல் அடித்து சமநிலையில் முடித்தது மெக்ஸிக்கோ.

தென்னாபிரிக்கத் தலைநகர் ஜோகன்னஸ்பார்க்கில் கடந்த 10 ஆம் திகதி ஆரபமான உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் முதலாவது ஆட்டத்தின் 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ள தென்னாபிரிக்க அணியும், மெக்ஸிக்கோ அணியும் பலப்பரீட்சை நடத்தின.

ஆட்டத்தின் தொடக்கம் முதலே மெக்ஸிக்கோ அணி சிறப்பாக விளையாடியது. ஆனால், அதற்குக் கிடைத்த இரண்டு சுலபமான வாய்ப்புக்களைக் கோலாக்கத் தவறியது. பின்னர், ஆட்டத்தின் இரண்டாவது பாதியின் தொடக்கத்திலிருந்தே தென்னாபிரிக்க அணியின் தாக்குதல் ஆட்டம் சிறப்பாக இருந்தது. 10 ஆவது நிமிடத்தில் தென்னாபிரிக்க வீரர் ஷபலாலா, பலமான உதை மூலம் கோல் ஒன்றைப் போட்டார். பின்னர் மெக்ஸிக்கோ அணி கடுமையாகப் போராடியது. ஆட்டம் முடிய 11 நிமிடங்கள் இருந்த நிலையில், மெக்ஸிக்கோவின் ரபேல் மார்க்கஸ் பதில் கோல் அடித்து சமநிலைப் படுத்தினார்.

இந்தப் போட்டி சமநிலையில் முடிவுற்றமையால் இரு அணிகளும் தலா ஒரு புள்ளியைப் பெற்றன.


பாட்லீட் பினான்ஸ் என்பது முதியோருக்கு தக்க மதிப்பளிக்கும் பாரம்பரியத்தோடு இணைந்து வளர்க்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். அது நிதி தொடர்பான ஒளிமயமான எதிர்காலத்தை உறுதி செய்கிறது. நாங்கள் முதியவர்களுக்கும் பலமூட்டும் தூண்களாகச் செயல்படுகிறோம். இலங்கையர்களை நிதி மூலமாக வலுவூட்டும் பொறுப்பினைக் கொண்டுள்ளோம்.

முதியோர்களுக்கு மதிப்பளிக்கும் ஒரு பாரம்பரியம்.

12% [வ.வ.வீ 12.68%]
ஒவ்வொரு மாதமும் வருடாந்த வட்டி

| காலம் | மாதாந்தம் | வ.வ.வீ | முதிர்ச்சி | வ.வ.வீ |
|---|---|---|---|---|
| 1மாதம் | - | - | 9.50% | 9.92% |
| 3மாதங்கள் | - | - | 11.00% | 11.46% |
| 6மாதங்கள் | - | - | 11.50% | 11.83% |
| 1வருடம் | 11.50% | 12.13% | 12.50% | 12.50% |
| 2வருடங்கள் | 12.00% | 12.68% | 13.50% | 12.69% |
| 3வருடங்கள் | 12.00% | 12.68% | 14.50% | 12.79% |

வட்டி வீதம் உங்கள் முதலீட்டுத் தொகையின் அடிப்படையில் அதிகரிக்கும்.

வட்டி வீதம் அறிவிக்கப்படாமல் மாறுதலுக்குட்படலாம்.

வ.வ.வீ - வருடாந்த வருமான வீதம்

கொழும்பு: தினேஷ் 0772 069 796 டிரோன் 0772 702 366 மயூரன் 0773 522 916 உலகநாதன் 0773 464399

களுத்துறை: 0777 427 281 மாத்தறை: 0773 043 873 எம்பிலிப்பிட்டிய: 0777 688 720
நீர்கொழும்பு: 0772 620 662 பண்டாரவளை: 0773 043 874 பொலன்னறுவ: 0772 929 576
வவுனியா: 0773 342 113 யாழ்ப்பாணம்: 0776 751 839

BARTLEETGROUP

நிதி நிறுவனங்கள் 1988ன் சட்ட இல. 78ன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபையால் பதிவு செய்யப்பட்டது.

BARTLEETFINANCE LTD BBB-
2வது மாடி, பாட்லீட் ஹவுஸ், 65, பிறேபுறூக் பிளேஸ், கொழும்பு 2.
பக்ஸ்: 011 5333494 மின்னஞ்சல்: sanjeewas@bartleet.com
இணையதளம்: www.bartleetgroup.com





## நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் அடகுச்சேவை

- 365 நாள் வங்கிச் சேவை
- நீடித்த வங்கி நேரங்கள்
- அதிகபட்ச பாதுகாப்பும் நம்பகத்தன்மையும்
- முன்னறிவித்தல் இன்றி மீட்கலாம்
- பகுதி பகுதியான மீட்பு வசதி

யாழ்ப்பாணக் கிளை: 35, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 4 920 283 - 5

அடகுச்சேவை வவுனியா மற்றும் மட்டக்களப்பிலும் பெற்றுக்கொள்ளலாம்

Nations Trust Bank
Nations
Gold Advances

# SONDERVERKAUF!

Möbel Ferrari
Kleine Preise
Grosse Auswahl

Polstergruppe Linde
Textil-Leder schwarz





590.-
statt 1290.-

Wohnwand Danos,
Nussbaum Nb. / schwarz





475.-
statt 650.

www.moebel-ferrari.ch

HINWIL Wässeristrasse 28
Tel. 044 931 20 40

Täglich offen von 9.00 bis 20.00 Uhr

Direkt-Kedit -
6 Monate ohne Zins